Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 17 ஞாயிற்றுக்கிழமை (03.11.2013) பக்கங்கள் 20 ஓசை - 034



## ஊடகப் பணிகளுக்கு தடை விதிக்காது அரசு

(கொழும்பு)

கொழும்பில் இந்த மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு தொடர்பான செய்திகளை சேகரிக்க வரும் சர்வதேச ஊடகவியலாளர்களுக்கான விசாக்கள் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி வழங்கப்படும் என இலங்கை அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

மாநாடு நடைபெற இன்னும் இரண்டு வாரங்களே உள்ள நிலையில் மாநாடு தொடர்பான செய்திகளை சேகரிக்கும் நோக்கில் இலங்கைக்கு வருவதற்கு விசாக் கோரி விண்ணப்பித்த ஊடகவியலாளர்களுக்கு இதுவரை விசா வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

இது தொடர்பாக கொழும்பில் ஊடகவியலாளர்களின் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, மாநாடு தொடர்பான செய்திகளை சேகரிக்க வரும் சர்வதேச ஊடகவியலாளர்களுக்கு கட்டுப்பாடுகள் எதுவும் விதிக்கப்பட மாட்டாது என்று கூறினார்.

இலங்கையின் கொலைக் களம் என்ற சர்ச்சைக்குரிய

(19) ஆம் பக்கம் பார்க்க

## வியட்னாம் வர்த்தகத் தூதுக்குழு விரைவில் கொழும்புக்கு

(கொழும்பு)

வியட்னாம் நாட்டின் வர்த்தகத் தூதுக்குழு ஒன்று இம்மாத இறுதியில் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளது.

வர்த்தக நடவடிக்கைகளுக்கான வாய்ப்புகளை ஆராயும் நோக்கில் வியட்நாமின் 15 நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்த மாதம் கொழும்பு வரவுள்ளன.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தை மேற்கோள்காட்டி, த பிஸ்னஸ் ஒன்லைன் இணையத்தளம் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இந்தப் பிரதிநிதிகள் குழு எதிர்வரும் 18 ஆம் திகதி, இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் உறுபினர்களை சந்திக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது இலங்கையில்

(19) ஆம் பக்கம் பார்க்க

# வெளிநாட்டுத் தலைவர்கள் யாழ். செல்ல தடையில்லை

(கொழும்பு)

பொதுநலவாய மாநாட்டுக்காக கொழும்புவரும் வெளிநாடுகளின் அரசுத் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் யாராக இருந்தாலும் யாழ்ப்பாணம் சென்று உண்மை நிலைமைகளை நேரில் அறியலாம் என்றும் அவர்களுக்கு எந்தவித தடையும் விதிக்கப்படமாட்டாது என்றும் பாதுகாப்புச் செயலர் அறிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து சர்வதேச நீதிவிசாரணை ஒன்றை நடத்த வேண்டும் என்று சர்வதேச அரங்கில் பிரசாரங்களைச் செய்து வருபவர்கள் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெமரூன் தமது இலங்கை விஜயத்தின் போது யாழ். குடாநாட்டிற்கு செல்லும் சந்தர்ப்பத்தில் தங்களின் இந்தப் பிரசாரத்தை மீண்டும் வலியுறுத்தக்கூடிய



வகையில் போலியான ஆதாரமற்ற தகவல்களை அவருக்கு எடுத்துரைக்கும் வாய்ப்பு அவர்களுக்கு இருப்பதாக பாதுகாப்பு செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

30 ஆண்டுகால யுத்தத்தின் போது இடம்பெற்ற நிகழ்வுகளைப் பயன்படுத்தி எல்.ரி.ரி.ஈ. ஆதரவாளர்கள் இராணுவத்தின் மனித உரிமை மீறல்கள் குறித்து பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்கு ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்துவதாகவும் அவர் கூறினார்.

எனினும் பிரிட்டிஷ் பிரதம மந்திரி மட்டும் அல்ல எந்தவொரு வெளிநாட்டுத் தலைவரும் யாழ். குடாநாட்டுக்குச் செல்லவிரும்பினால், அவர்களுக்கு

(19) ஆம் பக்கம் பார்க்க

## இந்தியக் கடல் எல்லையில் இலங்கை மீனவர்கள் கைது

(கொழும்பு)

இந்தியக் கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கை மீனவர்கள் 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆந்ரா கிருஷ்ணபட்டிணம் பிரதேசத்தில் வைத்து இம் மீனவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். மூன்று படகுகளில் சென்ற மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் படகுகள் இந்தியக் கடற்பரப்பு சட்டம் 1981 ஆம் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படவுள்ளனர். கடந்த மாதம் 10 ஆம் திகதி இலங்கை மீனவர்கள் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## ஜே.வி.பி.யில் மறுசீரமைப்பு

(கொழும்பு)

அடுத்த ஆண்டு நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் பல்வேறு தேர்தல்களை எதிர்கொள்வதற்கு வசதியாக ஜே.வி.பி. கட்சி தன்னை மறுசீரமைத்துக்கொள்ளவிருக்கிறது.

இதற்காக தேசிய அரசியல் ஈடுபாடு தொடர்பில் ஜே.வி.பி. பல்வேறு மாற்று செயற்பாடுகளை மேற்கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார். அடுத்த வருடம் முதல், ஜே.வி.பி.யின் அரசியல் செயற்பாடுகளை விஸ்தரிக்கும் வகையில், பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதன் ஒரு கட்டமாக, மேல் மாகாண சபைத் தேர்தலுக்கான முதலமைச்சு வேட்பாளராக, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த நியமிக்கப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

08



கர்ப்பம்

12



பகிர்தல்

18



சர்ச்சையில்

## மின்னல் தாக்குதல்; இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

மின்னல் தாக்குதல் காரணமாக நேற்று காலியில் 15 வயது சிறுவன் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர்.

காலி வந்துரப கீழ்ப் பிரிவில் மரமொன்றிற்கு அடியில் நின்றுகொண்டிருந்த இரண்டு சிறுவர்கள் மின்னல் தாக்கத்திற்கு இலக்காகியிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். மின்னல் தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற் றைய சிறுவன் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, பொத்தல மீபாவல பகுதியிலும் மின்னல் தாக்கத்திற்கு இலக்கான 57 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த நபர் நேற்று மாலை மின்னல் தாக்கத்திற்கு இலக்கானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கடலில் மூழ்கி ஜேர்மன் பிரஜை பலி

(கொழும்பு)

திக்வெல்ல கடற்பகுதியில் நீராடச் சென்ற ஜேர்மன் பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

34 வயதான குறித்த ஜேர்மன் பிரஜை, கடந்த 29 ஆம் திகதி தனது தாய் மற்றும் இரு நண்பர்களுடன் கொழும்பு வந்துள்ளார். மஹவெல வீதி, திக்வெல்ல பகுதியிலுள்ள ஒரு சுற்றுலா ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த இவர், நேற்றையதினம் இந்த விபத்தில் சிக்கியுள்ளார்.

## கட்டண அதிகரிப்பு; வடக்கில் தளர்வு

(மன்னார்)

பஸ் கட்டண அதிகரிப்பு பயணிகளின் நன்மைகருதி வடக்கில் முழுமையாக அமுல்செய்யப்படவில்லை. குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் இந்த தளர்வு நிலை உள்ளது.

போக்குவரத்து அமைச்சினால் அமுலாக்கப்பட்டுள்ள மேற்படி 7 வீத பஸ் கட்டண அதிகரிப்பு வட மாகாணத்தில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மக்கள் நலன்கருதியே பஸ் கட்டண அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படவில்லை என மன்னார் மாவட்ட தனியார் பேருந்து சங்கத் தலைவர் தர்மலிங்கம் ரமேஷ் தெரிவித்தார்.

## கச்சாயில் வாள்வெட்டு; ஆறு பேர் படுகாயம்

### போதை மயக்கத்தில் மோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சாவகச்சேரியில் இடம்பெற்ற குழு மோதலில் பெண்கள் உட்பட அறுவர் படுகாயமடைந்துள்ளனர்.

சாவகச்சேரி நகரிலுள்ள மதுபானசாலையில் தீபாவளி கொணடாட்டத்தின் போது, நண்பர்கள் குழாத்திடையே பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற வாய்த் தர்க்கம், அடிதடியாக மாற, அதில் இளைஞர் ஒருவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில், பிற்பகல் 5.30 மணியளவில் காயமடைந்தவரின் நண்பர்கள், தாக்குதலை மேற்கொண்டவர்களின் பகுதியான கச்சாய் முருகமூர்த்தி கோவிலடிக்குச் சென்ற வேளையில் இரு

(19) ஆம் பக்கம் பார்க்க

## சங்கக்கார இன்று யாழ். நகரில்



(யாழ்ப்பாணம்)

இலங்கை அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார இன்றைய தினம் காலை யாழ்ப்பாணத்திற்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

முரளி நல்லிணக்க ருவென்ரி - 20 போட்டித் தொடர், கிளிநொச்சி, மாங்குளம், ஒட்டுசுட்டான், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டித் தொடரில் வட-கிழக்கைச் சேர்ந்த பல அணிகள் மோதுகின்றன. கடந்த 1ஆம் திகதி முதல் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரின் மூன்றாம் நாள் இன்றாகும்.

இன்றைய தினம் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ள போட்டிக்கு

(19) ஆம் பக்கம் பார்க்க







நெல்லியடி வட்ட லயன்ஸ் கழக 2 ஆவது பதவியேற்பு வைபவத்தில் லயன்ஸ் எஸ்.ஸ்ரீபவனால் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்து பதவிகளை ஏற்றுக்கொள்வதையும் புதிய உறுப்பினர்களாக இணைந்த பி.பிரகலாத் கௌரவிக்கப்படுதையும் காணலாம். (01)

# மாதர் சங்க தகராறு; சமூக தீர்வுக்கு ஏற்பாடு

முல்லைத்தீவு மாவட்ட கரைத்துரைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முள்ளியவளை முதலாம் வட்டாரம் கிராம அலுவர் பிரிவிலுள்ள மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தில் ஏற்பட்ட பிணக்கு பொலிஸ் நிலையம் வரை சென்றுள்ளது.

குறித்த மாதர் அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த மேமாதம் நடைபெற்றது.

எனினும் இதுவரை காலமும் புதிய நிர்வாகத்தினர் உரிய ஆவணங்களோ சங்கத்திற்குரிய சொத்து விபரங்களையோ கையளிக்காமையால் புதிய நிர்வாகத்தினர் மீது பழைய நிர்வாகத்தினர் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இது தொடர்பாக எதிர்வரும் வாரத்தில் கிராமத்தில் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தி உரிய விசாரணை மேற்கொண்டு பிரச்சினைக்கு திர்வு காணப்படும என முள்ளியவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (125)

# கல்வியங்காட்டில் திருடர் தொல்லை
# கடைகள் உடைத்து திருட்டு

(திருநெல்வேலி)

கல்வியங்காடு பருத்தித்துறை வீதியில் சட்டநாதர் சிவன் கோயிலுக்கு அண்மித்ததாக இரண்டு வர்த்தக நிலையங்களும், நல்லூர் சட்டநாதர் வீதியில் ஒரு வர்த்தக நிலையமும் நேற்று முன்தினம் இரவு திருடர்களினால் உடைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை வீதியில் இரண்டு கடைகளின் பூட்டுகளை உடைத்த திருடர்களினால் உள்ளே நுழைய முடியாமல் போனமையினால் அவர்களது முயற்சி தோல்வியில் முடிந்தது. ஆனால் ஒரு கடைக்குக் காவலாக இருந்த நாயொன்று திருடர்களினால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளது.

சட்டநாதர் வீதியில் இருந்த கடையின் பூட்டுக்களை உடைத்துக் கடைக்குள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பத்துக் கிலோ அரிசி மூடைகள், அங்கர் பால் மா பக்கெட்டுக்கள், டெலிபோன் கார்ட்டுக்கள், சலவைப் பவுடர்கள், சோடாக்கள், சொக்லேட்டுக்கள் போன்ற இதர பொருட்களையும் திருடிச்சென்றுள்ளனர். இந்தக் கடையில் முன்னரும் சில தடவைகள் திருட்டு போயுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நல்லூர் கோவில் வீதியிலுள்ள புத்தகம் செய்து வந்த வர்த்தகர் ஒருவர் சில நாட்களுக்கு முன்னர் வர்த்தக நிலையத்தை மூடி விட்டு விட்டுக்கு சென்றுகொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரைத் தாக்கி விட்டு அவரது கையிலிருந்து பையை பறித்துச் செல்ல முற்பட்ட போது இவருடன் கூடவே வந்தகடைச் சிப்பந்தி ஒருவர் கத்திக் கூச்சலிட்டதினால் அயலவர்கள் கூடவே திருடர்கள் ஓடித்தப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (137)

# முறை தவறிய வர்த்தகம்; வியாபாரத்தில் பாதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைத்துரைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முள்ளியவளை தண்ணீரூற்று ஆகிய பொதுச் சந்தைகளில் வெளியிடங்களிலிருந்து வந்து வியாபாரத்தை மேற்கொள்ளும் வியாபாரிகளால் சங்தை வியாபாரிகள் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பொதுச் சங்தைகளில் 50 இற்கும் மேற்பட்ட மரக்கறி வியபாரிகள் தமது வியாபார நடவடிக்கைகளை நாளாந்தம் மேற்கொண்டு வரும் நிலையில் இந்தப் பிரதேசங்களிலுள்ள கிராமங்களிலிருந்து வருகை தரும் நடமாடும் மரக்கறி வியாபாரிகளால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக சந்தை வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே இந்த விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (125)







நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 201 | திகதி 2013.11.01 | வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள்

21 23 40 51 P

பரிசுத் தொகை ரூபா.10,864,020/-/வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| [illegible] | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| [illegible] | 50,000/- | 05 | 250,000/- |
| [illegible] | 1,000/- | 201 | 201,000/- |
| [illegible] | 1,000/- | 376 | 376,000/- |
| [illegible] | 60/- | 9034 | 542,040/- |
| [illegible] | 40/- | 4696 | 187,840/- |
| [illegible] | 20/- | 118729 | 2,374,580/- |
| [illegible] | 20/- | 17330 | 346,600/- |
| [illegible] | 10,864,020/- | | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,278,060/- |

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 11,096,160/-

2013.11.05ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும். நியத்த ஜய

அபிவிருத்தி லொத்தர் சபை

தொலைபேசி 011 2333446/47 (C/3186) web : www.dlb.lk


# மாணவன் காயம்

ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளில் பின்புறமாக இருந்து பயணித்த மாணவன் ஒருவன் மோட்டார் சைக்கிள் சில்லுக்குள் காலை விட்டதன காரணமாக காலில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கச்சேரி ஆசிர்வாதம் வீதியில் வசிக்கும் ஐந்தாம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவன் சுஜிதரன் (வயது 13) என்ற மாணவனே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

நேற்று தீபாவளி தினமாகியதால் கோவிலுக்குச் சென்று விட்டு தந்தையுடன் மோட்டார் சைக்கிளில் வீடு திருடிச் சென்றுகொண்டிருக்கையிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றிருப்பதாக யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

# நூலகர்களுக்கு பாராட்டு



யாழ்ப்பாணம்)

தேசிய மரபுரிமை அமைச்சின் தேசிய நூலக ஆவணமாக்கல் சபையினால் 2012 ஆம் ஆண்டில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வில் சிறப்பாக செயற்பட்மைக்காக சாவகச்சேரி பிரதேச சபையின் கீழ்வரும் கைதடி, நாவற்குழி, சரசாலை, மிருசுவில், வரணி ஆகிய நூலகங்களின் நூலகர்கள் அண்மையில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு கொழும்பு 07 இலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியின் மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அமைச்சர் சரத் ஏக்கநாயக்க பிரதி அமைச்சர் துமிந்த திசநாயக்க ஆகியோர் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினார்கள். (90)

# பிரதேசத்தின் கலைகள் வளர்வதற்கு மன்றங்களின் செயற்பாடு அவசியமானது

## மன்னார் நகரம் பிரதேச செயலர்

(யாழ்ப்பாணம்)

ஒரு பிரதேசத்தின் கலை, பண்பாட்டு விழுமியங்களைப் பறைசாற்றுவதற்கும், பேணிப் பாதுகாப்பதற்கும் அப்பிரதேசத்திலுள்ள மன்றங்கள் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும் என மன்னார் நகரம் பிரதேச செயலர் காரை எஸ்.தயானந்தா தெரிவித்தார்.

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடாத்திய கலைவிழாவிலும், பரிசளிப்பு விழாவிலும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் கிழவன்காடு கலாமன்றத்தின் தலைவர் என்.சோதிநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

1991 ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்குப் பினனர் 75,000 மக்கள் வசிக்கவேண்டிய காரை நகரில் 10,000 இற்கும் குறைவான மக்களே தற்போது வாழ்ந்து வருகிறார்கள். குறைந்தளவு மக்கள் மத்தியில் கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் கிழவன்காடு கலா மன்றத்தை அமைத்து இத்தனை கலைஞர்களை உருவாக்கியமை பெரிய ஒரு சாதனை என்றுதான் கூறவேண்டும்.

தலைவர் சோதிநாதனும் மன்ற உறுப்பினர்களும் பாராட்டுக்குரியவர்கள். பக்க பலமாக இன்று பெருமளவு பண உதவி புரிந்து ஊக்குவித்து வரும் புரவலர் அண்ணன் சிவஞானம் என்றும் போற்றுதற்குரியவர். இவ்வாறு பிரதேசத்தின் கலை பண்பாடுகளை வளர்க்க மன்றங்கள் சிறந்த செயற்பாடுகளை செய்ய வேண்டும் என அவர் குறிப்பிட்டார். கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.கண்ணதாசன் உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர்.

# கருவி சமூகவள நிலையத்தால் போட்டிகள் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையத்தால் கவிதை, கட்டுரை, சிறுகதை மற்றும் ஓவியப் போட்டிகள் நடாத்தப்பட உள்ளன.

இப்போட்டிகள் தரம் ஒன்பதிலிருந்து உயர்தரம்(A/L) வரையான பாடசாலை மாணவர்களுக்குரியதாகவும், பொது மக்களுக்குரியதாகவும் என இரண்டு பிரிவுகளாக நடாத்தப்படவுள்ளன.

மாணவர்களின் கட்டுரைக்கான தலைப்புக்களாக

மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டில் கல்வியின் முக்கியத்துவம், மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளும், கடமைகளும், மாற்றுத் திறனாளிகளின் உபகரணங்களும் அதன் பயன்பாட்டில் உள்ள உபகரணங்களும் அதன் பயன்பாடுகளும் என்பனவாகும.

பொதுமக்களுக்கான தலைப்புகளாக மாற்றுத்திறனாளிகளின் விருத்தியில் சமூகமயமாக்கல் நிறுவனங்களின் பங்கும் பணியும், மாற்றுத்திறனாளிகள் தொடர்பாக மாறிவரும் அணுகுமுறைகள், அபிவிருத்தியில் மாற்றுத்திறனாளிகள் என்பனவாகும்.

போட்டிக்குரிய நிபந்தனைகளாக,

பாடசாலை மாணவர்களுக்கு கட்டுரைகள் 750 சொற்களுக்கான குறையாமலும், 1000 சொற்களுக்கு மேற்படாமலும் அமைதல் வேண்டும்.

பொதுமக்களுக்கான கட்டுரைகள் 1500 சொற்களுக்கு குறையாமலும் 2000 சொற்களுக்கு மேற்படாமலும் அமைதல் வேண்டும்.

A4 தாளில் ஒருபக்கத்தில் தெளிவான கையெழுத்தினாலோ அல்லது கணனிப் பதிப்பாகவோ அமைதல் வேண்டும்.

கவிதைப் போட்டியில்

மாற்றுத்திறனாளிகளுடன் தொடர்புபட்ட கருப்பொருட்களை உள்ளீர்த்தவையாக அமைதல் வேணடும். கவிதை மரபுக் கவிதைகளாகவோ அல்லது புதுக் கவிதைகளாகவோ அமையலாம். கவிதை 40 வரிகளுக்கு மேற்படாமல் அமைதல் வேண்டும். கவிதையின் உட்பொருளுக்கு அமைவாக தலைப்பு இடப்படுதல் வேண்டும்.

சிறுகதைப் போட்டியில்

மாற்றுத்திறனாளிகளுடன் தொடர்புபட்ட கருப்பொருடகளை உள்ளீர்த்தவையாய் அமைதல் வேண்டும், பாடசாலை மாணவர்களுக்கு மட்டும் 500 சொற்களுக்கு குறையாமலும் 700 சொற்களுக்கு மேற்படாமலும் அமையலாம்.

பொதுமக்களுக்கான சிறகதை 1000 சொற்களுக்கு குறையாமலும் 1250 சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

A4 தாளில் ஒரு பக்கத்தில் அமையக்கூடியவாறு கையெழுத்துக்களாகவோ அல்லது கணனிப் பதிப்பாகவோ அமையலாம்.

சித்திரப் போட்டியில் மாற் றுத்திறனாளிகளின் வாழ்வியலைச் சித்தரிக்கும் வகையில் சித்திர வடிவமைப்பு அமைதல் வேண்டும். கருத் தாளம் மிக்க படங்கள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும்.

போட்டியில் ஒருவர் எத்தனை ஆக்கங்களையும் அனுப்பி வைக்க முடியும். பாடசாலை மாணவர்களின் ஆக்கங்கள் யாவும் அவர்களது சொந்த ஆக்கங்கள் என அதிபரினாலும் பொது மக்களது ஆக்கங்கள் யாவும் சமாதான நீதவான் ஒருவராலும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

ஆக்கங்கள் யாவும் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் யாவும் கருவி மாற றுத்திறனாளிகள் சமூக வள நிலையத்தால் நடாத்தப் பட இருக்கும் சர்வதேச மாற்று வலுவுள்ளோர் தினத்தன்று வழங்கப்படும் என நிலையத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

## அதிபர்களுக்கு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கான பௌதீக வள ஆய்வு தொடர்பான கூட்டம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ் முகாமைத்துவ நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் அறிவித்துள்ளார்.




தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மானிப்பாய் பொது நூலகத்தினால் பாடசாலை மாணவர்களுக் கிடையே போட்டிகள் நடத்தப்பட்டபோது...

(48)




# பொறுப்பற்று நடக்கும் "செல்லக் கண்ணுகள்"

நேரம் காலை 8.00 மணி. கிளிநொச்சி காக்கா கடைச் சந்தியில் இருபதுக்கு குறையாத ஆட்களைக் கொண்ட ஒரு குழுவினர் தினமும் சிரித்து பம்பலடித்துக் கொண்டு நிற்பதைக் காணுவேன். எல்லாமே பளிச்சென்ற முகங்கள். அனேகமாக எல்லோரும் 35 வயதுக்குட்பட்டவர்கள்.

எங்கோ கோயில் திருவிழாவுக்கு அல்லது ஏதாவது கொண்டாட்டத்திற்கு போவதற்காக நிற்பதைப் போல எழுச்சியாக நிற்பார்கள்.

இவர்கள் யாராக இருக்கும் என்று அருகில் உள்ள கடைக்காரரிடம் விசாரித்தேன்.

அவர் சொன்னார், "இதெல்லாம் யாழ்ப்பாணத்தில் இருந்து வாற ரீச்சர்மார். வட்டக்கச்சி, இராமநாதபுரம், பன்னங்கண்டி பக்கத்தில் இருக்கின்ற பள்ளிக்கூடங்களுக்கு போறதுக்காக நிற்கினம்" என்று.

"அப்படியெண்டால் இந்தப் பள்ளிக்கூடங்களெல்லாம் எத்தனை மணிக்கு ஆரம்பமாகுது?" என்று அவரிடம் கேட்டேன்.

"அதையெல்லாம் கேட்காதையுங்கோ. வன்னிப் பள்ளிக்கூடங்கள் எத்தினை மணிக்கு ஆரம்பிச்சால் என்ன? விட்டால் என்ன? அதைப் பற்றி ஆருக்கு கவலை? ஏதோ வாறார்கள் போறார்கள். இதுகளைப் பற்றி கதைக்கப்போனால், படிப்பிக்கிற வாத்திமாரும் பேசாமல் விட்டிடுவாங்கள். பிந்தி வந்தாலும் நாலு பாடமாவது படிப்பிச்சால் பறவாயில்லை எண்டுதான் சனங்கள் நினைக்குதுகள். இதைவிட வேற என்ன செய்யலாம்?" என்று என்னிடமே திருப்பிக் கேட்டார் அவர்.

"ஏன், இதை பாக்கிறதுக்கு கல்வி அதிகாரிகள் கிடையாதா? அல்லது இதைப் பற்றி பேசி ஒரு ஒழுங்குக்கு கொண்டுவர யாராலும் முடியாதா?" என்று அவரிடம் திருப்பிக் கேட்டேன்.

வாயை மூடுமாறு எனக்கு கையைக் காட்டினார்.

கிளிநொச்சி காக்கா கடைச் சந்தியில் மட்டுமல்ல, பரந்தனில், மாங்குளத்தில், கரடிப்போக்குச் சந்தியில், மல்லாவியில், பூநகரியில் என வன்னியின் பெரும்பாலான சந்திகளில் காலை நேரத்தில் ஆசிரியர்கள் இப்படி நிற்பதைக் காணலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்தே இந்த ஆசிரியர்கள் வருகிறார்கள்.

வன்னியில் நடந்த போரும், ஏற்கனவே பிற்படுத்தப்பட்ட பிரதேசமாக வன்னி இருந்ததாலும் போதிய ஆசிரியர் வளத்தை வன்னியினால் உருவாக்க முடியவில்லை.

இதனால் யாழ். குடாநாட்டின் ஆசிரியர் வளத்தை நம்பியே வன்னி மாவட்டங்கள் காத்திருக்கின்றன. அதாவது யாழ். குடாநாட்டில் தங்கியிருக்க வேண்டிய நிலை.

ஆகவே, யாழ். குடாநாட்டில் இருந்துவரும் ஆசிரியர்களை எதிர்பார்த்திருக்கும் வன்னி, அவர்கள் என்ன செய்தாலும், எப்படி நடந்தாலும் அதையெல்லாம் சகித்துக்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது.

இதை தமக்கான வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்கின்றனர் யாழ்ப்பாண ஆசிரியர்கள். ஆனால் வன்னி மாவட்ட ஆசிரியத் தேவைகளை நிரப்பும் முகமாகவே யாழ். குடாநாட்டில் உள்ளவர்களுக்கான ஆசிரியர் நியமனம் கிடைத்தது என்பதை இவர்கள் உணரவில்லை.

உண்மையில் இவர்கள் அனைவரும் இளவயதினர். வெளி மாவட்டங்களில் – குறிப்பாக வன்னியில் – வேலை செய்வதை ஒரு பாக்கியமாக கொள்ள வேண்டியவர்கள்.

வன்னியில் பாதிப்புக்களைப் பற்றியும், வன்னி மக்களைப் பற்றியும் கவலைப்பட்டுக் கதைப்பவர்கள்.

தற்போது இவர்கள் படிப்பிக்கின்ற பாடசாலைகளில் தங்குமிட வசதிகளும் தாராளமாக உண்டு.

பல பாடசாலைகளில் மின்சார வசதியும் உள்ளன. சட்டரீதியாக இவர்கள் வேலை செய்யும் பிரதேசத்திலேயே தங்கி நிற்க வேண்டியவர்கள்.

இப்படியெல்லாம் இருந்தும் "இந்தச் செல்லக் கண்ணுகள்" பொறுப்பற்ற விதமாக, கேட்பாரற்ற விதமாக நடந்துகொள்கிறார்கள்.

இது மாணவர்களுக்குச் செய்யும் மிகப் பெரிய உரிமை மீறலாகும். வட மாகாண கல்வி அமைச்சரின் கவனம் இவர்கள் மீது எப்போது திரும்பும் என்று கேட்கின்றார்கள் வன்னி மக்களும், வன்னி மாணவர்களும்.

இதேவேளை யாழ். குடாநாட்டில் இருந்து வேளையோடு வந்து நேரம் பிந்திச் செல்லும் ஆசிரியர்களையும் அவர்களுடைய அர்ப்பணிப்பான சேவையையும் நாம் பாராட்டுவோம்.

பிறரிடம் உள்ள நூறு குறைகளைச் சுட்டிக்காட்டுவதைவிட நம்மிடம் இருக்கும் ஒரு குறையையாவது போக்க வேண்டும்.
-புத்தர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## ஆயுளை நீடிக்க உணவைக் குறை!

மனிதர்கள் பழக்கத்திற்கு அடிமையானவர்கள். குடி, சிகரெட் என்று தீய பழக்கங்கள் மட்டும் அவனை அடிமைப்படுத்துவதில்லை. நல்ல பழக்கங்கள், நல்லதோ தீயதோ ஏதென்று தெரியாத பழக்கங்கள் போன்றவற்றையும் கூட தொடர்ந்து செய்து வந்துவிட்டால் அதை நிறுத்த முடியாமல் செய்துகொண்டிருப்பது மனிதர் வழக்கம்.

நம் சிந்தனையும் அப்படித்தான். பழகிய சிந்தனைகள் நம்பிக்கைகளிலிருந்தும் மீள முடியாமல் பெரும்பாலும் அதற்குள் வட்டமடித்தே வாழ்ந்து முடித்துவிடுகிறோம். நாம் சிந்திக்கும் தடத்தை மாற்ற முடிவதில்லை அல்லது மாற்ற விரும்புவதில்லை. பழகிய பாதையிலேயே போய்க்கொண்டிருப்போம். புதிய பாதைகளில் திரும்பி நடப்பவர்களைப் பார்த்தாலே நமக்கு ஒவ்வாமைதான் வருகிறது.

பழகியதிலிருந்து நம்மால் மீள முடிவதில்லை. நம் உணவுப்பழக்கம் கூட அப்படித்தான். காலை, மதியம், இரவு என்று மூன்று வேளை சாப்பிடுவதென்று பழக்கப்பட்டிருக்கிறோம். பழக்கப்பட்டதாலேயே அந்தந்த நேரத்திற்குப் பசியெடுப்பதும் பழக்கமாகிவிட்டது. இப்போது இதற்கும் ஆய்வு நடத்தி விட்டார்கள். இப்படித்தான் சாப்பிட வேண்டும் என்ற எந்த ஒரு கட்டாயமும் மனிதருக்கில்லை என்கிறது அந்த ஆராய்ச்சி.

"உயிர் வாழ வேண்டுமானால் தினமும் மூன்று வேளை சாப்பிட வேண்டும் என்று நம்பிக் கொண்டிருக்கிறோம். அப்படி எந்த அவசியமும் கிடையாது; மூன்று வேளை சாப்பிட்டு பழகி விட்டோம், அவ்வளவுதான்" என்று இதுபற்றி ஆய்வு செய்த அந்த விஞ்ஞானி கூறுகிறார்.

பிறகு எத்தனை வேளை சாப்பிட வேண்டும்? எத்தனை முறை என்ற கணக்கெல்லாம் இல்லை. எவ்வளவு குறைவாக சாப்பிடுகிறோமோ அவ்வளவுக்கு நல்லது என்கிறார் மைக்கல் மோஸ்லி என்ற இந்த விஞ்ஞானி. அவர் சொல்கிற காரணங்கள் மறுக்கக்கூடியதாக இல்லை.

உடல் உறுப்புகள் செயற்பட சக்தி தேவை. அதை வழங்குவது நாம் சாப்பிடும் உணவு. அதில் மாப்பொருள், புரதம், கொழுப்பு ஆகியவை இருக்கின்றன. உணவு சமிபாடடையும் போது இந்த சத்துக்கள் உடலின் இயக்கத்துக்கு எரிசக்தியாக மாறுகிறது. அதிகமான சத்துக்கள் கிடைக்கும்போது உடலில் பல பிரச்சினைகள் உண்டாகிறது என்கிறார் மோஸ்லி.

இந்த சத்துக்கள் கலோரி அளவால் அளவிடப்படுகிறது. ஒரு கிராம் புரதம் அல்லது மாப்பொருளில் 4 கலோரி என்றால் கொழுப்பில் 9 கலோரி. நிறைய சாப்பிடும்போது கலோரிகள் அதிகமாகும். உடலின் தேவைக்கு மேலதிகமான கலோரிகள் கொழுப்பாக மாறி உடலில் தங்கி தீங்கு விளைவிக்கும்.

கலோரிகள் குறைந்த உணவு வகைகளை சாப்பிடும் அமெரிக்கர்களும் ஜப்பானியர்களும் மற்றவர்களைவிட அதிக காலம் உயிர் வாழ்வதன் இரகசியம் இதுதான் என்கிறார் அவர். உடல் உழைப்பு, உடற்பயிற்சி இல்லாதவர்களுக்கு தேவைக்கு மீறிய உணவால் வரக்கூடிய ஆபத்து அதிகம். பசி எடுப்பதாக நினைத்துக் கொண்டு மூன்று வேளையும் சாப்பிடுபவர்கள் அந்தப் பழக்கத்தில் இருந்து வெளியே வரவேண்டும் என்கிறார் மோஸ்லி.

முடியாதவர்கள் அவ்வப்போது உண்ணாவிரதம் இருந்தால் நல்லது என்பது அவருடைய யோசனை. உள்ளெடுக்கும் கலோரி அளவுகளில் கவனம் செலுத்தினால் மூன்றுவேளை சாப்பிடுதலும் தேவையில்லை என்கிறார் முடிவாக.

- ஆசிரியர்

# நல்லிணக்கத்திற்காக அரசாங்கம் அயராது உழைக்கின்றது

## பிரதமர்

(கொழும்பு)

அதர்மத்தை தோற்கடித்து தர்மத்தினை நிலைபெறச் செய்ததை எடுத்தியம்பும் தீபாவளிப் பண்டிகையினை முன்னிட்டு இதயங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன் என பிரதமர் தமது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்

வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அனைத்து உயிரினங்களுக்கும் மட்டுமன்றி கடவுளுக்கு, முனிவர்களுக்குக் கூட தீங்கு விளைவித்துக்கொண்டிருந்த நரகாசுரனைத் தோற்கடித்த விஷ்ணுவின் அந்த தைரியமிக்க செய்கையானது இந்துக்களுக்கு மட்டுமன்றி அனைத்து உயிரினங்களின் வாழ்க்கை மீதும் ஏற்றிய ஒளியெனக் கூறலாம்.

தீபாவளிப் பெருநாளைக் கொண்டாடும் நீங்கள் அதர்மத்தைத் தோற்கடித்து தர்மத்தை நிலை நாட்டுவதற்குப் பாடுபடுங்கள்.

சமூகத்தில் இருளை நீக்கி ஒளியை ஏற்றுவதற்கு முனையுங்கள். சமாதானம் மற்றும் சௌபாக்கியத்திற்காக உங்கள் அளப்பரிய பங்களிப்பினை வழங்குங்கள் நன்மைக்காக பாடுபடும் போதுதான் நீங்கள் உண்மையிலேயே விஷ்ணுவைப் பின்பற்றுபவர்களாக மாறுவீர்கள் எனவும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழான எமது அரசாங்கம் முப்பது வருட காலமாக சீரழிந்து போயிருந்த சகஜ வாழ்க்கையை மீண்டும் சகஜ நிலைக்குக் கொண்டு வருவதற்கு பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

வடக்கு மற்றும் கிழக்கில் வாழ்ந்த இந்துக்களுக்கு மீண்டும் தாம் வாழ்ந்த பிரதேசங்களுக்குச் சென்று வாழ்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியமை மற்றும் அப்பிரதேசங்களில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்து செயற்படுத்தி வருவதனை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

எங்களுக்குத் தேவைப்படும் பௌதீக ரீதியான முன்னேற்றம் மட்டுமன்றி இனங்களுக்கிடையிலான நிரந்தர சமாதானம், நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வுடன் கூடிய ஆன்மிக ரீதியிலான அபிவிருத்தி என்பவற்றை ஏற்படுத்துவதற்காக ஜனாதிபதியின் தலைமையிலான எமது அரசாங்கம் தற்போது அயராது உழைக்கின்றது.

இந்தத் தீபாவளித் திருநாளில் குரோத்திற்குப் பதிலாக அன்பு, கருணை என்பவற்றைப் பரப்புவதே உங்கள் அனைவரதும் நோக்கமாக இருத்தல் வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

# 2014 இல் தேர்தல் குறித்து ஜனாதிபதி அறிவிக்கவில்லை

(மன்னார்)

பொதுத் தேர்தல் குறித்து ஜனாதிபதி அறிவிக்கவில்லை என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஆண்டில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளதாக ஜனாதிபதி இன்னமும் அறிவிக்கவில்லை.

பொதுத் தேர்தல் எதிர்வரும் ஆண்டில் நடைபெறவுள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. எனினும், இந்தத் தகவல்களில் உண்மையில்லை.

பொதுத் தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தல் குறித்து ஜனாதிபதி எந்தவிதமான பேச்சுவார்த்தைகளையும் நடத்தவில்லை என மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

# தொழிற்சங்கப் போராட்டத்திற்கு தயாராகின்றது ஜே.வி.பி.

(மன்னார்)

பாரிய தொழிற்சங்கப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட உள்ளதாக ஜே.வி.பி அறிவித்துள்ளது.

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் 21 முக்கிய கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் பொது வேலை நிறுத்தப் போராட்டமொன்று முன்னெடுக்கப்படும் என ஜே.வி.பி ஆதரவு அனைத்து கம்பனி தொழிலாளர் ஒன்றியத்தின் தலைவர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

வரவு - செலவுத்திட்டம் தயாரிப்பதற்கு யோசனைகளை சமர்ப்பிக்குமாறு அரசாங்கம் கோரியிருந்ததாகவும், 21 அம்சங்களைக் கொண்ட யோசனைத் திட்டமொன்று சமர்ப்பித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உழைக்கும் மக்களின் பெருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கிலேயே இந்த யோசனைத் திட்டங்கள் முன்வைக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளத் தவறினால் அரச, தனியார் பெருந்தோட்டத் துறை தொழிலாளர்களை ஒன்றிணைத்து பாரியளவில் பொது வேலை நிறுத்தமொன்றை முன்னெடுக்க நேரிடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# டெங்குநோயை கட்டுப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மழை காலம் தொடங்கியுள்ள நிலையில் வடமாகாணத்தில் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் முன்னேற்பாட்டு செயற்றிட்டத்தை ஆரம்பிக்கும் முகமாக வட மாகாண சுகா தார அமைச்சரினால் நேற்று முன்தினம் சுகாதார சேவை அதிகாரிகளுடன் வவுனியாவில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

வட மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் டெங்கு நோய் பரவுவதற்கு உள்ள சாத்தியப்பாடுகள், அதனை தடுப்பதற்கு மாவட்ட சுகாதார திணைக்களங்களில் உள்ள வளங்கள், டெங்கை கட்டுப்படுத்துவதற்கு மாவட்ட ரீதியாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் உட்பட சுகாதார நிலைமைகள் தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டது.

வவுனியா பிராந்திய சுகாதார பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் வட மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் உட்பட வட மாகாண சுகாதாரத் திணைக்களங்களின் தலைமை அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

# இருவார கால அவகாசத்துடன் தாதியர் போராட்டம் நிறைவு

(கொழும்பு)

தாதியர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவித் தாதியர்கள் இணைந்து மேற்கொள்ளும் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் நேற்றுக் காலை 7 மணியுடன் நிறைவுக்கு வந்தது.

எனினும் தமது கோரிக்கைக்கு இரண்டு வாரங்களில் உரிய தீர்வு கிடைக்கபெறவில்லை எனில், பாரிய தொழிற்சங்க போராட்டம் மேற்கொள்ளப்படும் என அனைத்திலங்கை தாதியர் சங்கத் தலைவர் சமன் ரத்னபிரிய குறிப்பிட்டார்.

மேலதிக சேவை நேரக் கொடுப்பனவு வழங்கப்படாமை உள்ளிட்ட ஆறு கோரிக்கைகளை முன்வைத்து, 17 தொழிற்சங்கங்கள் இணைந்து நேற்று அடையாளப் பணிப்புறக் கணிப்பை மேற்கொண்டனர்.

நேற்றுமுன்தினம் காலை 7 மணியளவில் ஆரம்பமான இந்த ஒரு நாள் அடையாள பணிப் புறக்கணிப்பு போராட்டம் நேற்றுக் காலை 7 மணிக்கு நிறைவுக்கு வந்தது.

# மக்களை அம்போ என்று கைவிடும் கூட்டமைப்பின் சுயநல அரசியல்

சங்கர சிவன்



வடமாகாண சபைத் தேர்தலுக்குப் பின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முக்கியஸ்தர்களின் உரைகளும் செயற்பாடுகளும் கூட்டமைப்பு தமிழ் மக்களை எங்கே கொண்டு போய் விடப்போகின்றது என்ற கேள்வியை எழுப்புகின்றது.

கூட்டமைப்புக்கு முந்திய தமிழ்த் தலைமையின் அரசியல் தவறுகள் இனப்பிரச்சினையின் தீர்வுக்குத் தடையாக இருந்தபோதிலும் தமிழ்மக்களின் நாளாந்தவாழ்வில் மோசமான பாதிப்பை ஏற்படுத்த வில்லை. கூட்டமைப்பு அரசியல் அரங்குக்கு வந்த பின்னர் தான் தமிழ்மக்களின் வாழ்வில் பாரதூர மான பாதிப்புகள் ஏற்படத்தொடங் கின. பெருந்தொகையான தமிழ் மக்கள் தங்கள் வாழ்புலங்களி லிருந்து வெளியேறி அகதி வாழ்க்கை வாழ்வதும் தமிழ்ப் பிரதேசங்களில் அதிகரித்த இரா ணுவப் பிரசன்னமும் தமிழ்மக்கள் வகைதொகையின்றி மரணத்தைத் தழுவிய நிலையும் கூட்டமைப்பின் வருகைக்குப் பிந்திய நிகழ்வுகள்.

இவற்றுக்கெல்லாம் அரசாங்கத் தின் செயற்பாடுகளே காரணம் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் பதில் கூற முற்படலாம். அரசாங் கத்தின் செயற்பாடுகளுக்கான தூண்டுதல் எங்கிருந்து வந்தது என்பதே பிரதான கேள்வி. இனப் பிரச்சினைக்கு நடைமுறைச் சாத்தியமான வழியில் தீர்வுகாண முயற்சிப்பதற்குப் பதிலாகப் புலி களின் நடைமுறைச் சாத்தியமற்ற தனிநாட்டுக் கொள்கையை ஏற்று இலங்கையின் ஆட்புல ஒருமைப் பாட்டுக்கு அச்சுறுத்தலான அணுகுமுறையைக் கூட்டமைப்புத் தலைமை பின்பற்றியதே தூண்டு தலாக அமைந்தது. எந்த விதத்தி லாவது இலங்கை பிளவுபடு வதை எந்தவொரு அரசாங்கமும் ஏற்றுக்கொள்ளாது. இவ்வாறு கூறுவது அரசாங்கத்தின் செயற் பாடுகளை நியாயப்படுத்துவ தாகாது. நடைமுறைச் சாத்திய மற்ற தீர்வை முன்னிலைப்படுத்தி அரசாங்கத்தைச் சீண்டுவது எதிர்விளைவுகளைக் கொண்டு வரும் என்பதைப் புரிந்துகொள்ள முடியாத தலைமை இவ்வாறான விளைவுகளுக்கே வழிவகுக்கும்.

கூட்டமைப்பு அரசியல் அரங்குக்கு வந்த பின்னர் தான் தமிழ் மக்களின் வாழ்வில் பாரதூரமான பாதிப்புகள் ஏற்படத் தொடங்கின. பெருந்தொகையான தமிழ் மக்கள் தங்கள் வாழ்புலங்களிலிருந்து வெளியேறி அகதி வாழ்க்கை வாழ்வதும் தமிழ்ப்பிரதேசங்களில் அதிகரித்த இராணுவப் பிரசன்னமும் தமிழ் மக்கள் வகைதொகை யின்றி மரணத்தைத் தழுவிய நிலையும் கூட்டமைப் பின் வருகைக்குப் பிந்திய நிகழ்வுகள். இவற்றுக் கெல்லாம் அரசாங்கத்தின் செயற்பாடுகளே காரணம் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் பதில் கூற முற் படலாம். அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கான தூண்டு தல் எங்கிருந்து வந்தது என்பதே பிரதான கேள்வி. இனப்பிரச்சினைக்கு நடைமுறைச் சாத்தியமான வழியில் தீர்வுகாண முயற்சிப்பதற்குப் பதிலாக நடை முறைச் சாத்தியமற்ற தனிநாட்டுக் கொள்கையை ஏற்று இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தலான அணுகுமுறையைக் கூட்டமைப்புத் தலைமை பின்பற்றியதே தூண்டுதலாக அமைந்தது. எந்த விதத்திலாவது இலங்கை பிளவுபடுவதை எந்தவொரு அரசாங்கமும் ஏற்றுக்கொள்ளாது. இவ்வாறு கூறுவது அரசாங்கத்தின் செயற்பாடுகளை நியாயப்படுத்துவதாகாது. நடைமுறைச் சாத்தியமற்ற தீர்வை முன்னிலைப்படுத்தி அரசாங்கத்தைச் சீண்டுவது எதிர்விளைவுகளைக் கொண்டுவரும் என்பதைப் புரிந்துகொள்ள முடியாத தலைமை இவ்வாறான விளைவுகளுக்கே வழிவகுக்கும்.

புலிகளின் தனிநாட்டு நிகழ்ச்சி நிரலை ஏற்றுக்கொண்ட நிலை யிலேயே சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்துக்கு கடைசி நேரத்தில் காலை வாரியதுதான் புலி களின் செயலாணைக்குக் கட்டுப்பட் டுக் கூட்டமைப்பு புரிந்த முதலாவது செயல். பிற்காலத்தில் தமிழ் மக்க ளுக்கு ஏற்பட்ட சகல பாதிப்புகளுக் கும் இது காரணமாகியது. அந்தத் தீர்வுத் திட்டம் நடைமுறைக்கு வந்தி ருந்தால் தமிழ் மக்களுக்கு நேர்ந்த அனர்த்தங்கள் நேர்ந்திருக்க மாட்டா.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன் னைய தமிழ்த் தலைமைகளின் பாரம் பரியத் தொடர்ச்சியாக உள்ள போதி லும் புலிகளின் தனிநாட்டு அரசியலு டன் தன்னை முழுமையாக இனங்காட் டியதன் மூலம்குணாம்ச ரீதியாக மாறு பட்ட நிலைப்பாட்டை மேற்கொண்டது. வட்டுக்கோட்டையில் தனிநாட்டுத் தீர் மானத்தை நிறைவேற்றிய தமிழர் விடு தலைக் கூட்டணி, செயற்பாடு என்று வந்தபோது தனிநாட்டைக் கைவிட்டு மாவட்ட சபைக்குக்கீழிறங்கிய வரலாற் றுக்குமுரணாகக்கூட்டமைப்பு புலிகளின் தனிநாட்டு அரசியலுக்குள் மூழ்கியது. கூட்டமைப்பின் இந்த நிலைப்பாடு அரசியல் தீர்வுக்குச் சாதகமான தென்னிலங்கைக் குரலைப் பலவீனப் படுத்தியதோடு, சாதாரண சிங்கள மக்களையும் அரசாங்கத்தையும் ஆத்திரமூட்டுவதாகவும் அமைந்தது. சுருக்கமாகக் கூறுவதானால் சிங்களக் கடுங்கோட்பாட்டாளர்கள் அரசியல் தீர்வுக்குச் சாதகமற்ற சூழ்நிலையைத் தென்னிலங்கையில் வளர்ப்பதற்கான வாய்ப்புகளைக் கூட்டமைப்பு ஏற்படுத் திக் கொடுத்தது.

புலிகளின் முள்ளிவாய்க்கால் தோல்வி வரை கூட்டமைப்பு அபிவிருத்தியை யும் உடனடிப் பிரச்சினைகளையும் பின்னுக்குத் தள்ளி இனப்பிரச்சினை யின் தீர்வை முன்னிலைப்படுத்தியது. அதாவது, தனிநாடு அமைப்பதற்கு முன்னுரிமை அளித்துச் செயற்பட்டது. புலிகளின் தோல்விக்குப் பின் முற்று முழுதான மாற்றத்தைப் பார்த்தோம். இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பின் னுக்குத் தள்ளி மற்றைய விடயங் களுக்குக் கூட்டமைப்பு முன்னுரிமை அளிக்கத் தொடங்கியது. இனப்பிரச் சினைக்கான அரசியல் தீர்வைத்தவிர்க் கும் இந்த முயற்சி தனிநாட்டு நிலைப் பாட்டைக் கைவிடாததன்வெளிப்பாடாக வும் இருக்கலாம். புலிகளின் அரசியல் முகமாகச் செயற்பட்ட காலத்தில் ஏற்படுத்திக் கொண்ட புலம்பெயர் உறவுகளின் அழுத்தமாகவும் இருக்க லாம். எவ்வாறாயினும் அரசியல் தீர் வைத் தவிர்ப்பதிலேயே கூட்டமைப்பு தொடர்ச்சியாக அக்கறை செலுத்தியது.

இந்தப் பின்புலத்திலேயே வடமாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு கள மிறங்கியது. நீண்ட காலமாக மாகாண சபையை நிராகரித்தவர்கள் மாகாண சபையின் மூலம் சில காரியங்களைச் செய்யலாம் என்ற பிரகடனத்துடனும் மாகாண ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் ஆர்வத்துடனும் வந்தார் கள். இதைப் பார்த்துக் கூட்டமைப்பு பழைய நிலைப்பாட்டிலிருந்து விடு பட்டுப் புதிதாகச் சிந்திக்கின்றது எனக் கருதியவர்களுக்கு ஏமாற்றமளிக்கும் விதத்திலேயே நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

மாகாண சபைத் தேர்தல் முடிந்ததும் இணக்க அரசியலுக்கான சில சமிக் ஞைகளை முதலமைச்சரும் சம்பந் தனும் வெளிப்படுத்திய போதிலும் நாளாவட்டத்தில் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியது. அரசியல் தீர்விலிருந்து மக்களைத் திசைதிருப் பும் வகையில் அர்த்தமற்ற நம்பிக்கை களை மக்களிடம் வளர்ப்பதும் புலிக- ளின் அரசியலுக்கு உயிரூட்டும் முயற் சிகளும் இடம்பெறத் தொடங்கின.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தியே தீருவேன் என்றும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தீர்மானித்தால் அவை ஒன்றிணைவதை எவராலும் தடுக்க முடியாது என்றும் முதலமைச் சர் பேசிய பேச்சுகள் அர்த்தமற்ற நம்பிக்கையை மக்களிடம் தோற்றுவிக் கின்றன அதேவேளை, விக்னேஸ்வரன் எல்லாம் வல்லவர் என்ற வீரவழிபாட் டுக்குக் கொண்டு செல்பவையாகவும் உள்ளன.

மாகாண சபைக்கு முழுமையான காணி அதிகாரத்தைப் பெற வேண்டு மானால், அரசியலமைப்பில் திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்பது நீதியரசருக்குத் தெரியாதிருக்க முடியாது. மக்களுக்கு அந்த உண்மை யைத் தெரிவிக்காமல் தன்னால் முடியும் என்ற பாணியில் பேசுகின்றார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தீர்மானித்தால் அவை ஒன்றிணைவதை யாராலும் தடுக்க முடியாது என்பதும் இதே கதை தான். மாகாணங்கள் தீர்மானித்தவுடன் அவை ஒன்றிணை வதற்கு அரசியலமைப்பில் இட மில்லை. அக்கம் பக்கமான இரண்டு மாகாணங்கள் ஒன்றிணைவதற்குத் தீர்மானிக்கும் பட்சத்தில் நாடாளு மன்றம் சட்டமொன்றின் மூலம் அத்தீர் மானத்தை நடைமுறைப்படுத்தலாம் என்பதுதான் பதின்மூன்றாவது திருத் தத்தின் ஏற்பாடு. அரசியலமைப்பின் 154 அ (3)வது சரத்து இதைத் தெளி- வாகக் கூறுகின்றது. நாடாளுமன்றம் விரும்பினால் அத்தீர்மானத்தை நடை முறைப்படுத்தலாம். விரும்பாவிட்டால் நடைமுறைப்படுத்தாமல் விடலாம். இதுதான் உண்மை நிலை.

நடைமுறையில் உடனடியாகச் சாத்திய மில்லை என்று கருதப்பட்ட விடயங் களைச் செய்து காட்டுவோம் என்று மக்களுக்கு நம்பிக்கையூட்டுவது அந்த நம்பிக்கையின் கிறுகிறுப்பில் மக்கள் இனப்பிரச்சினையை மறந்திருக்க வேண்டும் என்பதற்காகவே. இனப்பிரச் சினை பற்றிய சிந்தனையை மக்களின் மனங்களிலிருந்து அகற்றுவதற்காக வழமை போல வீதி ஆர்ப்பாட்டங் களையும் கூட்டமைப்புத் தலைவர்கள் ஏற்பாடு செய்வார்கள்.

இனப்பிரச்சினையை மக்களின் மனங் களிலிருந்து அகற்றுவதற்கான முயற்சி களை முன்னெடுக்கின்ற அதேவேளை, அரசியல் தீர்வுக்குச் சாதகமற்ற சூழ் நிலையைத் தென்னிலங்கையில்வளர்க் கும்வகையில் புலிகளின் அரசியலுக்கு வக்காலத்து வாங்கும் செயற்பாடும் மேற்கொள்ளப்படுகின்றது. தனிநாடு தான் எங்கள் இலக்கு என்று மாகாண சபையின் கன்னி அமர்வில் ஆற்றிய உரையும் மாவீரர் துயிலுமில்லங் களைப் பேணிப் பாதுகாக்க வேண் டும் என்று கூட்டமைப்பின் பிரதேச சபைகள் நிறைவேற்றிய தீர்மானமும் புலிகளின் தனிநாட்டு அரசியலை நினைவுபடுத்தும் உரைகளும் இனப் பிரச்சினையின் தீர்வுக்குக் குந்தகமான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்குப் பயன் படலாமேயொழியத் தமிழ் மக்களின் விமோசனத்துக்கு எவ்விதத் திலும் பயன்படப்போவதில்லை.

கூட்டமைப்பின் இப்போதைய நகர்வு களைக் கூர்ந்து அவதானிக்கையில், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர் வைப் புறந்தள்ளும் அதன் முன்னைய நிலைப்பாட்டையே இப்போதும்தொடர் கின்றது என்பதையும் மாகாண சபை யின் அதிகாரம் வேறு கட்சிகளுக்குச் சென்று அரசியல் தீர்வுக்கான முயற்சி மேற்கொள்ளப்படுவதைத் தவிர்ப்பதற் காகவே மாகாண சபையைக் கைப்பற்றுவதில் கூட்டமைப்பு ஆர்வம் காட்டியது என்பதையும் புரிந்துகொள்ள முடிகின்றது. கூட்டமைப்பின் இந்த நிலைப்பாடு தமிழ் மக்களை அம்போ என்று கைவிடுகின்றது.

# மகிழ்ச்சியும் புரிந்துணர்வும் சமூகத்தில் ஓங்கட்டும்



சமூகத்தில் மகிழ்ச்சியும், புரிந்துணர்வும் ஓங்கட்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தீயவற்றை நீக்கி நன்மையையும் அறியாமையை நீக்கி அறிவுடமையையும் இருளை நீக்கி ஒளியையும் வெற்றி கொள்வதை தீபத்திருநாள் அடையாளப்படுத்தி நிற்கிறது.

வழிபாடுகள்- ஆன்மீக வணக்கங்கள் மூலம் இலங்கை வாழ் இந்துக்கள் இந்த விசேட பண்டிகையை கொண்டாடுவதில் உலகெங்கிலும் உள்ள இந்து மக்களுடன் இணைந்து கொள்கின்றனர்.

அறியாமையிலிருந்து எழும் தீயவற்றை வெற்றி கொள்வதற்கு அறிவுடைமையையும் புரிந்துணர்வையும் அடைந்து கொண்டமைக்காக தெய்வங்களுக்கு தங்களது நன்றியை வெளிப்படுத்தும் முகமாக கோயில்களில் விளக்கேற்றி வீடுகளை விளக்குகளால் அலங்கரிக்கின்றனர்.

இது உலகின் சடப்பெறுமானங்களால் நிறைந்த மனித நடைமுறைகளைக் கடந்த இந்து சமயத்தின் உயர்ந்த ஆன்மீகப் பெறுமானங்களின் ஒரு கொண்டாட்டமாகும்.

இந்து சமயத்தின் சகல ஆன்மீகப் பெறுமானங்களினாலும் ஒதுக்கப்படும் வன்முறை மற்றும பகைமைகொண்ட மூன்று தசாபத கால போராட்டத்தின் பின்னர் புதிய நல்லிணக்க உணர்வில் வேற்றுமைகளைக் களைந்து சமூகங்களுக்கு மததியில் புரிந்துணர்வை வளர்த்து- சுபீட்சத்தை அதிகரிக்கும் தீபாவளி இந்துக்களுக்கான ஒரு முக்கிய நிகழவாகும்.

அன்புணர்வும் அர்ப்பணமும் நிறைந்த இந்தத் தீபாவளித் திருநாள் இந்து சமய போதனைகளைப் பின்பற்றும் எல்லோர் மத்தியிலும் மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் புரிந்துணர்வையும் கொண்டு வரவேண்டும் என பிரார்த்திக்கின்றேன் என அவர் மேலும் அச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# மாணவர்களின் திறனை விருத்தி செய்யும் போட்டி



(கொழும்பு)

பாடசாலை மாணவர்களின் பகுப்பாய்வு, பிரச்சினை தீர்த்தல் மற்றும் தொடர்பாடல் திறனை மேம்படுத்தும் நோக்கில், SLIIT நிறுவனத்தின் வணிகப் பிரிவின் மூலம் கடந்த செப்ரெம்பர் மாதம் 27ஆம் திகதி தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக மாலபே பல்கலைக்கழக வளாகத்தில் 'Soft Skills + 2013' நிகழ்வை நடத்தினர்.

இந் நிகழ்வில் நாடுபூராகவும் உள்ள உயர்தர பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இந் நிகழ்வு இரு பிரிவுகளாக நடைபெற்றன. முதல் பிரிவில், குழு வேலை, ஆக்கத்திறன், நேர முகாமைத்துவம், அழுத்தத்தின் மத்தியில் பணிபுரிதல் மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆகிய மென்திறன்கள் (Soft Skills) சம்பந்தப்பட்ட வேடிக்கை நிறைந்த குழு செயற்பாடுகள் இடம்பெற்றன.

இரண்டாவது பிரிவில் பொது அறிவு, செய்திகள் மற்றும் நடப்பு விவகாரங்கள், விளையாட்டு, வரலாறு மற்றும் பொழுதுபோக்கு ஆகிய 5 பிரிவுகளில் நொடி வினாவிடை போட்டி நடைபெற்றது.

இந் நிகழ்வில் தரம் 12 மற்றும் 13 இனைச் சேர்ந்த 200 இற்கும் அதிகமான மாணவர்கள் பங்குகொண்டனர்.

# ஆரம்பப் பிரிவிற்கு ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு

நாட்டிலுள்ள பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவிற்கான ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு நிலவியுள்ளதாக கல்வி அமைசசு குறிப்பிடுகின்றது.

வருடாந்தம் சுமார் ஆறாயிரம் ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக கல்வி அமைசசின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலிருந்து ஆசிரியர்கள் வெளியேறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளமையே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் தட்டுப்பாட்டை நிவர்ததி செய்வதற்காக கல்வியியல் கல்லூரிகளுக்கு மேலதிகமாக வேறு ஆசிரியர்களுக்கு கல்வியியல் கல்லூரிகளில் ஆரம்பப் பிரிவிற்கான குறுங்கால பயிற்சிகளை வழங்கி, சேவையில் இணைத்துக கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக அந்த உயரதிகாரி குறிப்பிட்டார்.

# இலங்கை வீட்டுப் பணிப் பெண் பறக்கும் விமானத்தில் பிரசவம்

இலங்கை வீட்டுப் பணிப் பெண ஒருவர் பறக்கும் விமானத்தில் குழந்தை பிரசவித்துள்ளார்.

டுபாயிலிருந்து கட்டுநாயக்க நோக்கிப் பயணம் செய்த எயார் அரேபியா விமானத்தில் பயணம் செய்த இலங்கையைச் சேர்ந்த வீட்டுப் பணிப் பெண் ஒருவரே இவ்வாறு குழந்தை பிரசவித்துள்ளார்.


விமானம் புறப்பட்டு இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் குறித்த கர்ப்பிணிப் பெண் பிரசவ வேதனையால் அவதியுற்றுள்ளார்.

இதனால் அருகாமையில் இருக்கும் விமான நிலையமொன்றில் விமானத்தை தரையிறக்கி, அவரை வைத்தியசாலையில் அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது. எனினும் விமானம் தரையிறக்கப்படுவதற்கு பத்து நிமிடங்களுக்கு முன்னதாகவே குறித்த பெண் குழந்தையை பிரசவித்துளார். விமானப் பணியாளர்களும், சக பயணிகளும் குழந்தையை பிரசவிப்பதற்கு உதவிகளை வழங்கியுள்ளனர்.

டுபாயில் பணியாற்றி வந்த இலங்கை வீட்டுப் பணிப் பெண் ஒருவரே இவ்வாறு பறக்கும் விமானத்தில் குழந்தையை பிரசவித்துள்ளார்.

விமானத்தை தரையிறக்கி தாயையும், சேயையும் ஓமான் வைத்தியசாலையில் அனுமதிதத விமானப் பணியாளர்கள் மீண்டும் இலங்கை நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்துள்ளனர்.

# தேசிய மருந்து கொள்கைக்கு மருந்துப்பொருள் சம்மேளனம் ஒத்துழைப்பு




மருந்து கொள்கையை நடைமுறைப் படுத்த அரசாங்கமும் சுகாதாரத் துறையினரும் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக இலங்கை மருந்துப் பொருள் வர்த்தக துறைசார் சம்மேளனம் உறுதிபட மீண்டும் தெரிவித்துள்ளது.

நோயாளர்களுக்கு சிறந்ததொரு சேவையை வழஙக தேசிய மருந்து கொள்கை இன்றியமையாதது என தெரிவித்துள்ள இலங்கை மருந்துப் பொருள் வர்த்தக துறைசார் சம்மேளனத்தின் தலைவர் ஸ்டுவர்ட் செப்மன், மகிந்த சிந்தனைக்கு அமைய சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவினால் முன்னெடுக்கப்படுகின்ற திட்டங் களுக்கு உதவுவதன் மூலம் மக்களுக்கு சிறந்த மருத்துவ சேவையை வழங்க முடியும் என கூறினார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், தரம் குறைந்த மருந்து பொருட்களை வழங்குபவர்களை முற்றாக அப்புறப் படுத்த அரசாங்கம எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எமது சம்மேளனம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்.

உள்ளூர் உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், விநியோகத்தர்கள், மொத்த விற்பனையாளர்கள், சில்லறை வர்ததகர்கள் ஆகிய அனைவரையும் உள்ளடக்கியதே எமது சம்மேளனம்.

அரசாங்கத்தின் புதிய மருந்து கொள்கையின் பரிந்துரைகளை மதிப்பீடு செய்ய தயாராக உள்ளோம். தேசிய மருந்து கொள்கை மூலம் மக்களின் அபிலாஷைகள் மாத்திரமன்றி தரமான மருந்துகளை அரசாங்க துறையினரும் தனியார் துறையினரும் விநியோகிக்க வழி வகுக்கும்.

தேசிய மருந்து கொள்கையின் நகலை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க முன்னர் அது தொடர்பில் கலந்துரையாட நாம் தயாராக இருக்கின்றோம் என தெரிவித்தார். அத்துடன் இலங்கை மருத்துவ துறையில் பல்வேறு முக்கியமான தருணங்களை கடந்துள்ளது.

இத்தகைய முக்கிய தருணங்களை வெற்றிகரமாக கடப்பதற்கு இலங்கை மருந்துப்பொருள் வர்த்தக துறைசார் சம்மேளனமும் உதவியுள்ளது.

அரசாங்கம் இலவச மருத்துவ சேவையை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது. மறுமுனையில் தனியார் துறையினரும் தமது நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர். இலவச மருத்துவ சேவையை பெற்றுக்கொள்ள விரும்புகின்றவர்கள் எவ்வித கட்டணமுமின்றி அரச வைத்தியசாலைகளில் சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும். ஏனையவர்களுக்கு தனியார் துறையில் தமது சேவைகளை பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

அத்துடன் தரமான மருந்துகளை வழங்கவும், தட்டுப்பாடின்றி மருந்து விநியோகத்தை மேற்கொள்ளவும் இலங்கை மருந்துப்பொருள் வர்த்தக துறைசார் சம்மேளனம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக சம்மேளனத்தின் தலைவர் ஸ்டுவர்ட் செப்மன் சுட்டிக்காட்டினார்.

# போஷாக்கு சுட்டிகள் இரு தசாப்தங்களாக தேக்கம்


(கொழும்பு)

இலங்கையின் ஆரோக்கிய சுட்டிகள் உலகின் உயர் மட்டங்களிடையே காணப்படினும் போஷாக்கு சுட்டிகள் இரண்டு தசாப்தங்களாக தேங்கியிருப்பதாக ஓர் அறிக்கை கூறியுள்ளது.

ஜனாதிப்தி மகிந்த ராஜபக்ஷ போஷாக்குக்கான பல்துறை வேலைத்திட்டம் என்பதை இன்று அமைச்சரவையில் சமர்ப்பித்தார் இலக்கு 2016, ஸ்ரீலங்கா ஒரு போஷாக்கிற்கான தேசம் எனும் திட்டததினூடாக அரசாங்கம் இந்தப் பிரச்சினையை தீர்க்க எண்ணியுள்ளது.

சிறுவர்களிடையே வளர்ச்சியின்மை, நிறைக்குறைவு என்பவற்றை குறைப்பதில் கடந்த காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டிருந்தாலும் அதன் பின்னர் இந்த சுட்டிகளில் முன்னேற்றம் காணப்படவில்லை என இந்த அறிக்கை கூறியுள்ளது.

வளர்ச்சியின்மை வீதம் 17.3 சதவீதமாகவும் நிறைகுறைவு 21.1 சதவீதமாகவும் தொடர்ந்து காணப்படுகின்றதேயன்றி முன்னேற்றம் காணவில்லை. 20 வருடங்களாக உடல்மெலிவு 14.7 சத வீதமாக வருகின்றது. குறைந்த பிறப்பு நிறை 17.9 சத வீத மென தரவுகள் காட்டுகின்றன. நுவரெலியாவில் வளர்ச்சியின்மை வீதம் 27 சதவீதமாக உயரத்தில் உள்ளது.



ஒரு பிள்ளையின் வாழ்வின் ஆரம்ப கட்டத்தில் குறிப்பாக முதல் 1,000 நாட்களில் போதிய சத்துணவை உட்கொள்வது முறையான உடல், உள விருத்திக்கு முக்கியமானது. குறைந்த நிறையுடன் பிறக்கும் பிள்ளை பிற்காலத்தில் நீரிழிவு, உயரமுத்தம் போன்ற நோய்களினால் பீடிக்கப்படலாம் என மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் கூறியுள்ளது.

இலங்கையில் ஆண்டு தோறும் ஐந்து வயதிலும் குறைந்த 4,285 சிறுவர்கள் மரணிக்கின்றனர். இதில் 1,500 பேர் வரையில் மந்த போஷாக்கின்மை காரணமாக மரணிக்கின்றனர் என்று அவ்வறிக்கை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

# ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய கூட்டம் நாளை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியை வெற்றிப் பாதைக்கு கொண்டு செல்வதற்கான புதிய திட்டங்கள் வகுப்பது தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான கரு ஜயசூரிய மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் பங்குகொள்கின்றனர்.


இதனிடையே, நேற்று முன்தினம் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் புதிய திட்டங்கள் மறறும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.



பருத்தித்துறை முதியோர் குழந்தைகள் பேணகமான "ராஜாராணி" இல்லத்திறப்பு விழாவில் பருத்தித்துறை உதவி பொலிஸ் அத்தியட்சர் யூ.டி.எஸ்.பீரிஸ் மங்களவிளக்கேற்றி ஆரம்பிப்பதையும் அருகில் விழாத்தலைவர் சிவா கிருஸ்ணமூர்த்தி நிற்பதையும், ராஜாராணி இல்லத்தை விக்ரோறிய அப்சலோம் தம்பதிகள் திறந்து வைப்பதையும் நிலைய நிறைவேற்றுப் பணிப்பாளர் யோ.இருதயராஜா தம்பதிகள் நிற்பதையும், பிரதமவிருந்தினரான கொழும்பு கம்பன்கழகத் தலைவர் ரீ.ஈஸ்வரன் உரையாற்றுவதையும் காணலாம். (01)

# முதியவர்களின் அனுபவ அறிவுரைகளை இளம் சந்ததியினர் பின்பற்றவேண்டும்

## யாழ். அரச அதிபர்



(யாழ்ப்பாணம்)

முதியவர்கள் அறிவிலோ, அனுபவத்திலோ ஆளுமையிலோ சிறந்தவர்கள் அவர்களின் அனுபவபகிர்வின் ஊடாக நல்லதொரு எதிர்காலத்தினை கட்டி எழுப்ப முடியும். எனவே அவர்களின் அனுபவங்கள், அறிவுரைகளை இளம் சந்ததியினர் கேட்டு அதன் படி செயற்பட வேண்டும் என யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் சர்வதேச பாடசாலையில் நடைபெற்ற சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்திய முதியோர் தின விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், இன்றைய காலத்தில் சிலர் முதியோர்கள் என்றால் அதுவொரு சமூகம் என்று நினைக்கின்றனர். அது தவறு, அவர்களும் சிறுவர்களாக இளைஞர்களாக இருந்து இந்த சமூகத்திற்கு பல சேவைகள் செய்து உழைத்து ஓய்வு நிலையை அடைந்திருப்பவர்கள். முதியவர்களின் அறிவுரைகளை சிலர் கேட்பதில்லை அவற்றினை உதாசீனம் செய்கின்றனர். இளம் சந்ததியினரின் இது போன்ற சில செயற்பாடுகளினால் மூத்தோர்களிடத்திலே ஒரு வகையான ஏக்கம் காணப்படுகிறது.

குறிப்பிட்ட ஒரு வயதுக்கு வந்தவுடன் பெற்றோர்களை சில சுயநலன்கள், தேவைகளுக்காக தனித்துவாழ விடுகின்றனர், அல்லது முதியோர் இல்லங்களில் இணைத்து விடுகின்றனர். ஆயினும் இன்று அவ்வாறான நிலை மாற்றமடைந்து வருகின்றது. முதியோரின் அறிவு, அனுபவம் போன்றவற்றின் தேவைப்பாடு உணரப்பட்டு வருகின்றது. இது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது.

இன்று அரசாங்கம் முதியோர்களின் நலனில் அதிக அக்கறை காட்டிவருகின்றது. அவர்களின் நலன்களுக்காக பல அரச அலுவலகங்கள் திறக்கப்பட்டு அவற்றினூடாக பல சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அரசு மட்டுமன்றி பல்வேறு தரப்பினராலும் முதியோர் நலனில் அக்கறை காட்டி வருகின்றனர்.

எனவே முதியோர்கள் தமக்கு எந்த விதமான குறைபாடுகள் தேவைகள் இருந்தாலும் பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் போன்றவற்றிற்கு தெரியப்படுத்தி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பின்நிற்க கூடாது என்றார். (54)

# மின்கம்பங்கள் பொருத்தும் பணி

குடாநாட்டின் பிரதான வீதிகளுக்கு மின்னொளி வழங்குவதற்காக மின்குமிழ்களை பொருத்துவதற்கென வீதியோரங்களில் கொங்கிறீற் அத்திபாரத்துடன் கூடிய பிரத்தியேக மின் கம்பங்கள் அமைக்கும் பணிகள் முனைப்பாக இடம்பெற்றுவருவதனை பரவலாகக் காணக் கூடியதாக உள்ளது. மின்கம்பங்களை நிறுவும் ஆரம்ப கட்டப் பணிகள் யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதி, புத்தூர் கொடிகாமம் வீதி, யாழ்ப்பாணம் பலாலி வீதி ஆகிய பகுதிகளில் நடைபெற்று வருகின்றன.

எனினும் இப்பணிகள் வீதி முழுவதும் தொடர்ச்சியாக இடம்பெறாது வீதியின் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு மட்டும் தொடர்ச்சி அற்ற வகையில் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றது. இதன் மூலம் மக்களுக்கு முழுமையான பயன் கிடைக்குமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர். (03)

# முரசின் இன்றைய பலன்



(03.11.2013 ஞாயிற்றுக்கிழமை)

**விஜய வருஷம் ஐப்பசிமாதம் 17 ஆம் திகதி.**
**கேதார கௌரி/அமாவாசை விரதங்கள்.**
**சுவாதி நட்சத்திரம் பி.இ - 12.23 வரை**
**சித்தயோகம்.**
**இராகுகாலம 04.34- 06.04 வரை. சுபநேரம 09.04-10.34 வரை.**

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** தனிமையில் இருந்து எந்த வித முடிவையும் எடுக்காது தள்ளாட வேண்டியிருக்கும், திருமணத்திற்காக சைவ போஜனத்தைக் கைவிடவும் மதமாற்றமும் செய்ய முன்வருதல்.

**ரிஷபம்** அமங்கல நிகழ்வினால் நிறைவேறவிருந்த சுப காரியம் தடங்கிவிடல், திருமணம் செய்ய முன்வராமை ஏன் என காரணம் புரியாது பெற்றோர் கலக்கமடைதல்.

**மிதுனம்** புதிய மனையில் குடியேற சுபநாள் குறிக்கச் செல்லும் வழியில் சிறு விபத்து ஏற்படல், கொடுக்கல் வாங்கலில் புரிந்துணர்வு ஏற்படும்.

**கடகம்** அபாண்டப்பழியை அப்பாவி மீது சுமத்தி பதவிக்கும் கௌரவத்துக்கும் கேடுண்டாக்க முயலுதல், பூர்விகச் சொத்துப்பிரச்சினை வழக்கு சாதகமான தீர்ப்பினை வழங்குதல்.

**சிம்மம்** பதவி உயர்ச்சி பற்றிய செய்திகேட்டு பரவசமடைதல், பெற்றோரின் அனுதாபத்தை நினைத்து தவறான வழிசெல்லும் முயற்சியைக் கைவிட்டு விடல்.

**கன்னி** சொத்துப்பற்றிய பிரச்சினைவிட்டுக் கொடுப்பினால் சுலபமாகத் தீர்த்துவிடல், மணமகனின் பரிதாப நிலைகண்டு வியாபாரத்தலமொன்று ஏற்படுத்திக் கொடுக்க முயற்சித்தல்.

**துலாம்** நண்பர் பொறுத்தகட்டத்தில் உதவி செய்ய முன் வந்ததால் கடன் தொல்லை நீங்குதல், கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தம் ஏற்பட்டு சம்பாத்தியத்திற்கு வழி பிறக்கும்.

**விருச்சிகம்** ஏழரைச்சனி நடப்பதினால் ஒருவருக்கும் பணப் பிணைக்கு உடன்படவேண்டாம், பழைய காதலியை எதிர்பாராமல் சந்தித்து துயரவெள்ளத்தில் மிதத்தல்.

**தனுசு** ஏமாற்றிய கணவனை வெளிநாடு சென்று தட்டிக் கேட்க முயற்சி எடுத்தல், தனியார் துறையைக் கை விட்டு விட்டு அரசு வேலையில் சேர பிரமுகரின் உதவியை நாடல்.

**மகரம்** பிரிவினையைக் கைவிட்டு அனுதாபம் காரணமாக தம்பதியர் ஒற்றுமைப்படல், புதிய பொருட்கள் சேரும் யோகம் மக்கள் அனுப்பிய பணத்தினால் ஏற்படல்.

**கும்பம்** தொட்ட தெல்லாம் தோல்வியாகுதே என எண்ணிக் கலக்கமடையும் நிலைமாற வழிசிந்தித்தல், நீண்ட காலம் எதிர்பார்த்த பயணம் சரிவரும் போலத்தெரிதல்.

**மீனம்** பொறுமையைக் கையாண்டதால் மேலதிகாரிகளின் பாராட்டுதல் கிடைத்தல், பிரிந்திருந்த உறவு மீண்டும் ஒன்று சேரும் நிலை உருவாதல்.

# ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துரைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள கேப்பாப்பிலவு மாதிரிக்கிராமத்தில் உள்ள ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயம் 12 இலட்சம் ரூபாசெலவில் மீள்நிர்மாணம் செய்யப்பட்டு எதிர்வரும் 7ஆம் திகதி மகா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. இக்கிராமத்தில் 314 குடும்பங்கள் வசித்துவரும் நிலையில் இங்குள்ள குறித்த ஆலயம் கடந்த யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்து காணப்பட்டதுடன் எந்தவித பூசை வழிபாடுகளும் அற்ற நிலையில் காணப்பட்டது. இந்நிலையில் இக்கிராமத்தில் வாழும் இந்துக்கள் ஒன்றிணைந்து இவ்வாலயத்தை புனரமைப்பது குறித்து முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபருக்கு கோரிக்கை மனு ஒன்றை கையளித்தனர்.

இதனையடுத்து அரச அதிபரின் முயற்சியூடாக 5 இலட்சம் ரூபா நிதிவழங்கப்பட்டதுடன் பொது மக்களின் 7 இலட்சம் நிதியுமாக மொத்தம் 12 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டது. இதனையடுத்து இவ் ஆலயம் மீள நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.(125)

# மரவெள்ளிக் கிழங்கு விலை வீழ்ச்சி

கொடிகாமம் பொதுச்சந்தையில் தற்போது மரவள்ளிக் கிழங்கு மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகிறது 1கிலோ கிழங்கு 30ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் மரவள்ளிச் செய்கையாளர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். (150)

# புதிய நிர்வாகத்தெரிவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாப்பிலவு சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகத் தெரிவும் பொதுக்கூட்டமும் கடந்த 22 ஆம்திகதி மாலை 4 மணியளவில் கிராம அலுவலர் மண்டபத்தில் நடைபெற்றது.

சனசமூக நிலைய விசேட பிரதிநிதியான தி.சசிகுமார் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவு இடம் பெற்றது. இதில் தலைவராக இ.பரமேஸ்வரன், செயலாளராக த.நாகரத்தின்,பொருளாளராக இ.சுகன்யா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் இந்நிர்வாகத்தினர் சனசமூக நிலையத்திற்கென நிரந்தரமான கட்டடம் அமைக்க உதவி செய்யுமாறு கோரி அரச அதிபருக்கு மனு ஒன்றை கையளித்துள்ளனர்.(125)

# ஆறுமுகநாவலர் குருபூசை வினா விடைப்போட்டி

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம், சைவச் சிறார்களின் சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குரு பூசையை முன்னிட்டு வினா விடைப் போட்டியை நடத்தவுள்ளது. இப்போட்டி தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை பயிலும் மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ளது.

இப்போட்டி எதிர்வரும் நவம்பர் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது. வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் நவம்பர் 24 ஆம் திகதி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை அன்று வழங்கப்படும்.

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவ சமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல 82 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என சைவசமய அபிவிருத்திக்கழக சமய பிரசாரகரும் உதவிப் பரீட்சை செயலருமான சு.ஸ்ரீகாந்தன் அறிவித்துள்ளார்.

## முதலிடம்



இந்திய கிரிக்கெட் வீரர்களின் பணக்காரர்கள் பட்டியல் வெளியிடப் பட்டுள்ளது. இந்தியஅணியைபொறுத்த வரையில் கிரிக்கெட் வீரர்களுக்கு விளையாட்டு மட்டுமின்றி, விளம்பரத் திலும் நடிப்பதிலும் வருமானம் கொட் டுகிறது.

நிறைய விளம்பரங்களில் நடித்து கோடி கோடியாக சம்பாதிக்கிறார்கள்.

இந்திய கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் டோனி விளம்பரம் மூலம் அதிகம் சம்பாதிக்கிறார். தற்போது அந்த வரிசையில் இளம் வீரர் வீராட் கோஹ்லி இணைந்துள்ளார்.

ஆனால் இந்த பணக்கார கிரிக் கெட் வீரர்கள் பட்டியலில் டெண்டுல்கர் முதலிடத்தை பிடித்துள்ளார்.

அவரது சொத்து மதிப்பு ரூ.965 கோடி (160 மில்லியன் டொலர்) அவ ருக்கு அடுத்து 2ஆவது இடத்தில் டோனி உள்ளார். அவரது சொத்து மதிப்பு சுமார் ரூ. 350 கோடி ஆகும்.

அதற்கு அடுத்த நிலையில் யுவ ராஜ்சிங் (190 கோடி), ராகுல் ராவிட் (126 கோடி), வீராட் ஹோலி (ரூ. 95 கோடி) உள்ளனர்.

## ஷரபோவா கர்ப்பம்?



ரென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா, கர்ப்பமாக இருப்பதாக தெரிகிறது. ரஷ்ய ரென்னிஸ் நட்சத்திரம் மரியா ஷரபோவா (வயது -26). அவுஸ்ரேலிய ஓப்பன் (2008), பிரெஞ்ச் ஓப்பன் (2012), விம்பிள்டன் (2004), யு.எஸ்., ஓபன் (2006) என, நான்கு கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ளார். ரென்னிஸ் தவிர, சொந்தமாக பல்வேறு வியாபாரம் செய்யும் இவர், உலகிலேயே அதிகமாக (ரூ. 185 கோடி) சம்பாதிக்கும் வீராங்கனைகளில் முதலிடத்தில் உள்ளார். கடந்த ஆண்டு பல்கேரியாவின் கிரிகர் டிமிட்ரோவுடன், 22, காதலில் விழுந்து விட்டார். காதல் பரிசாக ஷரபோவாவுக்கு மோதிரம் அணிவித்துள்ளார். இவர்களுக்கு விரைவில் திருமணம் முடியும் என எதிர்பார்க்கப்பட்டது. இதனிடையே, கடந்த ஆக., மாதம் ஷரபோவா கர்ப்பமாக இருப்பதாக செய்திகள் வெளியானது.

இதுகுறித்து ஷரபோவா அப்போது கூறுகையில், முதலில் கர்ப்பமாக இருப்பதாக நினைத்து பயந்தே விட்டேன். பின், அல்ட்ரா சௌன்ட் சோதனை செய்து பார்த்ததில், அப்படி எதுவும் இல்லை எனத் தெரிந்தது. நல்லவேளை தப்பித்தேன் என்றார். ஆனால், இப்போது இவர் கர்ப்பமாக இருப்பது உறுதியாகியுள்ளதாகத் தெரிகிறது. பல்கேரியாவில் இருந்து வெளி யாகும் பத்திரிகையில், விரைவில் ஷரபோவா ஒரு குழந்தைக்கு தாயாக உள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. கடந்த ஆக., மாதம் நடந்த யு.எஸ்., ஓப்பன் ரென்னிஸ் தொடரில் இருந்து, தோள்பட்டை காயம் காரணமாக விலகினார். பின், அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்சில் உள்ள மகப்பேறு மையத்தில் சோதனை செய்து கொண்ட இவர், ஒரு மாதம் கழித்து மீண்டும் வந்து பரிசோதித்தாராம். அன்று முதல் இன்று வரை எவ்வித தொடரிலும், ஷரபோவா பங்கேற் காதது சந்தேகத்தை உறுதிப்படுத்துவது போல உள்ளது. கடந்த அக்., 15ஆம் திகதி ஷர போவா, டிமிட்ரி இருவரும், இங்குள்ள ஒரு மதுபான சாலைக்கு வந்த போது, மிகவும் உற்சாகமாக காணப்பட்டனர். அவ்வப்போது குமட்டிக் கொண்டிருந்த ஷரபோவா, தண்ணீர் மட்டும் குடித்தார். பெரும்பாலும் இதுபோன்ற நேரங்களில், ஒயின் மட்டும் தான் சாப்பிடுவாராம். தற்போது ஸ்டாக்ஹோம் அகாடமியுடனான தனது ஒப்பந்தத்தை ரத்து செய்துள்ள டிமிட்ரி, ஷரபோவா அருகில் இருந்து கவனிக்க, லாஸ் ஏஞ்சல்சிற்கு வந்துவிட்டார். இதை எல்லாம் வைத்து பார்த்தால், அம்மா செய்தியில் உண்மை இருப்பதாகவே தெரிகிறது.

## இலங்கை அணி அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பய ணம் மேற்கொள்ளவுள்ள நியூசிலாந்து அணிக்கும், இலங்கை அணிக்குமிடை யிலான 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலிரண்டு போட்டிகளுக்குமான இலங் கைக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.


மத்தியூஸ் தலைமையிலான 16 பேர் கொண்ட குழாமாக இது அறிவிக்கப்பட் டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள குழாமில் அண்மைக்காலத்தில் இலங்கை சார் பாகத் தொடர்ச்சியாக விளையாடி வந்த ஷமிண்ட எரங்க சேர்க்கப்படவில்லை.

இக்குழாமில் புதுமுக வீரரான அஷன் பிரியஞ்சன, இலங்கை டெஸ்ட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் திமுத் கருணாரத்ன ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். நவம்பர் 10ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள இந்தத் தொ- டரின் முதலிரண்டு போட்டிகளும் அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, ஒரு நாள் தொடரை நிச்சயம் கைப்பற்றிக்கொள்வோம் என இலங்கை அணிக் கப்டன் மத்தியூஸ் தெரிவித்துள்ளார். சொந்த மைதா னங்களை சாதகமாகப் பயன்படுத்தி தொடரை வெல்ல முயற்சிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்: மத்தி யூஸ், டினேஷ் சந்திமால், லஹிரு திரிமன்ன, திலகரட்ண டில்சான், குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன, சச்சித்திர சேனநாயக்க, அஜந்த மெண்டிஸ், திஸர பெரேரா, நுவான் குலசேகர, சுரங்க லக்மால், குசால் ஜனித் பெரேரா, திமுத் கருணாரத்ன, விமுக்தி பெரேரா, ரங்கன ஹேரத், அஷன் பிரியஞ்சன.

## சச்சின் தாயாருக்கு விசேட பாதை



(மும்பை)

சச்சினின் 200ஆவது டெஸ்ட் போட்டியை காண, அவரது தாயாருக்கு மும்பை மைதானத்தில் விசேட பாதை தயாராகவுள்ளது.

இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் (வயது- 40). சர்வதேச அரங்கில் சதத்தில் சதம் அடித்த இவர், வரும் மே.தீவுகள் தொடரில், தனது 200ஆவது டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெறுகிறார்.

சச்சினின் வேண்டுகோளுக்கு இணங்க, வரலாற்று சிறப்பு மிக்க இப்போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நடக்க வுள்ளது. இதுவரை சச்சின் விளையாடிய சர்வதேச போட்டி எதையும் நேரில் பார்க்காதவர் இவரது தாயார் ரஜ்னி.

இம்முறை சச்சின் ஓய்வு பெறவுள்ளதால், வான்கடே மைதானத்துக்கு நேரில் வந்து பார்க்கவுள்ளார். வயதாகி விட்டதால், இவரால் வீல் சேரில் தான் வர முடியும். இதற்காக சில வாரத்துக்கு முன், ஒரு சரிவுப் பாதை அமைக்கப்பட்டது. இது அகலம் குறைவாக உள்ளதாக கூறி, சச்சின் நிராகரித்தார். இப்போது 8 அடி நீளம், 4 அடி அகலம் கொண்ட புதிய பாதை தயாராக உள்ளது. இவருக்கு இலவச அனுமதி கொடுக்க மும்பை கிரிக்கெட் சங்கம் (எம்.சி.ஏ.,) முடிவு செய்துள்ளது.

## வெற்றிக்கு வித்திட சிறப்பாக செயற்படுவேன்

### சாமுவேல்ஸ் நம்பிக்கை

இந்தியாவுக்கு எதிரான தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் வெற்றிக்கு கைகொடுக்க முயற்சிப்பேன் என மேற்கிந்தியத்தீவுகள் அணியின் சகலதுறை வீரர் சாமுவேல்ஸ் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரைக் கைப்பற்றுவது எங்கள் அணியின் இலக்கு. ஆனால் இது எளிதான காரியமல்ல. பொதுவாக இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்து வது கடினம். இருப்பினும் முழுத்திறமையை வெளிப் படுத்தி வெற்றி பெற முயற்சிப்போம். முன்னைய போட்டிகளில் இந்திய மைதானங்கள் எனக்கு ராசியான தாக அமைந்துள்ளன. எனது முதல் டெஸ்ட் (104 ஓட்டம், 2002, கொல்கத்தா) மற்றும் ஒருநாள் போட்டி (108 ஓட்டங்கள், 2002) சதத்தை இந்தியாவுக்கு எதிராக அடித்தேன். இங்குள்ள மைதானங்களில் நிறைய ஓட்டங்கள் எடுத்துள்ளேன். எனவே இம்முறை இந்திய மைதானங்கள் எனக்கு நிச்சயம் கைகொடுக்கும் என நம்புகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கிளார்க்கிற்குக் கண்டனம்

அவுஸ்ரேலியாவில் நடைபெற்று வரும் முதல் தர கிரிக்கெட் போட்டியில், நடுவரின் தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நடந்து கொண்டதற்கு, மைக்கல் கிளார்க்குக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

அவுஸ்ரேலியா டெஸ்ட் அணியின் கப்டனாக உள்ளவர் மைக்கல் கிளார்க். இவர், தற்போது நியூ சவுத் வேல்ஸ் அணிக்கு கப்டனாக விளையாடி வருகிறார். சிட்னியில், நியூ சவுத் வேல்ஸ் அணிக்கும், டஸ்மேனியா அணிக்கும் இடையேயான கிரிக்கெட் ஆட்டம் நடை பெற்றது. ஆட்டத்தின்போது, டஸ்மேனியா வீரருக்கு, சந்தேகத்தின் அடிப்படையில் ஆட்டமிழப்பு வழங்கப்படவில்லை. இதைத் தொடர்ந்து, நடுவரின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் முறையை சைகையில் காண்பித்தார் கிளார்க். இப்போட்டியில் தொலைக்காட்சி ரீப்ளே வசதி இல்லாததால், மறுபரீசிலனை முறையைப் பயன்படுத்த முடியவில்லை. எனினும், மறுபரிசீலனை செய்யும்போது உரிய வகையில் முறையிட வேண்டும். அந்த வகையில், கிளார்க் காண்பித்த சைகையானது விதி-முறையை மீறுவதாகும். இதைத் தொடர்ந்து கிளார்க்குக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. தனது தவறை கிளார்க் ஒப்புக் கொண்டார்.

## பாகிஸ்தான் பதிலடி

(டுபாய்)

அப்ரிடியின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் பாகிஸ்தான் அணி 66 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.


தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் நேற்று முன்தினம் டுபாயில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி 49.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அகமட் சயிட் 58, மொகமட் ஹபீஸ் 26, மிஸ்பா உல் ஹக் 25, அப்ரிடி 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எம். மோர்கல் மூன்று, ஆர். மிலோகா நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 210 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலை யில் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி மொகமட் இர்பான், அப்ரிடி ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் தென்னாபிரிக்க அணி 40.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் பர்னல் 21, மிலோகா 29, டுமினி 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மொக மட் இர்பான், அப்ரிடி தலா மூன்று, அஜ்மல் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக அப்ரிடி தெரிவானார். ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் இரு அணிகளும் ஒவ்வொரு வெற்றியைப் பதிவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## நடால் முன்னேற்றம்



(பாரிஸ்)

பாரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ்போட்டித் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் விளையாட முதல்நிலை வீரர் ரபேல் நடால் தகுதி பெற்றார்.

மூன்றாவது சுற்றில் போலந்தின் ஜெர்சி ஜொனோவிக்சுடன் மோதிய நடால் 7-5, 6-4 என்ற நேர் செட்களில் வென்று காலிறுதிக்கு முன்னேறினார். மற்றொரு 3வது சுற்று போட்டியில் அமெரிக்காவின் ஜோன் ஐஸ்னருடன் மோதிய 2ஆம் நிலை வீரர் நோவாக் ஜோகோவிச் (சேர்பியா) 6,7 (5,7) என்ற கணக்கில் முதல் செட்டை இழந்து பின்தங்கினார். பின்னர் சுதாகரித்துக் கொண்டு அனுபவ ஆட்டத்தை வெளிப் படுத்திய அவர் 6-7 (5-7), 6-1, 6-2 என்ற செட் கணக்கில் வென்றார்.

# கிண்ணம் வென்றது அச்சுவேலி முரசொலி



அச்சுவேலி பிரதேசத்திற்குட்பட்ட அணிகளுக் கிடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டியில் முரசொலி அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

அச்சுவேலிப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பத்து அணிகளுக்கிடையிலான மென்பந்து கிரிக் கெட் போட்டி அண்மையில் அச்சுவேலி யூனியன் மைதானத்தில் நடைபெற்றது.

12ஓவர்களைக்கொண்ட இப்போட்டி அணிக்கு 11 பேர் கொண்டதாக இடம்பெற்றது. விலகல் முறை யில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் எல்லாளன் அணியை எதிர்த்து முர சொலி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய முரசொலி அணி, சுபேந்திரனின் அதிர டித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் முரசொலி அணி 12 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுபேந் திரன் 42, நிதர்சன் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தவான், விதுரன் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 96 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய எல்லாளன் அணி சுபதாஸ், காந்தரூபன், சுபேந்திரன் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் நிலை குலைந்து மளமளவென விக்கெட்டுக்களைப் பறி கொடுத்தது. இருப்பினும் தினேஷ், கஜன்ஆகியோர் அணியின் நிலையை உணர்ந்து பொறுப்புடன் ஆடியபோதும் தோல்வியைத் தவிர்க்க முடிய வில்லை. இறுதியில் எல்லாளன் அணி 11.3 ஓவர் கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தினேஷ் 26, கஜன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுபதாஸ் மூன்று, காந்தரூபன், சுபேந்திரன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டி யின் ஆட்டநாயகனாக முரசொலி அணியைச் சேர்ந்த சுபேந்திரன், தொடர் ஆட்டநாயகனாகஅதே அணியைச் சேர்ந்த காந்தரூபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (85)



# அரையிறுதியில் வல்வை அணி

(மானிப்பாய்)

வல்வெட்டித்துறை நகர சபையால் நடாத்தப்பட்டு வரும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு வல்லை அணி தகுதி பெற்றுள்ளது.

வல்வெட்டித்துறை நகரசபையால் ஏற்பாடு செய்யப்பட்ட அணிக்கு 5 பேர் 6 ஓவர் கொண்ட கிறிக்கெட் போட்டி தற்போது நடைபெற்று வரு கின்றது.

இப்போட்டித் தொடரின் காலிறுதி ஆட்டம் கடந்த வாரம் இடம்பெற்றது. இதில் வல்வை அணி யும் கொம்மந்தறை அணியும் மோதின. இதில் நாணயற்சுழற்சியில் வென்று முதலில் ஆடிய கொம்மந்தறை நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்கள் நிறை வில் 4 விக்கெட்டுக்களை இழந்து 43 ஓட்டங் களைப் பெற்றது. இதில் கபிலன் 18 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் ரஞ்சித் 3 விக் கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 44 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வல்வை அணி 4.5 ஓவர்கள் நிறைவில் 1 விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதன் மூலம் வல்வை அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

ஏனைய காலிறுதிப் போட்டிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (48)

## விளையாட்டு செய்திகள்

# வென்றது முல்லை சென்யூட்

(வவுனியா)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்படும் போட்டியில் முதல் தடவையாக பங்குபற்றிய முல்லைத்தீவு சென்யூட் அணி அப்போட்டியில் அசத்தல் வெற்றிபெற்றது. கார்கிள்ஸ் புட்சிட்டி நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றில் உள்ள அணிகளுக்கிடையிலான எவ். ஏ. கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் கடந்த 26ஆம் திகதி வவுனியா வைரவர் புளியங்குளம் மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஒன்றில் முல்லைத்தீவு சென். யூட் அணியும் வவுனியா யுனிபைட் அணியும் மோதின.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப் படும் சுற்றுப்போட்டிகளில் முதன் முறையாக பங்குபற்றிய முல்லைத்தீவு சென்யூட் அணி இப்போட்டியில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தியது. ஆட்டம் ஆரம்பமாகி 16ஆவது நிமிடத்தில் சென்.யூட் வீரர் விக்னேஸ்வரன் பகிரதன் முதல் கோலைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். தொடர்ந்து 26ஆவது நிமிடத்தில் பொன்னம்பலம் ஸ்ரீபன், 31ஆவது நிமிடத்தில் எஸ். கஜீபன், 55ஆவது நிமிடத்தில் மீண்டும் விக்னேஸ்வரன் பகிரதன், 76ஆவது நிமிடத்தில் எட்வேர்ட் ஆரோக்கியவிவேக் ஆகியோர் மாறி மாறி கோலைப் பெற்றுக்கொடுத்தனர். பதில் கோலைப் பெற்றுக் கொள்ளும் வவுனியா யுனிபைட்டின் முயற்சிகள் அனைத்தும் சென்யூட் அணியால் தவிடுபொடியாக்கப்பட்டது. இறுதியில் சென்யூட் அணி 5-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

## சுவையான தகவல் ஒன்று

ரஞ்சி கிண்ணப் போட்டியில் சச்சின் அறிமுகம் ஆனபோது பிறந்தவர், சச்சினின் ரஞ்சிக் கிண்ண இறுதிப் போட்டியில் இணைந்து விளையாடினார்.

சாதனை வீரரான சச்சின் டெண்டுல்கர் பற்றி எத்தனையோ சுவாரஸ்யமான விடயங்கள் இதுவரை வெளிவந்துள்ளன. இதோ அவரது விளையாட்டுடன் இணைந்த மற்றொரு வேடிக்கையான ஒற்றுமைஇப்போது வெளிவந்துள்ளது. ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் மும்பை, ஹரியானா அணிகள் மோதிய ஆட்டம் லாக்லியில் உள்ள பன்சிலால் மைதானத்தில் நடந்தது. இதுவே சச்சினின் கடைசி ரஞ்சிப் போட்டி யும் ஆகும். இதில் முதல் இனிங்ஸில் ஹரியானா அணி 134 ஓட்டங்களும், மும்பை அணி 136 ஓட்டங்களும் எடுத்திருந்தன. 2 ஓட்டங்கள் பின்தங்கியிருந்த ஹரியானா அணி இரண்டாவது இன்னிங்ஸில் 241 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. இதில் கடைசி நாள் ஆட்டத்தில் மும்பை 6 விக்கெட் இழப்பிற்கு 240 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. அப்போது சச்சின் 79 ஓட்டங்களுடனும், அவருடன் இணைந்து விளையாடிக் கொண்டிருந்த தவால் குல்கர்னி 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இதன்மூலம் சச்சினின் இறுதி ரஞ்சிப் போட்டியில் அவருடன் கடைசியாக இணைந்து விளையாடிய வீரர் என்ற பெருமையை குல்கர்னி பெற்றார். சச்சின் டெண் டுல்கர் தனது முதல் ரஞ்சிப் போட்டியை கடந்த 1988 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி விளை யாடினார். அன்றுதான் தவால் குல்கர்னி பிறந்தார். தற் போது சச்சினின் கடைசி ரஞ்சிப் போட்டியில் தான் அவருடன் இணைந்து விளையாடியது குறித்து தனது மகிழ்ச்சியையும், வியப்பையும் அவர் ஒருசேர வெளிப் படுத்தினார்.

# மன்னாரில் இன்று மாபெரும் இறுதியாட்டம்

(மன்னார்)

மன்னார் கால்பந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்ட இலங்கை கால்பந்து சம்மேளன தலைவர் வெற்றிக் கிண் ணத்திற்கான மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் மாலை 3.30 மணிக்கு மன்னார் பொதுவிளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

மன்னார் கால்பந்தாட்ட லீக்கின் அங்கத்துவம் பெற்ற அணிகள் பல பங்குகொண்ட இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் மன்னார் பனங்கட்டுக்கொட்டு சென். ஜோசப் அணியை எதிர்த்து மன்னார் சின்னக்கடை கிறீன் பீல்ட் டி அணி மோதவுள்ளது.

இப்போட்டி நிகழ்வில் அனைத்து கால்பந்தாட்ட இரசிகர்களையும் கலந்து கொண்டு போட்டியாளர்களுக்கு உற்சாகமூட்டுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள் ளனர்.

இப்போட்டி நிகழ்விற்கு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபையின் கல்வி விளையாட்டு அமைச்சர் தி. குருகுலராஜா, வடக்கு மாகாண சபையீன் மீன்பிடி போக்குவரத்து கிராம அபிவிருத்தி வணிகத்துறை அமைச்சர் பி. டெனிஸ்வரன், மன்னார் நகர பிதா எஸ். ஞானப்பிரகாசம், இலங்கை கால்பந்தாட்ட சம் மேளனத் தலைவர் ரஞ்சித் ரொட்றிகோ, மாகாண உறுப்பினர்களான ஆர்னோல்ட், பிறிமுஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஆட்ட நிர்ணயத்திற்கு காரணம் ருவென்ரி-20

ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டிகள் அதிகளவில் நடத்தப்படுவதன் காரணமாகவே கிரிக்கெட் விளையாட்டில் ஆட்ட நிர்ணயம் மற்றும் மோசடிகள் இடம்பெறுகின்றன என்று இங்கிலாந்து முன்னாள் அணித்தலைவரானஇயன் போத்தம் தெரிவித்துள்ளார். கிளிநொச்சியிலிருந்து சீனிகம வரைக்கும் நடைபெறும் நிதி திரட்டும் நடைபவனி யில் பங்கேற்பதற்காக இயன் போத்தம் பங்கேற்கவுள்ளார். போத்தமின் செல்லப் பெயரை பயன்படுத்தி பிஸ் பிக் ஸ்ரீ லங்கா வோக் என குறித்த நடைபவனிக்கு பெயரிடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற முதல் நாள் நிகழ்வில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே போத்தம் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கிரிக்கெட் விளையாட்டில் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கே முக்கியத் துவம் அளிக்கப்படல் வேண்டும். சர்வதேச அரங்கில் ருவென்ரி-20 போட்டிகள் 4 வருடங்களுக்கு ஒரு தடவை உலகக் கிண்ணத் தொடராகவே நடத்தப்பட வேண்டும். வீரர்கள் தற்போதைக்கு ஓய்வின்றி போட்டிகளில் பங்கேற்றுவருகின்றனர். வீரர்கள் ஐ.பி.எல், பிக்போஸ் அல்லது வேறெந்த ருவென்ரி-20 போட்டிகளில் பங்கேற்பார்களாயின் சர்வதேச போட்டி அட்டவணையில் ருவென்ரி-20 போட்டிகள் உள்ளடக்கப்படக்கூடாது. ஆனால் அவ்வகையான போட்டிகள் தற்போது அதிகரித்துள்ளன. ஆட்ட நிர்ணயம் என்பது ஒரு புற்றுநோய். அதனை ஆரம்பத்திலேயே அழித்துவிட வேண்டும். அதற்காக நாம் சர்வதேச கிரிக்கெட் பேரவையை நாட வேண்டியதில்லை. விளையாட்டை நிர்வகிக்கும் அந்தந்த நாடுகளின் கிரிக்கெட் நிர்வாக சபைகளால் தமது வீரர்கள் தொடர்பில் பொறுப்புக்கூற முடியும். என்ன நடக்கிறது என்பதனை அனைவரும் அறிவார்கள். ஆகவே, விளையாட்டுத்துறையில் பணம் சம்பாதிக்க முடியுமானால் சம்பளம் பெறமுடியுமானால் அந்த நிர்வாகிகள் ஆட்ட நிர்ணயத்தை கட்டுப்படுத்த செயற்பட வேண்டும். அதனைவிடுத்து அதனை மறைப்பதால் இந்தப் பிரச்சினை தீராது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.






# சும்மா ஒன்றும் வரவில்லை

சுகு – ஸ்ரீதரன்

படையினர் முகாம்களுக்குள் செல்ல வேண்டும். அல்லது வேறு துறைகளுக்கு மாற்றப்பட வேண்டும் (ஐ.நாவின் படையணிகளில் இணைத்துக் கொள்ளுதல்(?) உட்பட) மக்களின் அன்றாடவாழ்வில் தலையீடு இருக்கக் கூடாது.

சிவில் வகைப்பட்ட ஒரு அதிகாரி ஆளுநராக வேண்டும்.

1990 இல் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் மீளவும் சொந்த நிலத்திற்குத் திரும்புவதற்கான அழைப்பு.

திட்டமிட்ட ஆக்கிரமிப்பு குடியேற்றங்கள் மற்றும் நிலம் தொடர்பான பிரச்சினைகளில்

ஓரளவு நிதானமாக வடக்கு முதலமைச்சர் தனது ஆரம்ப உரையை நிகழ்த்தியுள்ளார்.

முக்கியமாக மத்திய அரசும் மாகாண அரசும் பரஸ்பரம் ஒத்துழைத்துச் செயற்படவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

இத்தகைய போக்கிற்கான இடைவெளி கடந்தகாலத்தில் நிலவியிருந்தால் பல விடயங்களை சாதித்திருக்க முடியும்.

காலம் கடந்தாவது இத்தகைய சிந்தனை உருவாகியிருப்பது நல்லதே.

யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்கள், சிறைகளில் வாடுவோர், பெண்கள் மாத்திரம் தலைமை தாங்கும் குடும்பங்கள் இவர்களின் நலன்களுக்காக மாகாணசபை உறுப்பினர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்ற கோரிக்கையும் விடுத்துள்ளார்.

அதிகாரிகளுக்கும் இந்த கோரிக்கை பொருந்தும்.

மாகாண அரச அலுவலகங்களில் அதிகாரிகளுக்கு மாத்திரமல்ல பொதுமக்களுக்கும் ஆசனங்கள் இருக்கவேண்டும். மக்களின் சுயமரியாதை, கண்ணியம் காப்பாற்றப்பட வேண்டும்.

இலங்கையில் இனவாத - லஞ்சம் வாங்கும் - சமூகத்தின் ஒருபகுதியினர் மீது தீண்டாமை பாராட்டும் காவல் துறை என்ற ஒரு நீண்ட வரலாறே இருக்கிறது. பேரினவாதமும் - அதிகார வர்க்க - சாதி அகங்காரமும் - பெண்களை இழிவுசெய்யும் கறைபடிந்த காவல்துறை வரலாறொன்றிருக்கிறது. இந்த வரலாறு மீள எழுதப்படக் கூடாது.

இலங்கையின் நீதித்துறை சட்டம் ஒழுங்குத்துறையின் உதவியுடன் தான் இயங்குகிறது. ஆனால் நாடறிந்த செல்லரித்துப்போன இந்த காவல்துறை வரலாறு பற்றி எப்போதும் கேள்விக்குட்படுத்தியதில்லை. துறை போன நீதியாளர்கள் என்று சொல்லப் படுபவர்கள் எவரும் பதவியில் இருந்த போதோ இல்லாதபோதோ அனேகமாக இது பற்றி கேள்வி எழுப்பியதில்லை.

புதிய காவல்துறை பண்பாடொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். முழு இலங்கைக்கும் எடுத்துக்காட்டான மக்களுக்கு நட்பான காவல்துறை வடக்கில் உருவாக்கப்படவேண்டும்.

காவல்துறை எமது சமூகத்தில் பீதியூட்டும் ஒன்றாகவும், மக்கள் அணுக விரும்பாத ஒன்றாகவுமே காணப்படுகிறது.

அதிகாரவர்க்கத்தினருக்கு மக்களின் சுதந்திரம் - ஜனநாயக உரிமைகள் - தாம் மக்களின் சேவகர்கள் என்பதும் புரிவதில்லை.

அது புரிய வைக்கப்படவேண்டும்.

கிராமசேவகர் மட்டத்திலிருந்து மக்களுடன் மரியாதையாக நடந்து கொள்வது எப்படி என்பது போதிக்கப்படவேண்டும்.

எமது மரபுரிமையாக பெறப்பட்ட அதிகார தோரணைகள் என்ற இத்துப் போன மரவுரி களையப்படவேண்டும் .

அதிகார அடுக்கில் மேலுள்ளவர்கள் கீழ் அடுக்கில் உள்ளவர்கள் பொதுமக்கள் மீது காட்டும் அலட்சியத்தை கண்டுகொள்வதில்லை.

அது அவர்களுக்கு சௌகரியமாக இருக்கிறது.

பொதுமக்களுக்கான சேவை தொண்டு அர்ப்பணத்தின் அடிப்படையில் நிகழவேண்டும்.

இன்றைய ஜனநாயக சூழல் உருவாவதற்கு பங்களித்தவர்களை மறந்துவிட முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது தலைமைக்குழு கூட்டத்தை யாழ் பொது நூல்நிலைய மண்டபத்தில் நடத்தியிருக்கிறது. மகிழ்ச்சியாக இருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நூல்நிலையம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறக்க முற்பட்ட போது எத்தனை பிரச்சினைகள். அந்த நூலகம் இடிபாடுகளுடன் ஞாபகச்சின்னமாக இருக்க வேண்டும் என்று அராஜகங்கள் நிகழ்ந்தன.

அதிகாரப்பரவலாக்கலை - ஜனநாயகத்தை உருவாக்குவதற்கு எத்தனை பேருடைய உயிர்த் தியாகம் நிகழ்ந்திருக்கிறது. இரத்தம் சிந்தியிருக்கிறது.

சும்மா ஒன்றும் வரவில்லை.

எனவே ஜனநாயகத்தை நிலை நிறுத்துவதில் ஆட்சிக் கட்டமைப்பை உருவாக்குவதில் வரலாற்றில் நிகழ்ந்த தியாகங்களை மறவாதீர்கள்.

யுத்தத்திற்கு பிந்திய ஓரளவு சுதந்திரமான சூழலில் தேர்தலில் பங்குபற்றுவது வேறு.

ஜனநாயக இடைவெளி அறவே இல்லாதிருந்த காலத்தில் பாசிச - அராஜக சூழலில் வடக்கு-கிழக்கில் மாகாணசபை, உள்ளூராட்சி தேர்தல்களில் பங்குபற்றி - இரத்தம் சிந்தி - சவால்களை எதிர்நோக்கிய அந்த மரபு - தியாகமே இன்றைய வடக்கு மாகாண சபைத் தேர்தல் வரை முன்னேறி வந்திருக்கிறது.


வானத்தில் இருந்து எதுவும் வரவில்லை. புதிதாக எதுவும் ஆச்சரியங்களாக நிகழவில்லை.

இதனை புதிய மாகாண சபையை இயக்குபவர்கள் புரிந்து செயற்படவேண்டும். செயற்படுவார்களா?

# பிவிசி குழாயில் ஆடை!

அமெரிக்காவில், மிகவும் பிரபலமான “டிவி” நடிகை, கர்ட்னி ஸ்டட்டன். “பிக்பொஸ்” உள்ளிட்ட, ஏராளமான “டிவி” நிகழ்ச்சிகளில் இவர் பங்கேற்றுள்ளார். சமீபத்தில் லண்டன் சென்று, நீண்ட நாட்கள் அங்கு தங்கியிருந்த கர்ட்னி, சில நாட்களுக்கு முன் அமெரிக்கா திரும்பினார். இந்த இடைவெளியில், ஆளே, சுத்தமாக மாறிப் போய் விட்டார். லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள சேர் ரெஸ்டோரண்ட் என்ற ஹோட்டலில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக வந்திருந்த கர்ட்னியை பார்த்து, அங்கு வந்திருந்த அனைவரும் ஆச்சர்யத்தில் வாய் பிளந்தனர். வழக்கமான உடைக்குப் பதிலாக, நீல நிற பி.வி.சி. குழாயில் தயாரான உடையை அணிந்து வந்திருந்து, அனைவரையும் மயக்கம் அடையச் செய்தார். அதேபோல், கழுத்திலும் தங்க நிறத்திலான வளையத்தை அணிந்திருந்தார். “ஏன் இந்த விபரீத முடிவு” என அவரிடம் கேட்டபோது, “ஒரே மாதிரியான உடைகளை அணிந்து போரடித்து விட்டது. அதனால், சும்மா ஒரு சேஞ்சுக்காக இப்படி ஒரு உடையை வடிவமைத்தேன்...”என்கிறார் கர்ட்னி. இவர் இதுபோன்ற பரபரப்பை ஏற்படுத்துவது, இது முதல் முறையல்ல. இவருக்கு 19 வயது தான் ஆகிறது. ஆனால், 53 வயதுடைய டக் ஹட்சிசன் என்ற நடிகரை திருமணம் செய்து, ஏற்கனவே பரபரப்பை ஏற்படுத்தினார்.







- நீரின் கொதிநிலை 100 பாகை செல்சியஸ்.
- ஒரு குவிண்டால் என்பது 100 கிலோ எடையாகும்.
- ஒரு ஏக்கர் என்பது 100 சென்ட் ஆகும்.
- மனித உடலில் சுமார் 100 மூட்டுகள் உள்ளன.
- கூகம் என்ற எண்ணிற்கு 100 பூச்சியங்கள்.
- அமெரிக்க ஜனாதிபதியின் கார் எண் 100.
- நெப்போலியன் 100 நாட்களே ஆட்சி செய்தார்.
- பூதத்தாழ்வார் 100 பாசுரங்கள் பாடினார்.
- கென்கோர்ட் விமானத்தில் 100 இருக்கைகள் உள்ளன.
- கிரிக்கெட்டில் செஞ்சுரி என்பது 100 ஓட்டங்களைக் குறிக்கும்.

# அதன் பிறகு

தஸ்லிமா நஸ்ரீன்
தமிழில்: சிபிச்செல்வன்



என் சகோதரி ரவீந்திரநாத் தாகூரின்
பாடல்களைப் பாடுவது வழக்கம்
அவள் சிமோன் தி புவோவை
விரும்பிப் படிப்பதும் வழக்கம்.
மதிய குளியலை மறந்து
அவள் தன்னை மறந்து கார்ல் மார்க்ஸ்,
கார்க்கி, டால்ஸ்டாய்,
மற்றும் மாணிக் பந்தோபாத்யாய நாவல்கள்
போன்றவற்றில் மூழ்குவாள்.
அவளுடைய பழைய ஞாபகத்தில் மூழ்குவதற்கு
லாரா இன்கல்ஸ் வைல்டர்தான் பிடித்தமானவர்
போரைப் பற்றிய காட்சிகளைப் பார்த்தால்,
பாதி ராத்திரிவரை அழுது கொண்டேயிருப்பாள்.
என் சகோதரி அருமையான கவிதைகளை வாசிப்பாள்
அவளுக்கு விருப்பமான சங்கா கோஷ்,
நீரேந்திரநாத் சக்கரபாரதி, நெருடா,
மற்றும் யெவ்துஜூங்கோ
என் சகோதரி காட்டை நேசித்தாள், தோட்டத்தையல்ல;
அவள் சிலைகளை விரும்புவாள்.
ஒரு முறை இவற்றிற்காகப் பாரீஸ் போக டிக்கெட் வாங்கினாள்,
இப்போது என் சகோதரியின் கவிதை நோட்டில்
காய்கறி பற்றிய விவரங்களை எழுதி வைத்திருக்கிறாள்,
இப்போது பெருமையோடு சுற்றி வருகிறாள்,
உடல்நிறைய உலோக ஆபரணங்களை அணிந்து
அவள் பெருமையோடு சொல்கிறாள்
அரசியலைப்பற்றி எண்ணியதில்லை
கலாசாரம் எக்கேடும் கெட்டுப்போகட்டும்
அதுபற்றி அவள் கவலைப்படுவதில்லை.
அவளின் வீணை மீது தூசி படிந்திருக்கிறது,
அவளின் தம்புரா எலி வலையானது
இப்போது அவள் கடை வீதிகளுக்குப் போய்
வீட்டிற்கு தேவையான பொருட்களைச் சேகரிப்பதில்
கெட்டிக்காரியாகி விட்டாள்.




# மும்பை பொலிஸ்

- அதிஷா -

கேரளாவில் சூப்பர் ஸ்டார் அந்தஸ்தோடு இருக்கிற ப்ருதிவிராஜ் நடித்த படம் மும்பை பொலிஸ். இந்தியாவின் எந்த முன்னணி ஹீரோவும் நடிக்கத் தயங்குகிற ஒரு பாத்திரத்தை ஏற்று நடித்தமைக்காகவே அவரை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம்.

ஒரு கொலையை துப்பறியும் சாதாரண கதையை கொண்டதுதான் மும்பை பொலிஸ். ஆனால் யார் துப்பறிகிறார்கள்? எது துப்பறியப்படுகிறது? என்பதில்தான் இத்திரைப்படம் வித்தியாசப்படுகிறது.

கேரள சினிமா வரலாற்றில் கணிசமான அளவு துப்பறியும் படங்களை பார்க்க முடியும். மோகன்லாலும் மம்முட்டியும் சுரேஷ்கோபியும் கேரளா முழுக்க தெருத்தெருவாக துப்பறிந்து திரிந்திருக்கிறார்கள். என்னென்ன வகை குற்றங்களை எப்படியெல்லாம் கண்டுபிடிக்க முடியும் என்று கேரளாவின் பாமரனும் கூட தீசிஸ் எழுதும் அளவுக்கு வெவ்வேறு களங்கள் வெவ்வேறு குற்றங்கள் வெவ்வேறுவிதமான துப்பறியும் முறைகள் என அது தனி வரலாறு! அதனாலேயே சமீபத்திய மலையாள துப்பறியும் வகை படங்கள் தங்களை தனித்து காட்டிக்கொள்ள மிகுந்த மெனக்கெடலை மேற்கொள்கின்றன.

மோகன்லால் நடித்த ரெட்வைன் கூட அப்படிப்பட்ட முயற்சிதான்.

அப்படி ஒரு நீண்ட துப்பறியும் சினிமா வரலாறு இருப்பதால்தான் இப்படி ஒரு படம் சாத்தியமாகியிருக்க வேண்டும் என்று படம் பார்க்கும் போது தோன்றுகிறது.

முரட்டுத்தனமான காவல்துறை அதிகாரியான நாயகன் தீர்க்க முடியாத ஒரு வழக்கின் புதிர் முடிச்சின் விடையை தன் உயர் அதிகாரிக்கு சொல்ல போனில் அழைக்கிறான். போனில் பேசிக்கொண்டே ஜீப்பில்வர அவனுடைய வண்டி விபத்துக்குள்ளாகிறது. விபத்தில் எல்லாமே மறந்துபோகிறது. அவன் அத்தனை மாதங்களும் அலைந்து திரிந்து சேர்த்த அந்த கொலைவழக்கின் குற்றவாளி யார் என்பதும் கூட... மீண்டும் முதலிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்... இதுதான் படத்தின் முதல் காட்சி... இங்கே பிடிக்கிற சூடு... அனல்குறையாமல் இறுதிவரை வெறித்தனமாக பாய்கிறது.

படத்தின் நாயகனான ப்ருதிவிராஜ் விபத்துக்கு முன்பு வெறித்தனமான எந்த செண்டிமெண்ட்டும் இல்லாத ஒரு பொலிஸ் அதிகாரியாகவும், விபத்துக்கு பின் எல்லாம் மறந்துபோய் மனதெல்லாம் அன்பு வழியும் சாந்தசொரூபியாகவும் இரண்டு வெவ்வேறு குணாதியசங்களை மிகச்சிறிய நுணுக்கமான உடல்மொழி களால் முகபாவனைகளால் வெளிக்காட்டிஇறார். படத்தின் இன்னொரு நாயகன் ரகுமான். ராம் படத்துக்கு பிறகு அவரை சிறப்பாக இப்படத்தில் பயன்படுத்தியிருந்தார்கள்.

இப்படத்தின் திரைக்கதை அமைப்பும் கதைசொன்ன முறையும் மிகவும் சிக்கலானது. என்றாலும் அதை மிக எளிமையாகவும் அதே சமயம் சிறப்பாகவும் கொடுத்து பாராட்டுக்குரியது. ரிச்சான படமாக்கலும் எங்குமே உறுத்தாத இசையும் படத்திற்கு மேலும் சிறப்பு. இந்த ஆண்டு வெளியான எண்ணற்ற சிறந்த மலையாளப்படங்களை வரிசைப்படுத்தினால் என்னுடைய வரிசையில் இந்தப்படம்தான் முதலிடம் பிடிக்கும். அப்படி ஒரு பிரமாதமான திரில்லர் இப்படம்.



# தமிழர்களுக்கென தனியான காவல்துறையை கோருதல்

- சாலையூரான் -

வட மாகாண சபையின் முதல் அமர்வில் வடக்கிலுள்ள இளைஞர்களை உள்ளடக்கும் தனியான காவல் துறையை உருவாக்க ஆலோசனை முன்வைக்கப் பட்டிருக்கிறது. கன்னி அமர்வில் உரையாற்றிய முதலவர் விக்னேஸ்வரன், வடக்கில் சட்டத்தின் ஆட்சி நிறுவப்பட வேண்டும். இதற்கு எமது மக்களின் மொழி, கலை, கலாசாரம், வாழ்க்கை முறை புரியாத பொலிஸ் படை இருப்பது தொடர்ந்தும் தடையாக இருப்பதாக சுட்டிக்காட்டி இருக்கிறார். கூடவே உள்ளூரிலிருந்து தமிழ் பொலிஸார் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்ற கருத்தையும் அவர் முன்வைத்திருக்கிறார்.

இந்தக் கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள பொலிஸ் மா அதிபர் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கேட்பது போன்று வடக்குக்கு தனி யான பொலிஸ் படையை அமைக்க முடியாது. நாட்டின் அனைத்து மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி ஒரு பொலிஸ் துறை மாத்திரமே இருக்க முடியுமென குறிப்பிட்டிருக்கிறார்.

தேர்தலில் தமிழ் கூட்டமைப்பு கூடுதல் வாக்குகளால் ஈட்டிய பெருவெற்றியை அடுத்து மாகாண சபையின் நிர்வாகம் எவ்வாறு அமையப்போகின்ற தென்பதில் தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு எதிர்பார்ப்புக்களிடையே சபையின் முதலாவது அமர்வு கடந்த 25ஆம் திகதி நடைபெற்றது.

வடக்கிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்பதும் போரில் மரணித்த புலிப்போராளிகளுக்கு நினைவுச்சின்னம் அமைக்க வேண்டுமெனவும் தமிழ் கூட்டமைப்பின் தரப்புகளிலிருந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதையடுத்து இந்த மாகாணசபை அமர்வு தென்னிலங்கை தரப்புகளின் அக்கறைக்குரிய செய்தியாகவும் மாறியிருந்தது.

போதாக்குறைக்கு குடாநாட்டிலிருந்து வெளியாகும் சில தமிழ் நாளிதழ்களும் சேர்ந்துகொண்டு "வடக்கில் கன்னி அமர்வுடன் நடை பயில ஆரம்பித்தது தமிழர் அரசு" என்பதாக தமது தலையங்கங்களை தீட்டியிருந்தன.

அவையெல்லாம் தென்னிலங்கை தரப்பையும் கூடவே அரசுத்தரப்பையும் உசுப்பேற்றும் நோக்கோடு எழுதப்பட்ட செய்திகள் என்பதில் ஐயமில்லை.

வடக்கின் இன்றைய சூழலில் மொழிதெரியா பொலிஸார், எமது மக்களின் நிலையுணர்ந்து முழுமையாக செயற்படுவதில் பல நெருக்கடிகளை எதிர்கொண்டிருப்பது நாம் புரிந்துகொள்ளக்கூடியதே.

குறிப்பாக இளைஞரி டையே மதுப்பழக்கம், கலாசார சீரழிகள், ஆலயங் களில் இடம்பெறும் திருட்டுக்கள், கைத்தொலை பேசி கலாசாரத்தின் பின் குடும்பங்கள் மத்தியிலும் குடும்பங்களுக்கிடையேயும் தோன்றியுள்ள பிணக்குகளை எல்லாம் கையாள்வது காவல்துறைக்கு ஒரு சவாலான விடயமாகவே மாறியிருக்கிறது.

நமது சூழலில் உருவாகியுள்ள புதிய நெருக்கடி என்பது நீண்டகால போர்ச்சூழல், ஏற்கனவே எமது சமூகம் கொண்டிருந்த பண்புகள், பழக்க வழக்கம், கலாசார நடைமுறைகளில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தின் ஒரு மறுவிளைவாகும்.

இதில் பிரதானமாக கவனிக்கப்பட வேண்டியது எமது சூழலில் இதற்கான சிவில் அமைப்புக்கள் செயலிழந்திருப்பதாகும். இந்த அமைப்புக்களின் முறையான செயற்பாட்டுக்கு இன்றைய வடக்கு மாகாண சபை முறையான வேலைத்திட்டமொன்றை வகுக்குமாயின் நீண்டகாலத்தில் எமது சமூகம் சீரிய வழிப்பட வாய்ப்பிருக்கிறது.

மாதிரிக்காக இதற்கான வேலைத்திட்டமொன்றை வகுத்துக்கொண்டு வடக்கு மாகாணசபை மத்திய அரசின் உதவியுடன் அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சித்திருக்கலாம். இதில் பொலிஸ் பொதுமக்கள் உறவை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதை நடைமுறையில் வடமாகாண சபை நிர்வாகம் பரீட்சித்து பார்க்க முயல்வதே சரியான வழிமுறையாகும்.

நிற்க, எமது தமிழ் சூழல் பல்நிலை ஏற்றத்தாழ்வுகளையும் அந்தந்த மட்டத்தில் தமக்கான அதிகாரங்களை நிலைநிறுத்தை முனையும் ஒரு போக்கையும் கொண்டிருப்பதை இவ்விடத்தில் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

80களுக்கு முந்திய ஒரு சூழலில் தமது அடிப்படை வசதிகளுக்காக வாழ்வாதாரத்துக்காக தமக்கு உரிமை கோரி அல்லது தமது பிரச்சினைகளுக்கு தீர்வு வேண்டி அப்போது குடாநாட்டில் தமிழ் மக்கள் மத்தியில் இடம்பெற்ற போராட்டங்கள், சமூக வன்முறைகள் கவனத்துக்குரியன.

தமது குடியிருப்பு நிலங்களுக்காகவும் கல்வி தொழில் வாய்ப்புக்களில் தமக்கும் வாய்ப்பு கோரி சமூகத்தில் சமத்துவம் கோரியும் நிகழ்த்திய போராட்டங்களின்போது இதே காவல்துறையை அந்த மக்கள் எதிர்கொண்டிருந்தனர்.

அன்றைய இடதுசாரித் தலைமைகளால் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்காக நீதிமன்றில் பேச அப்போதிருந்த தமிழ் வழக்கறிஞர்கள் எவரும் முன்வரவில்லை. இந்தத் தகவல் இன்று பொலிஸ் அதிகாரத்தை கோரிநிற்கும் தமிழ் கூட்டமைப்பின் வடக்கு மாகாணசபை நிர்வாகத்துக்கு சமர்ப்பணம்.


போருக்குப் பிந்திய இந்த நான்காண்டு காலத்தில் வடமா காண மக்களுக்காக அரசால் பல்வேறு நலத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. வீதி, வீடுகள், மலசல கூட நிர்மாணம், இழப்பீட்டுக்கு நிதி உதவிகளை பெறுவதில் இன்னும் தேவைகளிருப்பதாக குடாநாட்டுடன் மிகவும் பின்தங்கிய மக்கள் வாழும் பகுதிகளிலிருந்து முறைப்பாடுகள் வந்த வண்ணமுள்ளன.

ஆனால் வடக்கு மக்களை பொறுப்பேற்றுள்ள புதிய நிர்வாகம் தமிழ் சமூகத்தின் இந்த அகநிலை முரண்பாடுகளை கவனிக்க முடியாத அளவுக்கு அரசுடன் பிரச்சினைகளை வளர்த்துக்கொண்டுள்ளதாக தெரிகிறது.

இனத்தின் பெயரால் உரிமை கோர முற்படும் எமது தமிழ் தலைவர்கள் அவ்வினத்துக்குள்ளேயே நிலவும் ஒதுக்கல் விலக்கல்களுக்கு தாம் கோரும் பொலிஸ் அதிகாரத்தை எவ்வாறு பயன்படுதிக் கொள்வார்கள் என்பதையும் இவ்விடத்தில் கேட்டுக்கொள்ள வேண்டி இருக்கிறது.

மறுபுறத்தில் இனத்தின் பேரால் அரசுக்கு விடுக்கும் இந்த கோரிக்கைகள் அரசுடன் முரண்படுவதை நோக்கி இருப்பதால், இந்த பொலிஸ் அதிகாரம் ஏதிலிகளாக கையேந்தி நிற்கும் பின்தங்கிய டிக்கள் மீது மேலாண்மையாக மாறி அவர்களை மேலும் துன்பத்திற்குள் தள்ளிவிடாது, மாகாணசபை தலைவர்கள் பார்த்துக்கொள்வார்களா என்பதையும் கேட்டுக்கொள்ள வேண்டி இருக்கிறது.

# எயிட்ஸ் நோயைக் கண்டறியும் மொபைல் கருவி




அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் உள்ள நனோபயோசிம் என்ற நிறுவனமானது மரபணு ராடார் எனப்படும் விலை குறைந்த அதேசமயம் ஒரு மணி நேரத்தில் எயிட்ஸ் நோயைக் கண்டறியக் கூடிய மொபைல் கருவி ஒன்றினைக் கண்டுபிடித்துள்ளது. ஒரு மனிதனின் இரத்தம், உமிழ்நீர் அல்லது உடல் திரவத்தில் ஏதாவது ஒரு துளி எடுத்து நனோ சிப்பில் வைத்து இந்தக் கருவியின் மூலம் பரிசோதித்தால் ஒரு மணி நேரத்தில் எயிட்ஸ் நோயைக் கண்டறிய முடியும் என்பது இதன் சிறப்பம்சமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




அதுமட்டுமின்றி, மரபணு தடம் கொண்ட நோய்களையும் இந்த ராடார் கருவி மூலம் எளிதில் அறிந்து உடனடி மருத்துவ சேவைகளை ஒருவர் மேற்கொள்ள முடியும். உட்கொள்ளும் மருந்துகளைப் பாதிக்கும் குளூடன் போன்ற காரணிகளுக்கு நோயாளியின் எதிர்ப்புத் தன்மையையும் இதன் மூலம் கண்டறிய முடியும் என்பதுவும் இந்தக் கருவியின் சிறப்பம்சமாகும்.

# சந்தையை கலக்கும் லெனோவா P 780




லெனோவா நிறுவனத்தின் புதிய அறிமுகமான லெனோவா P780 தற்போது சந்தையை கலக்கிக்கொண்டிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் பல சிறப்பம்சங்கள் இருப்பது தான்.


Gorilla Glass-வுடன் வெளிவரும் இந்த ஸ்மார்ட் போன் 4GB Internel Memory-யை கொண்டுள்ளது.

இது அன்ட்ரோய்ட் 4.2.1 ஜெல்லி பீன்ஓ.எஸ்ஸால் இயங்கக் கூடியதாகும் இதில் 8MP கமரா உள்ளது, இது உங்களது அழகிய தருணங்களை அதிக துல்லியத்தில் படம் பிடிக்கும்.

இதில் 2MP இற்கு பிரண்ட் கமரா உள்ளது, 3G, 1.2 புர்ண ப்ரொஸஸர் என அனைத்துமே உள்ளது.

மற்ற மொபைல்களில் இருக்கும் பற்றரிகளை விட வலுவான 4000 mAh பற்றரி இதில் பொருத்தப்பட்டுள்ளது, இது அதிக பற்றரி திறனை உங்களுக்கு தருகிறது. இதன் எடை 176 கிராம் மட்டுமே.

# Internet இணைப்பை Wi-fi மூலமாக பகிர்தல்



கணனியில் Internet இணைப்பை பயன்படுத்த Wi-fi,LAN,Cable Modem, Dial-up, Cellular, USB Dongle போன்றவற்றில் ஏதாவது ஒன்றை பயன்படுத்துவீர்கள் இதனை எந்தவொரு Router-உம் இல்லாமல் உங்கள் கணனியில் இருந்தவாறே Wireless பயன்படுத்தக்கூடிய Laptop, Smart Phone, iPod Touch, iPhone, Android Phone, Netbook, போன்றவற்றுக்கு Wireless மூலம் இணைப்பை பகிர்வதற்கு Virtual Router எனும் சிறந்த மென்பொருள் பயன்படுகிறது.

Virtual Router மென்பொருளை பயன்படுத்துவதற்கு உங்கள் கணனியின் Operating System Windows 7 ஆக இருக்கவேண்டும் மற்றும் உங்கள் கணனி Wireless பயன்படுத்தக்கூடியதாக இருக்கவேண்டும். Lap வழி கணனிகளில் Wireless சேவை இணைந்தேதான் வருகிறது Desktop கணனி என்றால் Wireless Device தனியாக போட்டிருக்கவேண்டும்.

சரி இதனை டவுன்லோட் செய்து எவ்வாறு பயன்படுத்துவது என்று பார்ப்போம்.

1. முதலில் Virtual Router என்ற மென்பொருளை டவுன்லோட் செய்து உங்கள் கணனியில் Install செய்து கொள்ளவும்.

2. Install செய்த Virtual Router மென்பொருளை Open செய்து கொள்ளவும் பின்பு கீழே படத்தில் உள்ளவாறு வரும்

அதில் Network Name (SSID) என்பதில் உங்களுக்கு விரும்பிய ஒரு பெயரை கொடுக்கவும்

Password என்பதிலும் உங்களுக்கு விரும்பிய ஒரு Password -ஐ கொடுத்து Start Virtual Router என்பதை கிளிக் செய்யவும்.

3. இப்பொழுது உங்கள் கணனியில் இருந்து நீங்கள் கொடுத்த நேவறழசம பெயரில் Wireless இணைப்பு பகிரப்படும்.

இதனை வேறு கணனி அல்லது Mobile Phone - களுக்குப் பயன்படுத்த வேண்டுமென்றால் நீங்கள் கொடுத்த Password ஐ கொடுத்து இணைப்பை இணைத்துக் கொள்ளலாம்.

# போலி மின்னஞ்சல் அனுப்புபவர்களையும் முகவரிகளையும் கண்டறிவதற்கான இணையம்!




உங்களது மின்னஞ்சல் முகவரிக்கு பல மின்னஞ்சல்கள் யார் அனுப்பினார்கள் என்றே தெரியாமல் வந்திருப்பதை அவதானித்திருப்பீர்கள். அப்படியான மின்னஞ்சல்கள் பற்றிப் பலர் கவலை கொள்வதே இல்லை. ஆனால் அப்படியான மின்னஞ்சல்கள் ஆபத்து நிறைந்தவை. அவற்றில் பல உங்கள் தனிப்பட்ட தகவல்களை திருடும் நோக்கில் அனுப்பப்பட்டவையாக இருக்கும். இவற்றை அனுப்புபவர்கள் தமது பெயரை மறைத்தே அனுப்புவார்கள். இப்போது ஜிமெயில், யாகூ போன்ற பிரபல மின்னஞ்சல் வழங்குனர்கள் Spam Filters ஐ பயன்படுத்தி இவ்வாறான மின்னஞ்சல்களை இனங்கண்டாலும், அதையும் மீறி சில மின்னஞ்சல்கள் வரத்தான் செய்கின்றன.

Phissing எனப்படும் முறையை பயன்படுத்தி அனுப்பப்படும் போலி மின்னஞ்சல்கள் Spam Filters இன் கண்களில் இருந்து தப்பிவிடுகின்றன. கடந்த சில மாதங்களாக இவ்வாறான Phissing மின்னஞ்சல்கள் பரவலாக எல்லோருக்கும் வரத்தொடங்கியுள்ளன. ஆகவே அடையாளம் தெரியாமல் வரும் மின்னஞ்சல்களை திறக்காமல் இருப்பதுதான் பாதுகாப்பு. அப்படி இல்லை கட்டாயம் திறந்து பார்க்க வேண்டும் என்றால் இருக்கவே இருக்கிறது ஒரு வழி உங்களுக்கு வரும் மின்னஞ்சலின் முகவரியை இந்த தளத்தில் கொடுத்தால் அது பற்றிய சகல விபரமும் கொடுக்கிறார்கள்.

அது போலியாக இருந்தால் சிவப்பு நிறத்தில் அடையாளமிட்டுக்காட்டும். அருகில் உள்ள info என்பதை கிளிக் செய்தால் அந்த மின்னஞ்சல் முகவரி தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

இணையத்தள முகவரி -- http://tools.email-checker.com/

# ஹாக் செய்யப்பட்ட பேஸ்புக் கணக்கை திரும்பப் பெறுவதற்கு




இன்றைய உலகில் பேஸ்புக் என்பது மனிதனின் அன்றாட தேவையாகவே மாறி வருகிறது எனலாம், அந்த அளவுக்கு உலகத்தையே கவர்ந்து வருகிறது.

பெரும்பாலானோர் இணையத்துக்கு வருவதே பேஸ்புக்கை பயன்படுத்தத் தான் என்ற அளவுக்கு பரந்து விரிந்துள்ளது.

நம்முடைய தனிப்பட்ட தகவல்கள் பல பேஸ்புக்கில் உள்ளது. இந்த நிலையில் நமது அக்கௌன்ட்டை யாரேனும் ஹாக் செய்து விட்டால்? உங்களுக்கு பெரிய அதிர்ச்சியான செய்தி.

அது ஹாக்கர் உங்கள் Account மூலம் நிறைய விசயங்களை செய்து விட வாய்ப்பு உள்ளது. இந்த நிலையில் ஹாக் செய்யப்பட்ட பேஸ்புக் கணக்கை திரும்பப் பெறலாம்.

முதலில் உங்கள் அட்ரஸ் பாரில் டைப் செய்து பேஸ்புக்கை ஓபன் செய்யவும். ஒரு முறை உங்கள் தகவல்களை கொடுத்து லொக்-இன் செய்ய முயற்சி செய்யவும்.

லொக்-இன் ஆகாவிட்டால் இந்த இணைப்புக்கு சென்று "My Account Is Compromised" என்பதை கிளிக் செய்து அடுத்த பக்கத்திற்கு வரவும்.

அதில் கேட்கப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் ஒன்றை தரவும். இதில் முதல் பகுதியை பயன்படுத்தி மீட்க தான் பெரும்பாலும் வாய்ப்பு அதிகம்.

Email -sign in செய்ய பயன்படுத்தும் மின்னஞ்சல் Phone - நீங்கள் பேஸ்புக்கில் கொடுத்துள்ள போன் நம்பர் Facebook username: உங்கள் Profile பக்கத்தில் நீங்கள் பார்க்கலாம்.

உங்கள் User Name உங்களுக்குத் தெரியாவிட்டால் நண்பர்களிடம் சொல்லிக் கேட்கலாம். அவர் உங்கள் Profile-ஐ பார்த்தால் தெரியும்.


நண்பர் பெயர் கொடுத்து தேடுவது கொஞ்சம் கடினமான தேடல். இப்போது நீங்கள் கொடுத்த தகவல்படி உங்கள் பேஸ்புக் கணக்கு காட்டப்படும்.

உங்கள் இப்போதைய பாஸ்வேர்ட் கொடுத்து உள்ளே செல்லலாம், அல்லது பழைய பாஸ்வேர்ட் கொடுத்து Password Reset செய்ய முயற்சி செய்யலாம்.

பழைய பாஸ்வேர்ட் என்றால் உங்கள் ஈமெயில் கணக்கை நீங்கள் ஓபன் செய்யும் நிலையில் இருக்க வேண்டும். அதில் உங்களுக்கு ஒரு code வரும், அதை நீங்கள் கொடுத்தால் உங்கள் பேஸ்புக் கணக்கை ஓபன் செய்ய முடியும்.

இதில் மீட்க முடியவில்லை என்றால் ஐ can't identify my account என்ற பக்கத்தில் நீங்கள் தகவல்களைக் கொடுக்க வேண்டும். இதில் உங்கள் தகவல்களின் படி பேஸ்புக் உங்களை விரைவில் தொடர்பு கொள்ளும்.

# மனித மூளையை ஒத்த கணனி உருவாகியது!



மனித மூளையை போன்று மின்னணு இரத்தத்தால் இயங்கும் கணனியை வடிவமைத்து IBM நிறுவனம் சாதனை படைத்துள்ளது. மனித உடல் உறுப்புகளிலேயே மிகவும் முக்கியமானது மூளை. இதனைப் போன்று மின்னணு இரத்தத்தால் இயங்கும் கணனியை வடிவமைத்து IBM நிறு வனம் சாதனை படைத்துள் ளது. அதாவது, மனித மூளையை போன்று கணனி ஒருவகை திரவத்தால் சக்தியை பெறுவதுடன் அதே திரவத்தால் தன்னை வெப்பம் நீக்கி குளுமைப்படுத்தியும் கொள்ளும்.

மூளையில் உள்ள குருதிச் சுற்றோட்டத்தொகுதி போன்ற ஒன்று, ஒருவகை மின்னணு இரத்தத்தை கணனியின் வழியாக ஓடச் செய்வதன் மூலம் அந்தக் கணனிக்கான சக்தியை அதன் உள்ளே கொண்டு செல்லும். அத்துடன் அதிலிருந்து வெப்பத்தை வெளியேயும் கொண்டுவரும். சூரிச்சில் உள்ள இந்நிறுவனத்தின் சோதனைக் கூடத்தில் இவ்வாறு செயற்படக்கூடிய கணனியின் செயல்முறை விளக்கத்தை IBM விஞ்ஞானிகள் வழங்கினர்.

மேலும் 2060ஆம் ஆண்டளவில் முழுமையடையக் கூடிய இந்த முயற்சியின் மூலம், தற்போதைக்கு ஒரு கால்பந்தாட்ட மைதானத்தின் அரைவாசி அளவுக்கு பெரியதாக இருக்கக்கூடிய கணனியை ஒரு மேசையில் வைக்கும் அளவுக்கு சிறியதாக உருவாக்கிவிட முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் நடந்த பொது அறிவுப் போட்டியில் ஒரு கணனி மனித மூளையை தோற்கடித்து விட்டது. எனினும் இது நியாயமற்றது என்று கூறும் விஞ்ஞானிகள், மனித மூளை 20 Watts சக்தியை மட்டுமே பயன்படுத்தியது என்றும், கணனியோ 85,000 Watts சக்தியை பயன்படுத்தியது என கூறுகின்றனர். இந்த கேள்விகளுக்கு புதிய மின்னணு இரத்தத்தால் செயல்படும் கணனிகள் பதில் கூறும் என IBM நிறுவன விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# அவசர சிகிச்சை பிரிவை ஆரம்பிக்குமாறு கோரிக்கை

(கொடிகாமம்)

வரணி பிரதேச வைத்தியசாலையானது 08 இற்கு மேற்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய பகுதி மக்கள் பயன்படுத்தும் வைத்திய சாலையாக விளங்குகின்றது.

3152 குடும்பங்களைக் கொண்ட 10152 அங்கத்தவர்களிற்கு மேற்பட்டவர்கள பயன்படுத்தி வருகின்றனர்.

வரணி பிரதேச வைத்திய சாலையில் தினமும் பெருமளவான பொதுமக்கள் சிகிச்சை பெற்று வருகின்றபோதும் அவசர சிகிச்சை பிரிவு இல்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். பொதுமக்கள் சிகிச்சை பெறுவதற்கு பயன்படுத்தும் இருக்கைகளிலே (படிகள்) அவசர சிகிச்சை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனமெடுத்து வரணி பிரதேச வைத்தியசாலைக்கு அவசர சிகிச்சை பிரிவை அமைக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (130)

## கல்விப்பணி மன்றத்தால் இலவச நூல்கள் அன்பளிப்பு

(மானிப்பாய்)

வெற்றிமணி கல்விப்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் பாடசாலை நூலகங்களிற்கான இலவச நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு இந் நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக ஆனைக்கோட்டை றோ.க.த பாடசாலைக்கும், ஆனைகோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலைக்கும் இவ் நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இந் நிகழ்வுகளில் வெற்றிமணி யாழ். இதழின் ஆசிரியர் திருமதி இளங்கோவன், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் உஷாந்தன், வெற்றிமணி கல்விப்பணி மன்ற இணைப்பாளர் சுபோதினி உள்ளிட்டவர்கள் பங்கு கொண்டு மாணவர் களிற்கான நூல்களை வழங்கி வைத்தனர்.

தொடர்ச்சியாகவும் பாடசாலைகளிற்கு இவ்வாறு நூல்கள் அன்பளிப்புச் செய்யப்படுமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (48)

## சிறந்த நூலகங்களுக்கு விருது



(ஊர்காவற்றுறை)

2012ஆம் ஆண்டின் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித்திட்டங்களை சிறப்பாக செயற்படுத்தி ஆவணப்படுத்திய சிறந்த நூலகங்களுக்கான விருதுகள் அண்மையில் இலங்கை மன்றக் கல்லூரியில் கல்விச் சேவைகள் அமைச்சர் தலைமையில் நடைபெற்ற விழாவில் வைத்து வழங்கப்பட்டன.

ஊர்காவற்றுறை பிரதேசசபையின் அனலைதீவு பொது நூலகத்துக்கான விருதை அனலைதீவு பொது நூலகர் செந்தூரான் தர்மிளா, நாரந்தனை பொது நூலகத்துக்கான விருதை நூலக உதவியாளர் நாகநாதி சரஸ்வதி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.




நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் வடமராட்சி கரவெட்டி பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற இலவச மூக்குக்கண்ணாடி வழங்குதலும், மருத்துவ ஆலோசனை வழங்கும் நிகழ்வில் பெருந்திரளான மக்கள் கலந்து பயன் பெற்றதுடன் 300 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. (48)

## பாலங்கள் புனரமைப்பு

(கொடிகாமம்)

ஏ-9 வீதியில் உள்ள ஆனையிறவு பகுதியில் இரண்டு பாலங்களின் புனரமைப்பு பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யுத்த காலத்திற்குள் முழுமையாக சேதமடைந்திருந்த பாலமானது இரும்பு பாலம் கொண்டு புனரமைக்கப்பட்டிருந்தது.

பாரிய பொருட்களை ஏற்றிக் கொண்டு கனரக வாகனங்கள் அடிக்கடி போக்குவரத்து செய்வதனால் இரும்பு பாலங்கள் சேதமடைந்திருந்தன. இதனை கருத்திற்கொண்டு தற்பொழுது கொங்கிறீற் தூண்கள் மூலம் பாலம் அமைக்கும் பணி நடைபெற்றுவருகின்றது. (130)

# நீதிமன்றச் செய்திகள்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியில் பல இலட்சம் ரூபா பெறுமதியான பாலை மரங்களை தறித்துக் கொண்டிருந்த வேளையில் கைது செய்யப்பட்ட ஐந்து பேரை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்பின் போதே மேற்படி ஐவரும் கைது செய்யப்பட்டு புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். (170)

□ □ □

முல்லைத்தீவு கொல்லவிளான்குளம் பகுதியில் 150000ரூபா பெறுமதியான நகைகளை மோசடி செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட 3 நபர்களுக்கு தனித்தனியாக ஒரு வருடகடூழியச் சிறைத்தண்டனை விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தீர்ப்பளித்துள்ளார்

02.07.2013 அன்று தாக்கல் செய்யப்பட்ட இவ் வழக்கில் விசாரணையின் பின் இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நகைகள் மீட்கப்பட்டு உரிமையாளர்களிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது

□ □ □

திருமுறிகண்டி பிரதேசத்தில் மனைவியை தடியால் கடுமையாகத் தாக்கிய குற்றச்சாட்டில் இரண்டு வார காலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 6 மாதகால கடூழியச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நபர் தன்னைத் தாக்கி இரண்டு தடவைகள் தான் வைத்தியசாலையில் இருந்ததாகவும் வீட்டிற்கு செல்ல முடியாத நிலையில் இருந்ததாகவும் மன்றில் தெரிவித்திருந்தார்.

□ □ □

துணுக்காய் கல்விளான் பகுதியில் மது போதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொண்ட நபரை சமுதாய சீர்திருத்த பிரிவினூடாக நதிமன்றிலும் மாஞ்சோலை வைத்தியசாலையிலும் 6 நாட்களுக்கு துப்புரவு வேலைகளில் ஈடுபடுமாறு நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி நபர் குடித்துவிட்டு தகாத வார்த்தைகளை பேசி பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (170)

# பதிவிறக்கப் பெட்டகம்

பொதுவாக நம் தமிழர்களுக்கு நகைச்சுவை உணர்ச்சி கிடையாது, அப்படியே தப்பித்தவறி இருந்தாலும் அது குறைவாகவும் ஒருவழிச்சாலையாகவும் இருக்கும் – அதாவது மற்றவர்கள் கிண்டலடிக்கப்படும் போது, பகடி செய்யப்படும் போது அதனால் புளகாங்கிதம் அடைவோம். ஆனால், நம்மை யாராவது, நாக்கின்மேல் பல்லைப்போட்டுச் சொன்னால்.... அவ்வளவுதான்! நமக்கு, அதனைப் பொறுக்கவே முடியாது. கோபப்படுவோம், அழுது மூக்கைச் சிந்தி பிலாக்கணம் வைப்போம், 'என் கையறுநிலையைப் பாரீர்' என சக பேராண்மைக் குறைவாளர்களிடம் முறையிடுவோம். நமது இனத்தை நினைவுபடுத்திக்கொண்டு, நாம் இந்த இனத்தைச் சார்ந்தவர்களாக இருப்பதால்தானே என்று கண்ணீர் உகுத்து... அல்லாடுவோம்... அந்த இனத்துக்காரன் அப்படித்தான் செய்வான் எனப் பொதுமைப்படுத்தப்பட்ட கோபமடைவோம். ஆக, நமக்கு, தன்னைப் பார்த்துத் தானே சிரிக்க முடியும் சக்திதானந்த மனோபாவம், ஒரு சுக்குக்கும் இல்லவே இல்லை. அதை வளர்த்தெடுக்கும் பயிற்சியும் இல்லவே இல்லை. தமிழர்களுக்கு நகைச்சுவை உணர்ச்சியில்லை என்று யாராவது சொன்னால், பொங்கிச் சீறி, வசைபாடி – அவர்கள் சொல்வதை நம்மையும் அறியாமல் ஆமோதிப்போம்.

நமக்கு ஒரு இரண்டாம் மனிதரை, ஒரு மூன்றாம் மனிதர் கிண்டல் செய்தால் அதை ரசிக்க முடியும். அதாவது நம்முடைய உள்ளார்ந்த வழிவேலுகளையும், செந்தில்களையும், கவுண்டமணிகளையும் போஷகம் செய்து, நம்மைப் பார்த்து நாமே வாய் விட்டுச் சிரிக்காமல், வெளியுலக வடிவேலுகளையும், செந்தில்களையும், கவுண்டமணிகளையும் ரசிப்போம். ஒருநிமிடம் கூடச் சிந்திக்க மாட்டோம் – அவர்கள் நகைச்சுவை செய்வது நம்மைத்தான் என்பதை. அதற்கும் மூளை கொஞ்சம் மேலதிகமாக வேலை செய்ய வேண்டும் இல்லையா?

ஒரு மாதிரிக்கு, நம்முடைய அரசியல் தலைவர்களின் தட்டி விளம்பரங்களைப் பாருங்கள். அல்லது நம் சினிமா விளம்பரச் சுவரொட்டிகளை, தட்டிகளைப் பாருங்கள். அவற்றை ஊன்றிக் கவனியுங்கள் அவற்றிலுள்ள அதீத நகைச்சுவை சார்ந்த படிமங்களை, குறியீடுகளைக் காணுங்கள்... ஹ்ம்ம்...ஆனால், நாம் இப்படிச் செய்யவே மாட்டோம். ஏனெனில் நமக்கு நகைச்சுவை உணர்ச்சி என்பது இல்லவே இல்லை. அது மட்டும் கொஞ்சமாவது இருந்திருந்தால், அந்தத் தட்டிகளில் ஒன்றையாவது பார்த்து நம்மில் யாரோ ஒருவராவது விழுந்துவிழுந்து கெக்கெலி கொட்டிச் சிரித்து மாரடைப்பு வந்து மகாசந்தோஷத்துடன் இறந்திருக்க மாட்டோமா? ஒரு தட்டிக்கு ஒரு இறப்பு வீதம் இப்படி ஆகியிருந்தால், நம் நகைச்சுவை உணர்ச்சி காரணமாக, நம் தமிழ் நாட்டின் மக்கள்தொகை சுமார் 10 என்ற அளவுக்குச் சுருங்கியிருக்குமே!

இலங்கைப் பிரச்சினையில் நம் தமிழக அரசியல் கட்சிகள், 'மாணவ புரட்சிக்'காரர்கள், தொழில்முறை மனிதவுரிமைக்காரர்கள், திராவிட இயக்கங்கள் எடுத்திருக்கும், அழுபடைகளையே புரிந்துகொள்ளாத சுற்றிச்சுற்றிக் கும்மியடித்தல்களை, பல்வேறு திகைப்பூட்டும் நிலைப்பாடுகளைப் பார்த்த, தொடர்ந்து பார்க்கும் பாக்கியம் பெற்ற, தமிழர்களாகிய நம்முடைய எதிர்கொள்ளல் எப்படி இருக்க வேண்டும்? குறைந்தபட்சம் ஒரு நமட்டுச்சிரிப்பு, அதிக பட்சம் விலா நோகச் சிரிப்பு என்பதாகத்தானே இருக்கவேண்டும்? ஆனால் நமக்குச் சுட்டுப் போட்டாலும் நகைச்சுவை உணர்ச்சி இல்லாத காரணத்தால், நாம் இவர்கள் போடும் கூச்சல்–கூப்பாடுகளுக்கு மதிப்பெல்லாம் கொடுத்து இந்தக் கூத்துகளைப் பற்றித் தெரிந்துகொள்ள பைசா செலவழித்து பத்திரிகைகள் படிக்கிறோம், தொலைக்காட்சி பார்க்கிறோம், த்சோ த்சோ டெசொ புசோ என்கிறோம்.

**சில நாட்கள் முன்பு:** நம்முடைய நாடு, ஆட்சி, அண்டைய நாடுகளுடன் உறவு, சட்டம் போன்ற பலவற்றை நன்கு தெரிந்திருக்க வேண்டிய, மேதகு 'பலதடவை முன்னாள் முதலமைச்சர்' கருணாநிதி அவர்கள் இனிமேல் டெஸோ மூலமாக "கச்சதீவுக்காகப் போராடப் போகிறேன்" என்று சொல்லியிருப்பதைக் கேட்டோமல்லவா. நமக்கு நகைச்சுவை உணர்ச்சி இப்போதாவது, இக்காரணம் கொண்டாவது பிறக்க, பல்கிப் பெருக, அவரவர் நம்பும் ஆண்டவன் அருள் புரிவானாக. டெஸோ புஸ்புஸோவாயநமஹ.

- வெ.ராமசாமி

# யாழ்ப்பாணம் மாநகரசபை

## சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலை என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் - 2014

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2014ஆம் திகதி முதல் 31.12.2014ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப்படிவக்கட்டணம் - ரூபா 500.00
கேள்விப்படிவம் விநியோகித்தல் - 04.11.2013 – 18.11.2013 மு.ப. 10.00 மணிவரை
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் - 18.11.2013 நண்பகல் 12.00 மணிவரை
கேள்வி திறத்தல் - 18.11.2013 பி.ப 2.30 மணிக்கு

விண்ணப்பபடிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 18.11.2013ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக் காரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமூகமளிக்கலாம்.

குறிப்பு :

1. கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையின் வீதத்திற்க்குச் சமமான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் முறி ஒன்று சமர்ப்பித்தல் வேண்டும். அல்லது சித்தி பெற்றவர்கள் உடனடியாக கேள்வித்தொகையின் 1/3 பகுதியைச் செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும். மிகுதித் தொகையின் 1/8 பங்கை ஜனவரி தொடக்கம் ஆகஸ்ட் வரையான 8 மாத காலப்பகுதிக்குள் 2014 ஜனவரி முதல் ஒவ்வொரு மாதமும் 20ஆம் திகதிக்கு முன் செலுத்துதல் வேண்டும்.

2. சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் பொருள்களின் மொத்தப் பெறுமதியின் 3 வீதம் கட்டணம் பெறலாம். வியாபாரிகள் மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு (கல்லுக்கு)நாள் ஒன்றுக்கு ரூபா 50.00 பெறலாம், மரக்கறி வியாபாரம் செய்யும் இடத்துக்கு (5'X5') நாள் ஒன்றுக்கு ரூபா 50.00 பெறலாம். மேலதிகமாக எந்தவித கட்டணங்களும் அறவிடக்கூடாது.

3. சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டிகளுக்கு ரூபா 5.00 உம் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 10.00உம் அறவிடலாம். மேலதிகமாக எந்த வரியும் அறவிடக்கூடாது.

4. சபையின் கடைகளில் இறைச்சி / கருவாடு / கோழி ஆகிய பொருட்கள் விற்பனை செய்யும் உரிமையாளர்கள் சபையால் விதிக்கப்படும் மாத வாடகை செலுத்த வேண்டும்.

5. சுப்பிரமணியம் பூங்கா சிற்றுண்டிச்சாலை, யாழ் கச்சேரியடி சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை என்பனவற்றை குத்தகைக்குப் பெறுபவர்களுக்குரிய நிபந்தனைகள்.
   1. சிற்றுண்டிச்சாலை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 07.00மணிவரை வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படும்.
   2. சிற்றுண்டிச்சாலைக்குப் பயன்படுத்தும் மின்சாரத்துக்கான மின் கட்டணத்தை குத்தகைக்குப் பெறுபவர்களே செலுத்துதல் வேண்டும்.
   3. மின்சார கட்டணத்திற்கான பாதுகாப்பு வைப்பு கட்டணமாக ரூ.15000.00 ஐயும் உடன் செலுத்துதல் வேண்டும்.

6. கேள்விப்படிவக்கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 12% VAT, 2%NBT சேர்த்து செலுத்துதல் வேண்டும்.

7. கேள்விப்பத்திரம் பெற வருபவர்கள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் ஒளிப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ் மாநகர சபைக்கே உரியது.

9. கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் முன்பு மாநகரசபைக்கு எந்தவித கொடுப்பனவும் செலுத்த முடியாத காரணத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

## இறைச்சிக்கடை குத்தகை - 2014

| தொ. இல | இறைச்சிக்கடை | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (12% பெறுமதி சேர் வரியும் 2% தே.க.எ.வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 125,000.00 |
| 2 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 54,500.00 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 112,000.00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 218,500.00 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 70,000.00 |
| 6 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 70,000.00 |
| 7 | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5,000.00 | 330,000.00 |
| 8 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 78,000.00 |
| 9 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 105,500.00 |
| 10 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 105,500.00 |
| 11 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 143,000.00 |
| 12 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 548,000.00 |
| 13 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 543,500.00 |
| 14 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 105,000.00 |
| 15 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 295,000.00 |
| 16 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 451,000.00 |
| 17 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 93,500.00 |
| 18 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 93,500.00 |
| 19 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 200,000.00 |
| 20 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 93,500.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 93,500.00 |
| 22 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 93,500.00 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 93,500.00 |
| 24 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 93,500.00 |
| 25 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 200,000.00 |
| 26 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 5,000.00 | 66,500.00 |
| 27 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 5,000.00 | 13,500.00 |
| 28 | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 266,500.00 |
| 29 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 30,240.00 |
| 30 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 477,000.00 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 522,000.00 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 383,000.00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 379,000.00 |
| 34 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 472,500.00 |
| 35 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 379,000.00 |
| 36 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 302,500.00 |
| 37 | முஸ்லீம் கல்லூரி வீதி ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 110,000.00 |

## பொதுச்சந்தைக் குத்தகை 2014

| தொ. இல | பொதுச்சந்தைகள் | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (12% பெறுமதி சேர் வரியும் 2% தே.க.எ.வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|
| 1 | பெரிய கடை மரக்கறிச் சந்தை | 10,000.00 | 1,652,500.00 |
| 2 | பண்ணை மீன் சந்தை | 10,000.00 | 3,298,000.00 |
| 3 | குருநகர் மீன் சந்தை | 10,000.00 | 1,400,000.00 |
| 4 | செங்குந்தா சந்தை | 10,000.00 | 1,263,000.00 |
| 5 | நாவாந்துறை மீன்சந்தை | 10,000.00 | 577,500.00 |
| 6 | அரியாலை மீன்சந்தை | 1,000.00 | 58,000.00 |
| 7 | பாசையூர் மீன்சந்தை | 2,000.00 | 165,500.00 |
| 8 | சுப்பிரமணியம் பூங்கா வளாகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 69,500.00 |
| 9 | பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 86,000.00 |
| 10 | பஸ்நிலைய கடைகளுக்கு கிழக்கு பக்கமாகவுள்ள து.வி.வண்டி பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 250,000.00 |
| 11 | புங்கன் குளம் சந்தை | 2,000.00 | 9,000.00 |
| 12 | யாழ் கச்சேரி சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 60,000.00 |


மேலதிக விபரங்களை மாநகரசபையின் நானாவிதஇறைவரிப்பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். (0718628576)

மாநகரசபை அலுவலகம்
யாழ்ப்பாணம்.
30.10.2013
யாழ்ப்பாணம்.


திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா
மாநகர முதல்வர்,
மாநகரசபை.

(C/3184)

3. 250g கடலையின் விலை ரூபா 38.00 எனின் $1\frac{1}{4}$ kg கடலையின் விலை யாது? ........................


4.  இவ்வுருவில் $\frac{1}{4}$ பங்கையும் $\frac{1}{2}$, பங்கையும் நிழற்றிக்காட்டுக.

5. 824 பென்சில்களை 8 பாடசாலைகளுக்கு மாணவர் நலன் கருதி வழங்கப்பட்டதெனின் ஒரு பாடசாலைக்கு கிடைத்த பென்சில்களின் எண்ணிக்கை யாது? ........................


6. 

நிழற்றாதப் பகுதியின் பரப்பளவை சென்றிமீற்றறில் தருக? ..............$cm^2$

7. 90 புத்தகங்களில் $\frac{4}{5}$ பங்கு விற்கப்பட்டது. எனின் விற்கப்படாது இருக்கும் புத்தகங்களின் எண்ணிக்கை யாது? ........................


8. 

இப்பாத்திரம் கொள்ளும் நீரின் அளவானது 2லீற்றரை விட ........................




9. இந்நேரத்தைக்கொண்டு எடுக்கக்கூடிய முடிவு முற்பகல் 4மணியாக இன்னும் .......... நிமிடங்கள் உள்ளன.


10. பெறுமானம் காண்க. 909 × 100 = ☐



11. இவ்வெட்டுருவைக் கொண்டு செய்யக்கூடிய திண்மப் பொருள்? ........................

12. 20 ரூபா பணத்தைக் கொண்டு 5ரூபா 25சதத்திற்கு ஒரு பொருள் ஒன்றை வாங்கினால் எஞ்சும் மீதிப்பணம் எவ்வளவு? ........................

13. 1000 ரூபாய் தாள்காசில் பின்புறத்தில் காணப்படும் பிராணி எது? ........................

14.  இவ்வுருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது? ........................

15. 09990　992009　99090　இவ்வெண்களில் மிகப்பெரிய எண் எது? ........................

**(15) பின்வரும் பந்தியை வாசித்து தொடர்ந்த ஆறு வாக்கியங்கள் எழுதுக.**

சில மாதங்களாக புவியின் மேற்பரப்பில் ஒரு மழைத்துளியும் விழவில்லை கடும் வெப்பத்தின் விளைவாக நிலத்தில் வெடிப்புகள் கோடுகளாகக் காணப்பட்டன......

1. ........................
2. ........................
3. ........................
4. ........................
5. ........................
6. ........................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



**(1) கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து வினாக்களுக்கு விடைத்தருக.**

நாளது கேட்டு நார்க்கம்பு வெட்டி
நல்ல கடாக்கள் தெரிந்து பிணைத்து
ஏரதுபூட்டி இடம் பட உழுது
எல்லையில்லாத செந்நெல் விதைவிதைத்து

சோழன் எருதுகள் தொண்ணூறாயிரம்
பாண்டியன் எருதுகள் பன்னீராயிரம்
இரவும் பகலும் ஏத்தி இழுக்கப்
பொலிவளராய் பொலி பொலி பொலியே

1. இப்பாடல் சூடுமிதிப்பாடலாகும் இதில் பொலி என்று குறிப்பிட்டு கூறப்பட்டது எது? ........................
2. ஏர் என்ற சொல்லுக்கு பொருத்தமான ஒத்த சொல்லை குறிப்பிடுக? ........................
3. முதலாம் பந்தியில் வந்துள்ள பெயரடைமொழியைக் குறிப்பிடுக? ........................
4. செந்நெல் என்பதை பிரித்தெழுதுக? ........................
5. பந்தியில் இடம் பெற்றுள்ள எதிர் சொல் இணைமொழியைக் குறிப்பிடுக? ........................
6. எருது முக்காரமிடுவது போல எருமையின் ஒலிமரபைக் குறிப்பிடுக? ........................
7. சூடு மிதிக்கும் களத்தில் எருதுகளை எவ்வாறு அழைப்பர்? ........................

**(2) பின்வரும் மரபுத்தொடர்களின் கருத்தைத்தருக.**

1. கிள்ளிவிடுதல் ........................　2. தாளம் போடல் ........................

**(3) பின்வரும் வாக்கியங்களில் வழுவுடைய சொற்களை திருத்தி எழுதுக.**

1. எலிகள் வலையில் வாழ்ந்தன ........................
2. எறும்புகள் விரும்புவது வெள்ளம் ஆகும். ........................

**(4) சொற்களை பொருத்தமான முறையில் ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.**

1. மேசையில் / அவனது / இருந்தன / புத்தகங்களும் / பத்திரிகைகளும்

........................

**(5) பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் நிறுத்தற்குறிகளை இடுக.**

1. நண்பனே கோபிக்க வேண்டாம்
2. என்ன காரியம் செய்தாய்

**(6) பின்வரும் தொடர்களின் கருத்தைத்தரும் தனிச்சொல்லைத்தருக.**

1. பத்து ஆண்டுகளைக்கொண்ட காலப்பகுதி ........................
2. மழை பெய்யாத காலம் ........................

**(7) வினாக்களுக்கு விடை தருக.**

1. இலங்கையின் முதலாவது ஜனாதிபதி யார்? ........................
2. இலங்கையின் மிகப்பெரிய நீர்தேக்கம் எது? ........................

**(8) கருத்தினை தமிழில் தருக.**

1. Jaffna ........................................... 2. I Know ...........................................

3. Wednesday ....................................

**(9) கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக.**

1. சகோதரர் ................................ 2. தயவு செய்து உள்ளே வா ................................


**(10) சிங்களத் தொடரின் கருத்தை தமிழில் தருக.**

1. மெயா மகே நங்கி ................................ 2. இரபாயனவா ................................

**(11) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. சூரிய நமஸ்காரத்தின் மூன்றாவது செயற்பாடு.

1. 2. 3. 4.



02. இலங்கை நாட்டுக்குரித்தான பிராணிகளின் கூட்டம் எது?
1. நீலப்புள், புளுணி, மூஞ்சூறு 2. சாரைப்பாம்பு, அழுங்கு, வல்லூறு
3. பச்சைவிரியன், மரஅணில், சிங்கம் 4. பேய் ஓணான், கங்காரு, பென்டா

03. கொடுக்கினால் எதிரிகளைத்தாக்கும் பிராணிகளின் கூட்டம் பின்வருவனவற்றுள் எது?
1. தேனீ, புளுணி, சிலந்தி 2. சிலந்தி, எறும்பு, பாம்பு
3. குளவி, தேள், கடியான் 4. ஓணான், நத்தை, கரப்பான்

04. இலங்கை எயார்லைன்ஸ் விமான சேவையின் சின்னம் எது?
1. புறா 2. வெண்புறா 3. வெள்ளைப்புறா 4. மயில்

05. இலங்கைக்கு கிழக்கில் அமைந்துள்ள நாடுகள் எவை?
1. ஆபிரிக்கா, இந்தியா 2. தாய்லாந்து, மலேசியா
3. பூட்டான், நேபாளம் 4. மாலைதீவு, மலேசியா

06. தோட்டமண்ணுக்குரிய மற்றும் பெயர்கள்.
1. இருவாட்டி மண், நன்மண் 2. மணல் மண், செம்மண்
3. களிமண், நன்மண் 4. வண்டல்மண், இருவாட்டிமண்

07. நில்வளகங்கை கடலுடன் கலக்கும் இடம்.
1. களுத்துறை 2. மாத்தறை 3. கொழும்பு 4. அம்பலாந்தொட்டை

08. தேசப்படங்களில் தரைத்தோற்ற அம்சமான மலைதொடர்களைக் குறித்துக்காட்ட பயன்படும் நிறமானது?
1. கறுப்பு 2. பச்சை 3. சிவப்பு 4. கபிலநிறம்

09. 
இவ்வுடுக்கோலத்தின் பெயர்
1. துலா 2. சிலுவை
3. ரிஷபம் 4. சிம்மம்

10. ஞாயிற்றுத்தொகுதியில் வெள்ளிக்கோளுக்கு அடுத்துள்ள கிரககோள் எது?
1. புவி 2. புதன் 3. வியாழன் 4. செவ்வாய்

11. உற்பத்திப் பொருட்களின் வர்த்தகதரத்திற்கான குறியீட்டு எழுத்துக்கள் எவை?
1. **SLS** 2. **ISO** 3. **ISBN** 4. **PSO**



12. உலர்த்திப் பேணுவதன் ஊடாக பாதுகாக்கக்கூடிய உணவுகள்.
1. மீன், மரவள்ளி, தேங்காய் 2. ஈரப்பலா, எலுமிச்சம்பழம், கத்தரி
3. பலா, பாகல், இறைச்சி 4. இஞ்சி, பலாவித்து, பலா

13. கொழுப்புச்சத்து அதிகமுள்ள உணவுகளாவன.
1. எள்ளு, நிலக்கடலை, தயிர் 2. சீஸ், பால், தோடம்
3. முட்டை, பட்டர், நல்லெண்ணெய் 4. நிலக்கடலை, கீரை, பழம்

14. தண்டுகளில் முட்கள் காணப்படும் தாவரம் எது?
1. கொகில 2. கத்தரி 3. ஓர்கிட் 4. மரவள்ளி

15. பழுத்த பின் வெடிக்கும் பழங்களாவன.
1. வெள்ளரிப்பழம் - மங்குஸ்தான் 2. வெள்ளரிப்பழம், தூரியன்
3. பலாப்பழம் - சீதாப்பழம் 4. சீதாப்பழம் - கொய்யாப்பழம்

16. சொறி, சிரங்கு முதலிய நோய்களுக்கு நிவாரணம் அளிக்கக் கூடிய மூலிகை வகை எவை?
1. துளசி - அருவதாம்பச்சை 2. புகையிலை - துளசி
3. கருவேப்பிலை - வேப்பிலை 4. வேப்பிலை - மஞ்சள்


17. பின்வருவோரில் பொலன்நறுவைக்கால அரசன் யார்?
1. துட்டகைமுனு 2. மகாசேனன் 3. திஸ்ஸமன்னன் 4. பண்டுகாபயன்

18. ருவன்வெளிசாய தாதுகோபுரத்தைக் கட்டிய மன்னன் யார்?
1. துட்டகைமுனு 2. மகாசேனன் 3. வலகம்பா 4. விஜயாகு

19. சாந்து அள்ளுவதற்கும் சுவரிலே பூசி தேய்ப்பதற்கும் உதவும் உபகரணம்.
1. மட்டப்பலகை 2. மேசன்கரண்டி 3. சவள் 4. மணியாசு

20. சிங்களவர்களின் புனித நூல் எது?
1. வேதாகமம் 2. அல்குர்ஆன் 3. பைபிள் 4. திரிபீடகம்

**(12) பின்வரும் உடுக்கோலங்களுக்கு பெயர் இடுக.**




1. ............................ 2. ............................ 3. ............................

**(13) வினாக்களுக்கு விடை தருக.**

1. இருபத்தைந்தாவது ஆண்டின் நிறைவாக கொண்டாடப்படும் விழா எது? ..............................
2. உலகில் மிகப்பெரிய பாலைவனம் எது? ..............................
3. தாவரங்களால் வெளியேற்றப்படும் வாயு எது? ..............................
4. புத்தபெருமானின் இளமைப் பெயர் என்ன? ..............................
5. மழைவீழ்ச்சியை அளக்க பயன்படும் கருவி எது? ..............................
6. சித்திரை மாதத்தில் மட்டும் பூக்கும் பூ எது? ..............................
7. மூலவர்ணங்கள் எவை? ..............................
8. வைரமான தாவரம் ஒன்றை குறிப்பிடுக? ..............................

**(14) கணித வினாக்களுக்கு விடைத்தருக.**

1. 

இரு எண்சட்ட எண்களினதும் கூட்டுத்தொகை யாது? ..............

2. 6.5m நீளமான ரிபன் நாடாவிலிருந்து 2½ m நீளமான ரிபன் ஒரு சட்டைக்காக செலவிடப்பட்டது. எனின் எஞ்சிய ரிபன் நாடாவின் நீளம் யாது? ..............................

# கைத்தொழில் அபிவிருத்தி சபையின் செயற்பாடுகள் தொடர்பில் ஆய்வு



பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் நிகழ்கால மற்றும் எதிர்கால செயற்பாடுகள் குறித்து விசேட கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் மாலை மேற்படி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தேசிய கண்காட்சி மற்றும் விருதுவழங்கும் வைபவம் குறித்தும் ஆராயப்பட்டது.

இதன்போது மேற்படி கண்காட்சியானது தொழில் முயற்சியாளர்களுக்கு பயனுள்ள வகையில் அமையவேண்டியதன் அவசியத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உணர்த்தினார்.

அத்துடன், தொழில் முயற்சியாளர்களுக்கு மூலப்பொருட்கள் இலகுவாகவும், மலிவாகவும் வழங்கக்கூடிய வழிமுறைகள் பற்றி ஆராயப்பட்டன.

இதன்போது சிறுகைத்தொழில் மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு உதவும் வகையில் மூலப்பொருட்களை குறைந்த விலையிலும் இலகுவாகவும் வழங்க வேண்டுமென்றும் இதுவே கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதான நோக்கமாக இருக்க வேண்டுமென அமைச்சர் வலியுறுத்தினார்.

அதேநேரம் ஏனைய அமைச்சுக்களிலிருந்து ஒதுக்கப்படுகின்ற உலோகங்கள் சார்ந்த பொருட்களை கொள்வனவு செய்வது குறித்தும் அவற்றை நாடளாவிய ரீதியிலுள்ள கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் கித்துள் சார்ந்த உற்பத்திப் பொருட்களை விரிவாக்கம் செய்வது குறித்தும் அத் தொழில் சார்ந்தவர்களுக்கு பயனுள்ள வகையில் அதனை முன்னெடுப்பது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பிரதியமைச்சர் வீரகுமார திசாநாயக்க, மேலதிக செயலாளர் மங்கனிக்க அதிகாரி, அமைச்சரின் ஆலோசகர் திருமதி வீ.ஜெகராஜசிங்கம், துணைச செயலாளர் புஸ்ப குணவர்த்தன, கைத்தொழில் அபிவிருத்தி சபைத் தலைவர் நஜாப்தீன், பொதுமுகாமையாளர் உட்பட அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# ஜெய்ப்பூர் நிறுவனத்தின் கைநூல் வெளியீட்டு விழா



(திருநெல்வேலி)

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 'முழங்காலுக்கு மேல் அவயவம் இழந்தவர்களுக்கான பராமரிப்பு முறைகள்' என்னும் கை நூல் நிறுவன மண்டபத்தில் கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டது.

ஜெய்ப்பூர் நிறுவனத் தலைவர் வைத்திய கலாநிதி திருமதி.ஜெ.கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை என்பு முறிவு நெரிவு சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி கே.உமாபதி கலந்து கொண்டார்.

வெளியீட்டுரையை நிலையப் பொருளாளர் வைத்திய கலாநிதி திருமதி.எஸ்.தெய்வேந்திரன் நிகழ்த்தினார். வைத்திய கலாநிதி கே.உமாபதி நூலை வெளியிட்டு வைத்தார். நூலின் பிரதிகளை யாழ்.போதனா வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கே.நந்தகுமாரன், சமூக சேவைகள் திணைக்கள மாவட்ட உத்தியோகத்தர் ஏ.ஞானவேல், சர்வதேச செஞ்சிலுவை சங்க வெளிக்கள உத்தியோகத்தர் எஸ்.சௌவுந்தலா, வைத்திய கலாநிதி தெய்வேந்திரன், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ரூபினி வரதலிங்கம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

வைத்திய கலாநிதி கே.உமாபதி விருந்தினர் உரை நிகழ்த்தினார். நிறுவன செயலாளர் திருமதி.ஏ.ஏ.அலோசியஸ் நன்றியுரையாற்றினார். (137)

# புற்றுநோயாளர்களுக்கு உதவி



மானிப்பாய் பரிஷ் லியோக் கழகத்தினர் அண்மையில் தெல்லிப்பளையில் அமைந்துள்ள புற்றுநோயாளர்கள் விடுதிக்குச் சென்று உணவுப் பொருட்கள், பழங்கள் என்பவற்றை வழங்கினர்.

மானிப்பாய் பரிஷ் லியோக் கழகத்தின் தலைவர் லியோ அ.ஜெபனேசன் தலைமையிலான சுமார் 20 லியோக் கழக உறுபபினர்கள் இந நிகழ்வில் கலந்து கொண்டனர். அங்குள்ளவர்களுடன் சரளமாக உரையாடியதுடன் ஆறுதலும் கூறினர். விரைவாக நோய் நிலமை குணமாகி வழமைக்கு திரும்ப வேண்டும் என்று பிரார்த்திப்பதாக குறிப்பிட்டனர். (48)

# காசோலை மோசடிகள் யாழில் உச்சக்கட்டம்

## அவசியம் விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மற்றும் அச்சுவேலிப் பகுதியில் 20 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு காசோலை மோசடிச் சம்பவங்கள் கடந்தவாரம் இடம் பெற்றிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அச்சுவேலி பொலிஸ் நிலையத்திற்கு கடந்த மாதம் 28ஆம் திகதி கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டில் ஒரு இலட்சம் ரூபா காசோலை மோசடிச்சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது. இந்தச் சம்பவத்தின் முறைப்பாட்டுக்காரர் கட்டுவன் தெற்கைச் சேர்ந்தவர் எனவும் சந்தேகநபர் புத்தூர் கிழக்கைச் சேர்ந்தவர் எனவும் இவர் தலைமறைவாகியிருப்பதன் காரணமாக கைது செய்யப்படவில்லை என்றும் புலனாய்வு மேற்கொள்ளப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஏப்ரல் மாதம் கடனாக இந்தக் காசோலையை சந்தேகநபர் பெற்றிந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை யாழ்.பொலிஸ் நிலையத்தில் கிடைக்கப்பெற்ற மற்றுமொரு காசோலை மோசடி சம்பவத்தில் 13 இலட்சம் ரூபா காசோலையைப் பெற்று மோசடியில் ஈடுபட்ட ஒருவர் தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டுக்காரர் யமுனா வீதி நல்லூரைச் சேர்ந்தவர் எனவும் சந்தேக நபரைக் கைது செய்ய புலனாய்வு மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படடுள்ளது.

இதேவேளை வல்வெட்டித்துறைப்பகுதியில் ஆறு இலட்சம் ரூபாவை கடனாகப்பெற்று அதனை திருப்பிக் கொடுக்காத நபர் குறித்து வல்வெட்டித்துறைப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதனை அடுத்து சந்தேக நபர் வல்வெட்டித் துறைப் பொலிஸரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.


இவரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வல்வெட்டித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். கடந்த வியாழக்கிழமை யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (பா)

# வீடுகளுக்கு தீ வைத்த 5 சந்தேக நபர்கள் கைது

கடந்த வாரம் கைதடி மற்றும் சாவகச்சேரிப்பகுதியில் வீடுகளுக்கு தீ வைத்த சம்பவம் தொடர்பில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டிருப்பதாக காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

கடந்த 28ஆம் திகதி கைதடிப் பகுதியில் வீடு ஒன்றுக்கு தீ வைப்புச் சம்பவத்தில் மூன்று பேர் சந்தேகத்தின்பேரில் சாவகச்சேரி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டதாகவும் இவர்கள் மூவரையும் இம் மாதம் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. முறைப்பாட்டுக்காரரும சந்தேகநபர்களும் நாவற்குழிப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகின்றது.

இதேவேளை அன்றைய தினம் சாவகச்சேரிப் பகுதியில் வீடு ஒன்றுக்கு தீ வைத்த மற்றைய சம்பவத்தில் நாவற்குழியைச் சேர்ந்த இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் பாரபபடுத்தப்பட்டதாகவும் இவர்களை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)








பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸாரின் சிறந்த சேவைகளைப் பாராட்டி பருத்தித்துறை தீபஜோதி சனசமூக நிலையமும், சிவில் பாதுகாப்புக் குழுவும் இணைந்து புலோலி ப.நோ.கூட்டுறவுச் சங்க உபதலைவர் எம்.ஜெயதேவன் தலைமையில் பாராட்டு விழாவை நடாத்தினர். இவ்விழாவில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ்.றம்சித் கௌரவிக்கப்படுவதையும், சப்.இன்ஸ்பெக்டர் நந்தன வீரரத்தின உரையாற்றுவதையும், பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட சப்.இன்ஸ்பெக்டர் எஸ்.வீரரத்தின, இன்ஸ்பெக்டர் எஸ்.றம்சித், பொலிஸ் உத்தியோகத்தர் கே.நிசந்தலா ஆகியோரையும் காணலாம். (01)

– சஹாரா பாலைவனத்தில் –

# 92 பேர் இறந்ததன் எதிரொலி;

# அகதிமுகாமை மூடுகிறது நைகர் அரசு



சஹாரா பாலைவனத்தில் 92 பேர் இறந்த சம்பவத்தை அடுத்து அகதிகள் முகாமை மூட நைகர் அரசு உத்தரவிட்டுள்ளது.

மேற்கு ஆபிரிக்கப் பகுதிகளில் வறுமையில் வாடும் மக்கள் ஆண்டுதோறும் மார்ச் முதல ஆகஸ்ட் வரையிலான காலகட்டத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு குடியேறுவதற்காக பயணத்தை மேற்கொள்கின்றனர். இந்தப் பயணத்தில் இவர்கள் வடக்கு நைகர் பகுதி அமைந்துள்ள சஹாரா பாலைவனத்தைக் கடந்து அல்ஜீரியா அல்லது லிபியா நாட்டை அடைந்து அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லவேண்டும்.

இவ்வாறு இரண்டு லொறிகளில் கடந்த ஒக்ரோபர் மாதம் நூற்றுக்கணக்கான" மக்கள் சஹாரா பாலைவனத்தைக் கடந்து செல்ல முற்பட்டுள்ளனர். அந்த முயற்சியில் இவர்கள் சென்ற லொறிகள பழுதடைந்து வழியில் நின்றுவிட்டதால் பாலைவனத்தில் இறங்கி நடக்க முற்பட்ட மக்கள் வழியிலேயே தண்ணீர் வறட்சியினால் இறக்க நேரிட்டது.

இவ்வாறு இறந்து சிதைந்து கிடந்த 52 குழந்தைகள், 33 பெண்கள் மற்றும் 7 ஆண்களின் உடல்களை கடந்த புதன்கிழமை அன்று நைகர் அரசு கண்டுபிடித்தது. இதன் விளைவாக வடக்கு நைஜீரியாவின் அக்டெஸ் நகரில் உள்ள கெட்டோஸ் எனப்படும் அகதிகள் முகாமை மூடுமாறு உத்தரவிட்டுள்ளது.

மனிதக் கடத்தலில் ஈடுபடும் வலைத்தளங்களின் குற்றவியல் நடவடிக்கைகளே இந்தத் துயர சம்பவத்திற்குக் காரணம் என்று அறிவித்துள்ள அரசு இதற்குக் காரணமானவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்றும் அறிவிப்பு செய்துள்ளது.

நைகரின் வடக்குப் பகுதியில் இருந்த வந்த பெண் ஒருவரே இந்த பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தவர் என்று தெரிய வந்ததை முன்னிட்டு பாலைவன நகரமான தமன்ரசெட்டில் கைது செய்யப்பட்ட அவர் பொலிஸ் காவலில் உள்ளார்.

நைகரின் தெற்குப் பகுதியில் உள்ள கன்ட்சே மாவட்டத்திலிருந்து வந்தவர்களில் பெரும்பான்மையானோர் இறந்துள்ளனர். எனவே அந்நாட்டின் பிரதமரான பிரிகி ரபினி அம்மாவட்டத்திற்கு சென்று இந்தத் துயர சம்பவத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசின் சார்பாக வருத்தத்தைத் தெரிவிக்க உள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மூன்று நாட்களுக்கு அரசு துக்கம் அனுஷ்டிக்கும் என்றும் அரசு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# கற்பழித்து புதைக்கப்பட்ட சிறுமி உயிருடன் வந்த அதிசயம்



பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள தோபா தேக் சிங் என்ற இடத்தில் கடந்த வாரம் தனியாக சென்ற 13 வயது சிறுமியை வழிமறித்த 2 பேரினால் கற்பழிக்கப்பட்டார்.

அந்தச்சிறுமியை உயிருடன விட்டால் விடயம் வெளியே தெரிந்து ஆபத்தாகி விடும் என நினைத்து இருவரும் சேர்ந்து ஒரு குழியை தோண்டி மயங்கிய நிலையில் இருந்த சிறுமியை உயிருடன் புதைத்தனர்.

மயக்கம் தெளிந்த சிறுமி, தான் மண்ணுக்குள் புதைக்கப்பட்டதை அறிந்து, முட்டி மோதி மண்ணை தள்ளி புதைகுழியில் இருந்து மீண்டு வந்தார்.

அவ்வழியாக வந்த சிலர் அச்சிறுமியை வீட்டிற்கு அழைத்து சென்று விட்டனர்.

இந்தக்கொடிய சம்பவம் தொடர்பாக சிறுமியின் தந்தை அளித்த புகாரை ஏற்றுக் கொள்ள பொலிஸார் மறுத்து விட்டனர்.

இதனையடுத்து, லாகூர் உயர்நீதிமன்ற நீதிபதியின் தனிப்பிரிவில் அவர் புகார் அளித்தார். அதன் பின்னர், நீதிபதியின் உத்தரவையடுத்து அந்தச் சிறுமியை கற்பழித்து உயிருடன் புதைத்த 2 குற்றவாளிகளையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# இங்கிலாந்தில் பிரபலமடையும் காளி பூஜை வழிபாடு



இந்தியாவில் நடைபெறும் காளி பூஜைகள் தற்போது இங்கிலாந்தில் பிரபலமடைந்து வருகின்றது.இங்கிலாந்தில் குடியேறிய பெங்காலி மக்களால் கடந்த 1960ஆம் ஆண்டுகளில் துர்கா பூஜை கொண்டாட்டங்கள் தொடங்கப்பட்டன.


இவை நாளடைவில் ஐரோப்பா, அமெரிக்கா மட்டுமின்றி மற்ற கண்டங்களில் பிரபலமடையத் தொடங்கின.இந்நிலையில் தற்போது இந்தியாவில் நடைபெறும் காளி பூஜைகள் போன்று இங்கிலாந்திலும் நடைபெற ஆரம்பித்துள்ளதுமத்திய லண்டனிலிருந்து 60 கி.மீ தொலைவில் உள்ள ரீடிங் பகுதியில் வசித்துவரும் பெங்காலிகள் இதுபோன்ற கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக சன்ஸ்கிருதி என்ற லாப நோக்கில்லாத அமைப்பு ஒன்றை நிறுவியுள்ளனர்.

கடந்த வருடம் இந்த அமைப்பின் மூலம் அவர்கள் இங்கிலாந்தில் காளி பூஜையைத் தொடங்கினர், சுமார் 400க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்ட இந்தப் பூஜையின் இறுதியில் அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

இதேபோன்று இந்த ஆண்டும் ஷின்பீல்ட் கிராஞ் பகுதியில் காளி பூஜை நடைபெற உள்ளது. குமர்துலியில் இருந்து கோரா சந்த்பால் மூலம் இதற்கான சிலை வடிவமைக்கப்பட்டு வருகின்றது. 600க்கும் மேற்பட்டோர் இந்தப் பூஜையில் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பாரம்பரியமான ஒரு பெங்காலிய விழாவாக வானவேடிக்கைகளுடன் இந்தப் பூஜையைக் கொண்டாட சன்ஸ்கிருதி அமைப்பினர் ஏற்பாடு செய்துவருகின்றனர்.இதுகுறித்து அமைப்பின் தலைவரான அனுராதா பிஸ்வாஸ், துர்கா பூஜை, சரஸ்வதி பூஜையை போன்று காளி பூஜையையும் சிறப்பாக கொண்டாட முடிவு செய்துள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டு பயணச் சர்ச்சையில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்



இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் வெளிநாட்டு பயணங்கள் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

முக்கியமான நாடாளுமன்ற கூட்டத்தொடர்களில் பதிலளிப்பதை தவிர்ப்பதற்காக பயணம் மேற்கொண்டார் எனவும், சுற்றுப்பயணங்களுக்காக அதிக பணம் செலவழிக்கப்பட்டுள்ளது எனவும் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள் பிரதமர் மீது வைக்கப்படுகிறது.

ஏறக்குறைய உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அவர் செல்லாத நாடுகள் பாகிஸ்தான், நேபாளம், இலங்கை, அவுஸ்ரேலியா மற்றும் பிரேசில் தவிர மற்ற லத்தீன் அமெரிக்க நாடுகள் மட்டுமே. ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் அமர்ந்த 2004ஆம் ஆண்டிலிருந்து இதற்காக செலவு செய்யப்பட்ட தொகை ரூபாய் 642.45 கோடி.

ஐ.மு., கூட்டணியின் முதல் ஐந்தாண்டு ஆட்சியில் 37 முறை பிரதமர் வெளிநாட்டு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இதில் 15 பயணங்களின் போது நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடந்து கொண்டிருந்தது. இரண்டாவது முறை ஆட்சியின் போது 2009லிருந்து 35 முறை சுற்றுப் பயணம் மேற்கொண்டார். இதில் 13 பயணங்கள் கூட்டத் தொடரின் போது மேற்கொள்ளப்பட்டது.

2ஜி, காமன்வெல்த், நிலக்கரி என அடுக்கடுக்கான ஊழல்களை கண்டுகொள்ளாத பிரதமரின் இந்த செயலும் கடும் கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளது.

அடுத்தாண்டு நடக்கவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் பிரதமரின் இந்த செயலாலும், காங்கிரசுக்கு பின்னடைவு ஏற்படும் என அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

# வௌவால்களை நேசிக்கும் கிராமம் பட்டாசு வெடிக்காத தீபாவளி



தமிழினத்தின் தீபாவளிக் கொண்டாட்டத்தின்போது வெடிக்கப்படும் பட்டாசுகளால் வௌவால்கள் அச்சமடையும் என்பதால் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த மக்கள், பட்டாசே வெடிக்காமல் தீபாவளியைக் கொண்டாடுகின்றனர்.

விழுப்புரம் மாவட்டம் வானூர் அருகே கழுப்பெரும்பாக்கத்தில் உள்ள அரசமரம் ஆயிரக்கணக்கான வௌவால்களின் வாழ்விடமாக உள்ளது. இதனை கிராம மக்கள் பொக்கிஷமாகப் பாதுகாத்து வருகின்றனர்.

அந்தக் கிராமத்தின் முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் கலைச்செல்வி கிருபாநந்தன் இதுகுறித்துக் கூறும்போது, எங்கள் கிராமத்தின் பெருமையே இந்த வௌவால்கள் தான். இரண்டு, மூன்று தலை முறைகளாக இந்த அரசமரத்தில் ஆயிரக்கணக்கான வௌவால்கள் வசிக்கின்றன.

முதலில் புளியமரங்களில் குடியிருந்த வௌவால்கள் பின்பு அரச மரத்துக்கு குடியேறின. வௌவால்களை நாங்கள் நேசிப்பதால், குரங்குகள்கூட மரத்தில் ஏறாமல் பாதுகாத்து வருகிறோம். முக்கியமாக, தீபாவளியன்று இங்கு யாரும் பட்டாசு வெடிப்பதில்லை. தலைதீபாவளிக்கு மாமியார் வீட்டுக்கு வரும் மாப்பிள்ளைகளிடம் இந்த விடயம் குறித்து முன்கூட்டியே சொல்லிவிடுகிறோம். அவர்களும் இதற்கு முழு ஒத்துழைப்பு அளிக்கின்றனர்.

குழந்தைகள் பட்டாசு வெடிக்க ஆசைப்பட்டால் 2 கிலோமீற்றர் தூரம் அழைத்துச் சென்று அவர்களின் ஆசையை நிறைவேற்றுகிறோம். துக்க நிகழ்வு நடந்தாலும் வௌவால்களுக்கு பாதிப்பு ஏற் படாத வகையில், வெடிச்சத்தம் கேட்காத தொலைவில் பட்டாசு வெடிக்க அனுமதிக்கப்படுகிறது என்றார்.

# ஒபாமாவின் மனைவி தலைமை தாங்கும் தீபாவளி விழா வெள்ளை மாளிகையில்

அமெரிக்க நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் கடந்த புதன்கிழமை தீபாவளியை ஆதரித்து தீர்மானங்கள் தாக்கல் செய்யப்பட்டன. செனட் சபையில், செனட் இந்திய குழுவின் துணைத் தலைவர்களான மார்க் வார்னர், ஜான் கோர்னின் ஆகியோர் இந்த தீர்மானத்தை தாக்கல் செய்தனர்.

அதில், உலகம் முழுவதும் தீபாவளி கொண்டாடும் இந்துக்களுக்கு வாழ்த்து தெரிவித்ததுடன், இந்திய-அமெரிக்க உறவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும் கூறப்பட்டு இருந்தது. மேலும், முதல் முறையா.க, அமெரிக்க நாடாளுமன்ற கட்டடத்தில் தீபாவளி பண்டிகை கொண்டாடப்படும் என்றும், அதில் இரு அவைகளின் எம்.பி.க்களும் கலந்து கொள்வார்கள் என்றும் கூறப்பட்டு இருந்தது.

இதேபோல், அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையிலும் தீபாவளிக்கு ஆதரவான தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில், அமெரிக்க அதிபர் ஒபாமாவின் மனைவி மிச்சேல் ஒபாமா தலைமையில் அந்நாட்டின் எம்.பி.க்கள், அரசு உயரதிகாரிகள், அமெரிக்காவில் வசிக்கும் இந்திய பிரமுகர்கள் ஆகியோர் பங்கேற்கும் தீபாவளி விழா வரும் 5ஆம் திகதி வெள்ளை மாளிகையில் கொண்டாடப்பட உள்ளது. இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பை வெள்ளை மாளிகை நேற்று வெளியிட்டது.

# வீடு புகுந்து திருட்டு; அச்சுவேலியில் அதிகரிப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பகுதியின் சில இடங்களில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதாக அப்பகுதி மக்களால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்நிதி வீதி, வறணன் பகுதியில் அமைந்துள்ள இரண்டு வீடுகளில் நீண்டநாட்களாக கிணற்றடிப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த பெறுமதியான மோட்டார்களை திருடர்கள் கடந்த சில நாட்களுக்கு மன்னர் அபகரித்துச் சென்றுள்ளனர்.

மேலும் சில வீடுகளில் பெறுமதிவாய்ந்த கைத்தொலைபேசிகளும் களவாடப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு தமது பொருட்கள் திருடப்படுவதால் தாம் பாரிய நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

எனவே இவ்வாறு திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுபவர்களைக் கண்டறிந்து உரிய தண்டனை வழங்கவேண்டும் என்பதுடன், வரும் நாட்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கின்றனர். (85)

# வீடு உடைத்து திருட்டு; சந்தேகநபருக்கு சிறைவாசம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மிருசுவில் பகுதியில் வீடொன்றிலிருந்து துவிச்சக்கரவண்டி மற்றும் கையடக்கத் தொலைபேசி ஆகியவற்றை திருடிய குற்றச்சாட்டில் சந்தேகநபரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வாரம் நடைபெற்ற இந்தச் சம்பவத்தின் முறைப்பாட்டுக்காரர் மிருசுவிலைச் சேர்ந்தவர் எனவும் சந்தேகநபர் 24 வயதுடைய கோப்பாயைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் களவு போன பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 27 ஆம் திகதி குடமியன், வரணிப் பகுதியில் வீடு ஒன்றை உடைத்து 24 ஆயிரம் ரூபா பொருட்களை திருடிய சந்தேகநபரை சாவகச்சேரி நீதிமன்றம் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிட்டிருப்பதாக இந்தச் சந்திப்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (பா)

# பெண்கள் அபிவிருத்திக்கு புதிய செயற்திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் வறுமை நிலையில் வாழும் பெண்களின் வாழ்க்கைத்தரத்தை வலுப்படுத்தும் வகையில் புதிய செயற்திட்டங்கள் அமுல்செய்யப்படவுள்ளன.

பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டை முன்னிட்டு இலங்கையில் நடைபெறவுள்ள வர்த்தக பேரவையில் பெண்களை வலுப்படுத்தும் நிகழ்ச்சிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக இலங்கை வர்த்தக மற்றும் தொழில் சார் அமைப்பின் தலைவி ஜானகி குணவர்தன தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெறும் வர்த்தக பேரவை கூட்டம் வர்த்தக பேரவையில் பெண்கள் என்ற தலைப்பிலேயே நடைபெறவுள்ளது. இப்பேரவையின் போது இலங்கையில் கிராம மட்டத்தில் வர்த்தகத்தில் ஈடுபடும் பெண்களை இரண்டாண்டுகளுக்குள் வலுப்படுத்தும் நோக்கில் திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

லண்டனிலுள்ள பொதுநலவாய செயலகமும், பொதுநலவாய வர்த்தக கவுன்சிலும் கேட்டுக்கொண்டதற்கிணங்க உயர்ந்த பட்சமாக 4000 மில்லியன் ரூபாவும் ஆகக் குறைந்த பட்சமாக 10 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கான திறன் அபிவிருத்தி நிலையங்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இப்பேரவையில் 150 நாடுகளைச் சேர்ந்த 30 பெண்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

# வாக்காளர் இடாப்பு மேன்முறையீட்டு விசாரணை

## வருட இறுதிக்குள் பட்டியல் வெளிவரும்

(கொழும்பு)

2013 ஆம் ஆண்டின் வாக்காளர் பதிவேட்டிற்காக விண்ணப்பித்த மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிடுகின்றது.

மாவட்ட தேர்தல் அலுவலகங்கள் ஊடாக இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பிலான பூர்வாங்க விசாரணைகளின் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

2013 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பதிவேடுகள் பிராந்திய தேர்தல் அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர் அலுவலகங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததாகவும் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து அது தொடர்பிலான மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை தெரிவிப்பதற்காக கடந்த 30 ஆம் திகதிவரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இதேவேளை, வாக்காளர் பதிவேட்டிற்கான மேன்முறையீடுகளை விண்ணப்பிப்பதற்கு நவம்பர் 13 ஆம் திகதி வரை காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது.

மேன்முறையீடுகள் கிடைத்ததும், அவை குறித்தும் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றும் எம்.எம். மொஹமட் தெரிவித்தார். எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் வாக்காளர் பதிவேட்டை தயாரிப்பதற்கு எண்ணியுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# அதிவேக சாலையில் பயணிக்க விசேட அனுமதிப் பத்திரம்

(கொழும்பு)

கொழும்பு அதிவேக சாலையில் தினசரி பயணிக்கும் வாகனங்களின் சாரதிகளுக்கு விசேட அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளது.

குறிப்பாக வரும் வருடத்தில் இருந்து அதிவேக வீதி, பாடசாலை வாகனங்கள் மற்றும் அலுவலக பணியாளர்களை ஏற்றிச் செல்லும் வாகன சாரதிகளுக்கு விசேட அனுமதிப் பத்திர முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதன்படி, குறித்த சாரதிகள் விசேட அனுமதிப்பத்திரம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு அறிவுறுத்தப்படுவர்.

பயணிகளின் பாதுகாப்பு கருதி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் இதற்கான பரிந்துரையை மேற்கொண்டுள்ளார்.

# தங்கம் கடத்தியவர் கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)

சுமார் 25 இலட்சம் பெறுமதியான 3 தங்கக் கம்பிகளை கடத்த முயற்சித்த இலங்கை பிரஜை ஒருவர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவின் பெங்களூர் நோக்கி பயணிக்கவிருந்த நிலையில் இந்நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

சந்தேகநபரின் பயணப் பையை சோதனையிட்டபோது தங்கக் கம்பிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்நபருக்கு 50,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ள அதேவேளை இந்த விடயம் குறித்து விமான நிலைய சுங்கம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

# சுமை இல்லாத பரீட்சை அமைச்சரவை ஆராயும்

(கொழும்பு)

மாணவர்களுக்கு சுமையேற்றாத மிகவும் சிறந்த மட்டத்திலான புலமைப்பரிசில் பரீட்சை முறையொன்றை கொண்டு வருவது குறித்து அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

மகரகம தேசிய இளைஞர் சேவை மண்டபத்தில் நடைபெற்ற தேசிய சேமிப்பு வங்கி ஏற்பாடு செய்த நிகழ்வில் உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பில் பல்வேறுபட்ட அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையிலேயே கல்வி அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடங்கலான அமைச்சரவை 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை குறித்து ஆழமாக ஆராய்ந்து மாணவர்களுக்கு சுமையேற்றாத உகந்த முறையொன்றை கொண்டு வருவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

நிபுணத்துவ மருத்துவர்களினதும் மனநல மருத்துவர்களினதும் ஆலோசனைகளைப் பெற்ற பின் புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பில் எதிர்காலத் திட்டம் மேற்கொள்ளப்படும். கிராம மட்டத்தில் பல்லாயிரம் சிறந்த மாணவர்கள் காணப்படுகின்றனர் என்றார்.

## ...ச்சாயில்...

குழுக்களுக்குமிடையில் இடம்பெற்ற வாள்வெட்டில் பெண்கள் உட்பட ஐவர் காயமடைந்தனர்.

இவர்கள் ஐவரும் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். சம்பவத்தில், பாலச்சந்திரன் கஜன் (30), அருனந்தி குகதாஸ் (33), சொக்கலிங்கம் கஜன் (23), செல்வராசா அரவிந்தன் (30), உதயச்சந்திரிக்கா (58), பாலசுப்பிரமணியம் செல்வரஞ்சன் (29) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## வெளிநாட்டுத்...

மறுப்பு தெரிவிக்காமல் அனுமதி வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பொதுநலவாய நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாடு தொடர்பாக வெளிநாடுகளில் இருந்து எவரும் எவ்வித தடையும் இன்றி இங்கு வரலாம். அவர்களுக்கு இதற்கான பூரண சுதந்திரத்தை அரசாங்கம் வழங்குகிறது. இந்த வெளிநாட்டு விருந்தினர்கள் எங்கள் நாட்டின் சட்டத்தையும், விதிமுறைகளையும் மதித்து நடந்து கொள்ள வேண்டும் என்று பாதுகாப்பு செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டுத் தலைவர்களை சந்தித்து இலங்கையில் நிலவி வரும் மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றச்சாட்டுக்கள் போன்ற பலதரப்பட்ட விடயங்கள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முறைப்பாடு செய்ய இருப்பதாக அறிவித்திருக்கிறது.

இத்தகைய சந்தர்ப்பத்தில் வடமாகாணத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களால் தற்போது அரசாங்கக் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு இழைக்கப்படும் துன்புறுத்தல்கள் குறித்தும் பாதிக்கப்பட்டவர்கள் வெளிநாட்டுத் தலைவர்களுக்கு ஆதாரங்களுடன் முறைப்பாடு செய்வது அவசியம் என்று பாதுகாப்பு செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

## வியட்னாம்...

பல்வேறு முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், வியட்நேமில் வர்த்தக வாய்ப்புகளை வழங்கவும் பல உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

## சங்கக்கார...

விசேட அதிதியாக இலங்கை அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார கலந்துகொள்ளவுள்ளனர். சங்கக்காரவின் இந்த விஜயம் யாழ். மாவட்ட கிரிக்கெட் வீரர்களுக்கு பெரும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் சங்காவின் வருகை இரசிகர்கள், விளையாட்டு ஆர்வலர்கள் மத்தியில் ஆர்வத்தை ஏற்படுத்தியிருந்ததை நேற்று அவதானிக்கத்தக்கதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## ஊடகப்...

விவரணப்படத்தை ஒளிப்பரப்பிய மற்றும் மாநாடு குறித்த செய்திகளை சேரிக்கப்பதற்கான ஊடக அனுமதியை பெறுவதில் சிக்கலை எதிர்நோக்கிய பிரித்தானியாவின் சனல் - 4 தொலைக்காட்சியின் ஊடகவியலாளர்களுக்கும் இதே அணுகுமுறை பின்பற்றப்படுமா என்ற கேள்விக்கு அமைச்சர் 'நிச்சயமாக' என்று பதிலளித்தார்.

சுமார் 9 வாரங்கள் இழுத்தடிக்கப்பட்ட பின்னர் சனல் - 4 தொலைக்காட்சியின் ஊடகவியலாளர்களுக்கு கடந்த வாரம் மாநாடு தொடர்பான செய்தி சேகரிக்கும் ஊடக அனுமதி அடையாள அட்டை வழங்கப்பட்டது. மாநாடு பற்றிய செய்திகளை சேகரிக்கும் நோக்கில் அனுமதி அடையாள அட்டைகளை பெற ஊடகவியலாளர்கள் செய்திருந்த விண்ணப்பங்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவினால் ஆராயப்பட்டன.

# இந்திய வீட்டுத்திட்டத்துக்கு கட்டடப் பொருட்கள் இலவசம்

## மாந்தை கிழக்கில் புதிய நடைமுறை

மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் இந்திய வீட்டுத்திட்டத்தில் இணைத்துக்கெள்ளப்பட்ட பயனாளிகளின் நலன் கருதி வீடு கட்டுவதற்குத் தேவையான மணல் மரங்கள் போன்ற மூலப் பொருட்களை இலவசமாக வழங்க முன்வந்துள்ள பிரதேச செயலர் இவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதிப்பத்திரத்தையும் வழங்கி வருகின்றார். இதனால் மணல் மரங்கள் கிடையாமல் வீட்டு வேலையை ஆரம்பிக்க முடியாமல் திண்டாடிய மக்கள் அவசர அவசரமாக வீட்டு வேலையை ஆரம்பித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் இந்திய வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டவுடன் மணல் மரங்கள் போன்றவற்றை இலவசமாகவும் இலகுவாகவும் பெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கெ□ண்ட பிரதேச செயலர் அதற்கான அனுமதிப் பத்திரத்தை வழங்கி வந்தார் .

இதனால் பயனாளிகள் குறிப்பிட்ட ஆற்றிலிருந்து மணலையும் பெற்று வந்ததுடன் காடுகளிலுள்ள பட்ட மரங்களையும் தங்கள் சொந்தக் காணிகளிலுள்ள மரங்களையும் வெட்டி வீட்டுத் தேவைகளுக்குப் பயன்படுத்தி வந்தனர்.

இந்நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கெடுபிடியால் பிரதேச செயலரினால் வழங்கப்பட்டு வந்த அனுமதிப் பத்திரம் உடனடியாக நிறுத்தப்பட்டது . இதனால் பயனாளிகள் வீட்டு வேலைகளை நிறைவு செய்ய முடியாமல் பாதிப்படைந்தனர் .

இந்த நிலையில் மக்களின் நிலை குறித்து உணர்ந்து கெ□ண்ட பிரதேச செயலர் வீடு கட்டுவதற்குத் தேவையான மணல் மரம் போன்ற பெ□ருட்களைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஆதரவுடன் யனாளிகள் பெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார் . இதற்கான அனுமதிப் பத்திரங்கள் பிரதேச செயலரினால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

வீட்டுத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட வன்னி விளாங்குளம் அம்பாள்புரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பயனாளிகள் பாலியாறு கல்லிருப்பு ஆகிய ஆறுகளில் மணல் எடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேபோல் செல்வபுரம் பாண்டியன் குளம் விநாயகபுரம் நட்டாங்கண்டல் சிவபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பயனாளிகள் சீசாட்டிக்குளம் பறங்கியாறு போன்ற இடங்களில் மணல் எடுப் பதற்கு அனுமதி வழங்கியதுடன் வீடுகளுக்குத் தேவையான மரங்களைத் தமது சொந்தக் . காணிகளில் வெட்டுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# குறைந்த செலவில் மின்சார உற்பத்தி

(கொழும்பு)

குறைந்த செலவில் மின் உற்பத்தியை மேற்கொள்வதற்கான துரித நடவடிக்கையை அரசாங்கம் செயற்படுத்தியுள்ளதாக மின்சக்தி மற்றும் மின்வலு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் படி இந்த செயற்றிட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கை மின்சார சபையால் கொழும்பில் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு பேசும் போது பவித்ரா வன்னியாராச்சி இவ்வாறு கூறினார்.

# கல்வித்துறையில் புதிய மாற்றம் மிக விரைவில் அமுலாகும்



(கொழும்பு)

கல்வித்துறையில் புதிய கொள்கை ஒன்று விரைவில் உருவாக்கப்பட்டு எமது நாட்டை புதிய யுகம் ஒன்றுக்கு அழைத்துச் செல்ல விருப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கல்வித்துறைக்கான புதிய முறைமையொன்றை தயாரித்து அதன் ஊடாக புதிய யுகத்தை நோக்கி இட்டுச் செல்வதே அரசாங்கத்தின் நோக்கம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தெரிவிக்கின்றார்.

சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரவின் இலவச கல்விக் கொள்கையை பாதுகாத்து அந்த கொள்கையை அர்த்தமுடையதாக ஆக்குவதற்கு தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்தாபான பகுதியில் நிறுவப்பட்டுள்ள சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரவின் நினைவுத் தூபிக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அன்னாரது உருவச் சிலையை திரைநீக்கம் செய்யும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்

தமக்கு உண்மையான சேவையை வழங்குவது யார் என்பதை மக்கள் புரிந்துகொண்டுள்ளதாகவும் அந்த பிரதிநிதிகளுக்காக முன்நிற்பதற்கு மக்கள் தயாராக உள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

# தொடர் இந்தியா வசம்



இந்திய-அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையிலான ஒருநாள் கிரிக்கெட் தொடரை இந்தியா கைப்பற்றியது.

நேற்று 7 ஆவது ஒரு நாள் போட்டி பெங்களூர் சின்னச்சாமி மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் இழப்பிற்கு 383 ஓட்டங்களை பெற்றிருந்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 45.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 326 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டதால் 57 ஓட்டங்களால் இந்தியா வெற்றி பெற்றது.

# உதவிப் பணக் கொடுப்பனவு


கரைச்சி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மலையாளபுரம் , கிருஸ்ணபுரம். பாரதிபுரம் , விவேகானந்தநகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறும் பொது மக்களுக்கு நடமாடும் சேவையின் மூலம் கொடுப்பனவை வழங்க கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த கிராம மக்கள் 6 கிலோ மீற்றர் தூரம் வந்து கிளிநொச்சி தபாலகத்தின் மூலமே கொடுப்பனவைப் பெற்று வருகின்றார்கள். முதியோர், நோயாளிகள் ,பெண்கள் மிகவும் சிரமத்துடன் கிளிநொச்சி நகரப் பிரதேசத்திற்கு வந்து இக் கொடுப்பனவைப் பெறுகின்றார்கள்.

இவர்களுக்குரிய கொடுப்பனவை மாதத்தில் ஒரு நாள் நடமாடும் சேவையின் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதுபோல பொன்னகர் கிராம மக்களுக்கும் அருகிலுள்ள திருமுறிகண்டி தபாலகம் மூலமாக கொடுப்பனவை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொன்னகர் மக்கள் அருகிலுள்ள உப தபாலகத்தை விடுத்து 8 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கிளிநொச்சி நகரப் பிரதேசத்திற்கு செல்கின்றார்கள்.

14 ஆம் ஆண்டில் நினைவழியா நாள்...





அமரர்

## அற்புதன்

-தினமுரசின் ஸ்தாபகரும் ஆசிரியரும்-

தோழர்-ரமேஷ்

நடராஜா அற்புதராஜா

உதிர்வு:-1999.11.02

முகவரி:-அராலி மத்தி,
வட்டுக்கோட்டை,
யாழ்ப்பாணம்.

14 ஆண்டுகள் பறந்தோடினாலும்
பத்திரமாய் மனங்களில்
வீற்றிருக்கும் ஆசானே!
பத்திரிகை வரலாற்றில்
விந்தைகள் பல புரிந்த
உன் பெயர் மறைந்திடுமோ?
விருப்புடனே நீ வளர்த்தெடுத்த
முரசுதான் உன்னை மறந்திடுமோ?

ஈழ விடுதலைக்காய்
களங்காண திடங்கொண்ட
கூட்டத்தில் ஒருவன் நீ!
திசைமாறி தடம்புரண்ட
விடுதலைப் பயணத்தில்
சரியானவர்களோடு சங்கமமாகி
சதிகாரர்களுக்கு எதிராய்
சன்னதம்கொண்டவன் நீ!

மக்களின் முரசாய்
திகழ்ந்த தினமுரசில்
உன் பேனா செய்த
வித்தைகள் எத்தனை எத்தனை!

முரசம் எனும் மகுடமிட்டு
நீ வரைந்த ஆசிரியர் தலையங்கம் கண்டு
வியக்காத தமிழ் பேராளர்
தானுண்டோ!

நாரதராகி நார்நாராய் நீ கிழித்த
அரசியல் சூழ்ச்சிகளை எண்ணி
நடுங்காதார் தானுண்டோ!

ரசிகனாய் நீ மாறிய
இலக்கிய நயம் தனிலே
அள்ளி வந்த கிளுகிளுப்புக்களை
இரசிக்காத இள நெஞ்சம்தானுண்டோ!

அதிரடி ஐயாத்துரை.
காதிலை பூ கந்தசாமி
என நாமங்கள் பல பூண்டு
தமிழுக்கும் தமிழர்க்கும்
வஞ்சம் நினைப்போரை
பண்ணிய நக்கல் நய்யாண்டி கண்டு
வாய்விட்டுச் சிரியாதார் தானுண்டோ!.

இத்தனை வித்தைகளையும்
உன் சிந்தையில் கொண்டவனே
உன் நினைவை எம்மனதில் தானருத்தி
பணி தொட முயற்சிக்கின்றோம்.

பக்க பலமாய் நின்றெமக்கு
தக்க வழிகாட்டுங்கள் ஆசானே!

தினமுரசு -குடும்பத்தினர்-

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 நவம்பர் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.